

ராணி
முத்து
ஆர்.மணிமாலா
ரூ.6
உனது விழியில்
எனது பயணம்



# சென்னைப் பல்கலைக்கழக சாதனை

*150*-வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய சென்னைப் பல்கலைக்கழகம் பல சாதனைகளைப் படைத்துள்ளது.

இந்திய ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களில் 5 பேர் இந்தப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் என்பது பெருமைக்குரியது. அவர்கள், ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி, சஞ்சீவ் ரெட்டி, ஆர்.வெங்கட்ராமன், அப்துல் கலாம் ஆகியோர் ஆவார்கள்.

**நோபல் பரிசு**

இதேபோல் இங்கு படித்தவர்களான விஞ்ஞானிகள் சி.வி.ராமன், சந்திரசேகர் ஆகியோருக்கு நோபல் பரிசு கிடைத்தது.





# உனது விழியில் எனது பயணம்

## ஆர். மணிமலா



1

**சு**ருட்டி வைத்த பாயைப் போல் நின்றிருந்த வாழையிலை, அடுத்த நாள் விரிவதற்காக காத்திருந்தது. அணில் கடித்துப் போட்ட மாம்பழங்கள் சிதறிக்கிடந்தன.

துர்கா போனில் பேசிய கணவரையே ஆவலாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்படியே ஆகட்டுமுங்க. எல்லா ஏற்பாடையும் பண்ணிடுறேன். ரொம்ப சந்தோசம்... நன்றிங்க... வச்சிடட்டுமா?" ரிசீவரை வைத்த அன்புச்செழியனின் முகம்

மகிழ்ச்சியில் மினுமினுத்தது.

"என்னங்க சொன்னார் தரகர்?"

"நம்ம மானசாவை நாளைக்கு பெண் பார்க்க வர்றாங்களாம். எனக்கென்னவோ இந்த இடம் தகைஞ்சிடும்னு தோணுது!"

"ஒவ்வொருமுறையும் நாம இப்படித்தான் நம்புறோம். ஆனா, இங்கே வந்து பெரிசா பட்டியல் போட்டு கையிலே திணிச்சிடுறாங்க. கண்ணுக்கு லட்சணமா, மனசுக்கு நிறைவானப் பொண்ணு. தங்கம்போல குணம். இந்தத் தகுதியெல்லாம் உயர்வாத் தெரியலியே_!" ஆதங்கம் வெடித்தது அவளது பேச்சில்.

"அந்தமாதிரி இல்லையாம் இவங்க. நம்ம விருப்பம்போல செஞ்சுக்கலாம்னு சொல்லிட்டாங்களாம்."

"நல்லபடி முடிஞ்சா நல்லதுங்க. மானசாவுக்கு 'போன்' பண்ணி நாளைக்கு லீவு போட்டுட்டு வரச்சொல்லிடுங்க."

"அதுவும் சரிதான்" என்றவர் ரிசீவரைத் தொட... அது அலறியது எடுத்தார்.

"யாருங்க?"

"இரு... பேசினாத்தானே தெரியும்?" என்றவர், "அலோ..." என்றார்.

"அன்பு இருக்காரா?" என்றது ஒரு ஆண்குரல்.

"அன்புதான் பேசுறேன்!"

"அப்ப பாசம் எப்ப பேசும்?" என்று கேட்டு சிரித்தபடி வைக்கப்பட்டது எதிர்முனை.

"யாரு?"

"வழக்கமா போன் பண்ணுவானே - பாழாப்போன கடங்காரன், அவனேதான்! பாசம் எப்ப பேசும்னு கேக்கறான்."

"தினத்துக்கும் அவனோடு இதே தொல்லையா போச்சே? போலீசில் புகார் குடுத்தா என்ன?"

"வேணாம் துர்கா. இது கண்டிப்பா எனக்குத் தெரிஞ்சவங்க பண்ணுற வேலை. சினிமா பாணியிலே கிண்டல் பண்ணுறான். என் தோற்றம்... மற்றவர்களை கிண்டல் பண்ண வைக்குது...



விட்டுத்தள்ளு!" என்றவர், மானசாவின் அலுவலக எண்ணுக்கு தொடர்புகொண்டார்.

இணைப்பு கிடைப்பதற்குள் அவரைப்பற்றி சின்ன அறிமுகம்.

அன்புச்செழியன் அறுபதைத் தொட்டவர், ஓவியர். நிரந்தர வருமானம் இல்லாத தொழில். மனைவி துர்கா_ அநேக நோய்களுக்கு சொந்தக்காரி.

நான்கு பெண்கள். ஆண்பிள்ளைக்கு ஆசைப்பட்டு அடுத்தடுத்து பெற்றுவிட்டாள். கடைசிப் பெண்தான் மானசா. இருபத்தி எட்டு வயதாகிறது தனியார் நிறுவனத்தில் வேலை. பதினைந்தாயிரம் சம்பளம். பெரியவள் திலகா, அடுத்தவள் கிருத்திகா, மூன்றாமவள் லலிதா.

அன்புசெழியனின் வருமானம் வீட்டு வாடகைக்கும், வயிற்றுப்பாட்டுக்கும், மனைவியின் மருத்துவ செலவுக்குமே இழுத்துப் பிடித்தது. மூத்தப் பெண் திலகா குடும்பத்தை கவனித்துக்கொள்ள_ மற்றவர்களை படாதபாடுபட்டு படிக்க வைத்தார். பெரியவள் திலகாவின் திருமணத்தை அடுத்த பெண் கிருத்திகா வேலைக்குப் போய் சம்பாதித்த பணத்தில் முடித்தார். மாப்பிள்ளைக்கு விருதுநகரில் மளிகைக்கடையில் வேலை.

வீட்டின் நிலவரம் புரிந்த கிருத்திகா, வேற்று மத வாலிபனோடு ஓடிப்போய்விட்டாள். வீட்டினரோடு தொடர்பு இல்லை. இப்போது இரண்டு குழந்தைகளோடு நாகர்கோவிலில் வசிப்பதாக கேள்வி.

லலிதாவின் வருமானத்தை வங்கியில் பத்திரப்படுத்தி, சேலத்தில் பாத்திரக்கடை வைத்து பெரிய குடும்பத்தை பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருந்த சேகருக்கு கல்யாணம் செய்துக் கொடுத்துவிட்டார். கூட்டுக் குடும்பம். அந்த வீட்டு மருமகள்களில் வசதி குறைவானவள் லலிதாதான்! வீட்டு வேலைகள் பலவும் அவள் தலையில்தான். ஓய்வின்றி

உழைத்ததால், வயிற்றில் குழந்தை தங்காமல் அடிக்கடி கருக்கலைந்து பலவீனமாகிவிட்டாள்.

எல்லாப் பெண்களும் வெளியூரில் ஐக்கியமாகிவிட.

மானசாவையாவது உள்ளூரிலேயே கட்டிக்கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டனர்.

மானசாவின் இருப்பு என்று எதுவும் பிரமாதமாய் இல்லை. துர்காவுக்கு குடல்வால் நோய். ஆபரேஷனுக்கு பாதி செலவழிக்க... மீதியில் ஒரு பத்து பவுன் சேர்த்திருப்பாள். அவ்வளவுதான்.

துர்காவிடம் மாற்றமுடியாத குணம் உண்டு! "அரசாங்க மருத்துவமனைகளில் தரப்படும் சிகிச்சை மோசமானது. நான் அங்கே போனால் உயிரோடு திரும்பமாட்டேன்" என்று பிடிவாதமாய் மறுத்து, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து– எல்லோருக்கும் செலவு வைத்தாள். வீட்டு நிலைமையை கணவரும், பெண்களும் புரிந்துகொண்ட அளவுக்கு துர்கா புரிந்துகொள்ளவில்லை.

மானசாவிற்கு திருமணம் முடிவானால் இருக்கிற பத்துப் பவுனும், கல்யாண செலவுக்காக போட்டு வைத்திருக்கிற அம்பதாயிரம் ரூபாய் சீட்டும் மட்டும்தான்!

எளிமையாய் கோவிலில் வைத்துக் கல்யாணம். நகை– சீர்செனத்தி. ஆயுசு முழுக்க வேலைக்குப் போய் சம்பாதித்து தரப்போகும் மானசாவின் சம்பளம். இதற்கேற்ற– இதற்கெல்லாம் ஒத்துப்போகிற வரனைத்தான் தேடிக்கொண்டிருந்தார், அன்புச்செழியன்.

தொலைபேசியில் வந்தாள், மானசா.

"அலோ..."

"மானசா நான்தாம்மா அப்பா பேசுறேன்."

"சொல்லுங்கப்பா... என்ன திடீர்னு?"

"எல்லாம் நல்ல விஷயம்தாம்மா... நாளைக்கு நீ லீவு போடணும்!"

"எதுக்குப்பா?"

"ஒரு நல்ல இடம் அமைஞ்சிருக்கு, மானசா. நாளைக்கு சாயந்திரம் வர்றாங்க..."



"லீவெல்லாம் போட முடியாதுப்பா. இந்த மாசமே... இதே காரணத்துக்காக ரெண்டுமுறை லீவு போட்டாச்சுப்பா. ஆபீசில் வேலை அதிகமா இருக்கு!"

"அம்மாடி... என்ன பேசுறே நீ? நல்ல இடம்– கண்டிப்பா தகைஞ்சிடும். எதையாவது சொல்விட்டு வரப் பாரும்மா!"

"சரிப்பா... முழுநாள் லீவு போட முடியாது. 'பர்மிஷன்' போட்டுட்டு கொஞ்ச நேரம் வர்றேன்!"

"சரிம்மா!"

போனை வைத்த மானசா, கம்ப்யூட்டரை அணைத்தாள். மனசுக்குள் வியப்பாய் இருந்தது.

நாளை அவளை பெண் பார்க்க வருகிறார்கள். கேட்டதும் ஒரு வெட்கம், படபடப்பு... ஊகூம்... உள்ளுக்குள் எந்த பட்டாம்பூச்சியும் பறக்கவில்லை. அதெல்லாம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே பறந்து முடிந்துவிட்டன.

ஒவ்வொருமுறையும் வெட்கத்தையும் எதிர்பார்ப்பையும், கனவையும் சுமந்து... இவன்தான் என் முதல் எழுத்துக்கு சொந்தக்காரனோ என்று கற்பனை சிறகுகளைப் பறக்கவிட்டு– கடைசியில் இவர்களின் பணப் பற்றாக்குறையும், அவர்களின் 'பட்ஜெட்'டும் ஒத்துவராமலே போக– மானசா இப்போதெல்லாம் தன் திருமணத்தைப் பற்றியே சிந்திப்பதில்லை.

ஆனால், இதோ மறுபடியும் நாளைக்கு கூத்துக் கட்ட வேண்டிய சூழல்.

"என்ன மானு... ஆழ்ந்த சிந்தனை?"

அவளுடன் வேலை பார்க்கும் சக ஊழியை மேகலா வந்து தோளைத் தட்டினாள். இன்னொரு கையில் மதியச் சாப்பாடு.

"அப்பா 'போன்' பண்ணினார்!"

"நாளைக்கு லீவுப் போடப் போறேன்னு சொல்றே!"

"ஏய்... எப்படி?"

"அடிக்கடி நடக்கிற விஷயம்தானே? நாளைக்கு பொண்ணுப் பார்க்க வர்றாங்களா?"

"ம்… உனக்குக்கூட கிண்டலாப் போயிடுச்சில்லே?"

மேசையைத் திறந்து தன் உணவுப் பொட்டலத்தை எடுத்தாள், மானசா.

"சேச்சே! ஒரு உண்மையைச் சொல்லட்டுமா, மானசா? உன்னைப் பார்த்தாலே எனக்கு பொறாமையா இருக்கும்."

"……?"

"பளீர்னு எத்தனை அழகுத் தெரியுமா நீ? அழகு நிலையத்துக்கு போகவேண்டிய அவசியமே இல்லாத அழகி! நிறம், உயரம், சிரிப்பு, நீளமானக் கூந்தல்னு அம்மன் சிலை மாதிரி அம்சமா இருக்கிறே! ஆனா, ஒவ்வொரு இடமும் தட்டிக் கழிஞ்சுக்கிட்டே போகுதுன்னு ரொம்ப வருத்தப்படுறேன். ஆனா… என் உள்மனசு சொல்லுது மானசா… கண்டிப்பா இந்த இடம் முடியும் பாரேன்!"

"சரி… வா! சாப்பிடப் போகலாம்" என்றாள் மானசா, எந்த உணர்ச்சியுமின்றி!

மேகலா அவள் மனதைப் புரிந்தவளாய்… புன்னகைத்தபடி சாப்பிடும் அறை நோக்கி அவளுடன் சென்றாள்.

## 2

மாம்பலம் ரெயில் நிலையம் நோக்கி நடந்தாள், மானசா. பிற்பகலுக்கே உரிய மந்தம் விரவிக் கிடந்தது.

அலுவலகம் தி.நகரில். வீடு சேத்துப்பட்டில்! தினசரி மின்சார ரெயில் பயணம்!

ஒரு பெண் கூடை நிறைய மல்லிகைப் பந்தை வைத்துக் கொண்டு, "மூணு மொழம் பத்து ரூவா" என்று கூவிக் கொண்டிருந்தாள்.

சட்டென இருபது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினாள்.

"ஆறு முழம் கொடுங்க!"



பூவை வாங்கி பத்திரப்படுத்தியவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

இதுவரை பெண் பார்க்கும் வைபவத்திற்கென்று அவளாக ஆர்வம் கொண்டு பூ வாங்கியதில்லை. எப்படி அலங்கரித்துக்கொண்டு நின்றாலும்… ஒரே பதில்தான்!

ஆனால், இன்று என்னவோ… மனசுக்குள் சில்லென்று காற்றடித்ததை உணர்ந்தாள். ஒருவேளை அப்பாவும், மேகலாவும் நம்பிக்கையாய் சொன்னதாலா?

இருக்கலாம்!

ஆனாலும்… வீட்டு சூழல் தந்த ஏமாற்றத்தையும் மீறி, அவளுள் ஏக்கம் உருவாகி இருந்ததைக் கண்டுக்கொண்டாள்.

ரெயில் நிலையம் நோக்கி வேகமாக நடந்தவள், 'சட்'கென நின்றாள்… திகைத்தாள்.

ஒரு பெரிய நகைக்கடை வாசலில் அழகிய பெண்ணுடன் நின்றிருந்தவன்… சந்துருதானே?

'ஆம்… அவனேதான்! அந்தப் பெண் யார்? மனைவியாய் இருப்பாளோ? அப்படித்தான் தெரிகிறது. நெற்றி வகிட்டில் குங்குமம், தங்கத்தில் தாலிச்சரடு, காலில் மெட்டி, உரிமையாய் அவன் கரம்பற்றி உள்ளே சென்ற லாவகம்!'

மானசா நடையை வேகப்படுத்தினாள்.

'எப்போது ரெயில் நிலையம் வந்தாள்? எப்போது ரெயில் வந்தது? எப்படி அதில் ஏறி அமர்ந்தாள்?'

எதுவும் தெரியாது.

படபடப்பும், சந்துரு ஏற்படுத்திய தாக்கமும் இன்னமும் மிச்சமிருந்தன– அவளின் சின்ன இதயத்தில்!

பார்த்தால்… சமீபத்தில் திருமணமானது மாதிரி இருக்கிறது. அந்தப் பெண் முகத்தில் தெரிந்த பளபளப்பும், பூரிப்பும் புதிதான தாம்பத்திய வாழ்க்கை தரும் அழகல்லவா? மேகலாக்கூட திருமணமான புதிதில் அப்படித்தானே இருந்தாள்? சந்துருகூட அன்று பார்த்த அதே தோற்றம்தான்!

திருமணமான பெரும்பாலான ஆண்கள் கன்ன உப்பலோடு, லேசாய் மேடிட்ட தொந்தியோடு, எல்லாப் பெண்களையும் கண்களால் அளக்கும் விஷமப் பார்வையோடு என்று தேறி இருப்பார்கள். மனைவியின் சமையலை இப்போதுதான் சாப்பிடத் தொடங்கி இருக்கிறான் போலும். ஏன் இத்தனைத் தாமதம்? ஏழு ஆண்டுகளுக்கு முன்பே பெண் பார்த்தாரே? அவருக்கான அதிகப்படியான தகுதிகளுக்கு பெண்ணா கிடைக்காது?

பிறகேன்?

என்னாலா?

அந்தக் கேள்விக்கு பதில் தெரியாமல் உள்ளம் விம்மியது.

பக்கத்து இருக்கையில் யாரோ எழ, வேறு யாரோ வந்தமர்ந்தார்கள்.

எட்டு ஆண்டுகள் இருக்கும் அல்லவா? அவனை முதன் முதலாக சந்தித்து!

ம்.. இருக்கும்!

பிளஸ்-2 படித்து முடித்ததுமே மானசாவைத் தனக்குத் தெரிந்தவரின் உதவியோடு ஒரு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்த்துவிட்டார், அன்புச்செழியன்.

பணிபுரிந்துகொண்டே எல்லாவற்றையும் தபாலில் படித்தாள். மகா புத்திசாலி. அவளுடைய இருபது வயதுக்குள் மூன்று அலுவலகம் மாறிவிட்டாள். மூன்றாவதாக பணிபுரிந்த அலுவலகத்தின் உயர் அதிகாரிதான் சந்துரு!

திறமையான, அழகான, நல்ல இளைஞன்.

பெரியம்மா தவிர வேறெந்த சொந்த பந்தமும் இல்லாதவன். தன்னை அன்பாய் கவனித்துக்கொள்ளும் பெண்ணை மனைவியாய் தேடியபோது- கருணையும், அழகும் குடிகொண்ட மானசாதான் கண்களை நிறைத்து, இதயத்தை வருடினாள்.

அந்தஸ்து பேதம்பற்றி அவன் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

நாசூக்காய் தன் மனதை அவளிடம் வெளிப்படுத்தினான்.



சற்று திகைத்தாலும், மறுக்கவோ ஏற்கவோ இயலாமல், "வீட்டில் பெரியவர்களிடம் பேசுங்கள்" என்றாள்.

அந்த பதில் அவள் மீது இன்னும் மரியாதையையும், நேசத்தையும் அதிகரிக்கச் செய்ய- பெரியம்மாவை துணைக்கு அழைத்துக்கொண்டு, ஒரு நல்ல நாளில் மானசாவின் வீட்டிற்கு வந்தான்.

தன் சாதியில்லாத சந்துருவுக்கு பெண் தர மறுத்தனர், பெற்றோர்.

மானசாவின் மனதில் பூக்கலாமா... வேண்டாமா? என்று முளைவிட்ட நேசம் அப்போதே முறிந்துபோனது. அந்த சம்பவத்திற்கு பிறகு, மானசாவின் கட்டுப்பாடான சுதந்திரப் போக்கை அறிந்த சந்துரு... அதுபற்றிப் பேசி தொந்தரவு செய்யவில்லை. அவளாலும் அங்கு இயல்பாய இருக்க முடியவில்லை. சரியாய் அந்த நேரத்தில் வேறொரு அலுவலகத்தில் கூடுதல் சம்பளத்தோடு வேலை கிடைக்க தாவிவிட்டாள், மானசா.

அவளுக்கும் திருமணத்தைப் பற்றிய கனவு இருந்தது.

'கண்ணுக்கு பாந்தமானத் தோற்றம். நல்ல வேலை. என் பெற்றோரை தன் பெற்றோராய் நினைக்கும் பரந்த உள்ளம். அப்படிப்பட்ட இளைஞன் கணவனாய் வரவேண்டும்' என்று ஆசைப்பட்டாள்.

காதலாய், கனிவாய் ஒரு வார்த்தைக்கூட பேசிக் கொண்டதில்லை. என்றாலும், சந்துரு ஏற்படுத்திய தாக்கம் இதயத்தில் மையம் கொண்டிருந்தது.

அவனைப் பற்றிய நினைவை அகற்ற... கற்பனையாய் ஒரு உருவம் அமைத்து கனவுகளில் சஞ்சரித்தாள்.

சினிமாவில், கதைகளில் தேனிலவு காட்சிகள் வரும்போது, மானசாவின் கற்பனை சிறகுகட்டி பறக்கும்.. பனிப்பிரதேசத்தில் தன் தேனிலவு நடக்க வேண்டுமென்று! அதொன்றும் அவள் 'பட்ஜெட்'டிற்கு எட்டாதக் கனியல்ல. அவள் தோழிகளின் தேனிலவு கதைகளைக் கேட்டதும் அவளது ஆசை அதிகமானது.

திலகா அக்காவின் பிரசவம், அம்மாவின் 'ஆபரேஷன்', பிறசெலவுகள் என்று மானசாவின் சம்பளமெல்லாம் கற்பூரமாகக் கரைய.. சேமிக்கவே சிரமமாக இருந்தது. அவளின் தனிப்பட்ட தகுதிகளுக்கு பொருத்தமான வரன் வந்தும் ஒதுக்கித்தள்ள வேண்டியதாகிவிட்டது.

கடைக்குட்டியாய்ப் பிறந்த ஒரே காரணத்துக்காக அவள் ஏகப்பட்ட சுமைகளைச் சுமக்கவேண்டியது இருந்தது.

அலுவலகத்தில் மேகலாவைப் போல் இன்னொரு நெருங்கிய தோழியும் இருந்தாள். பெயர் சுமலதா. அவளது உடையில் மட்டுமல்ல... பேச்சிலும் நாகரீகம் வெளிப்படும். மனதில் இருப்பதை கூச்சமின்றி போட்டுடைப்பாள்... தன் அந்தரங்க விஷயம் உட்பட!

"என்ன சுமி... உதட்டில் காயம்? கீழே விழுந்து அடிப்பட்டுடுச்சா என்ன?"

எதார்த்தமாய்தான் கேட்டாள். முகம் சிவக்க– விஷமத்தோடு பதில் தருவாள், சுமலதா.

"கீழே விழுறதா? சவுந்தர் பண்ணின வேலை இது?"

"சவுந்..." சட்டென புரிய வாயை மூடிக்கொள்வாள்.

"சவுந்தர் ரொம்ப மோசம், மானு! தூங்கவே விடமாட்டேங்கிறான். என்கிட்டே அவனுக்கு ரொம்பப் பிடிச்சதே உதடுதானாம். தூங்கறப்ப அதிகாலை மூணு மணியாயிடுச்சி. என்னதான் சொல்லு... காதல் கல்யாணத்துல தனி இன்பம் இருக்கு. அதுவும் தனிக்குடித்தனம் வேறயா? சொல்லவே வேணாம்! சவுந்தருக்கு என்னை மாதிரி பெண் பிள்ளைதான் வேணுமாம். எனக்கு அவனை மாதிரி ஆண்பிள்ளை வேணும்னேன்."

"ஏய்.. சொல்லவே இல்லை..."

"என்ன சொல்லலை?" புரியாமல் பார்ப்பாள்.

"நீ கர்ப்பமா இருக்கிறதை!"

"கர்ப்பமா? இப்பவா? வாய்ப்பே இல்லை."

"——!"

"நானும், சவுந்தரும் சேர்ந்து எடுத்த முடிவு இது? கல்யாணமாகி



ஒரு ஆண்டுதானே ஆகுது? இன்னும் ரெண்டு, மூணு ஆண்டு போனப் பிறகுதான்.. குழந்தைக் குட்டி எல்லாம்!"

"........!"

"ஆனா, உனக்கு கல்யாணமாச்சுன்னா உடனே குழந்தை பெத்துக்க! தள்ளிப் போடாதே மானு!"

"என்ன் சொல்றே?"

"இப்பவே உனக்கு இருபத்தியேழு வயசு. இதுக்கப்புறம் கல்யாணமாகி குழந்தைப் பெத்துக்கிறதுன்னா கஷ்டம். சிக்கலாகிடும். எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை. இப்ப இருபத்திரெண்டு வயசுதான் ஆகுது."

இப்படியெல்லாம் பேசினால் மானசாவின் மனசு சங்கடப் படுமே என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல் படபடவென பேசுவதுதான் அவள் இயல்பு.

இரவில் எளிதில் உறக்கம் வராது. அன்றைக்கு நடந்த சம்பவங்கள் எல்லாம் கண்முன் அணிவகுத்து வரும்.

ஆண் ஸ்பரிசம் என்றாள் என்னவென்று அறிந்திராத மானசாவிற்கு– முகம் தெரியாத ஆணின் கரமொன்று அவள் மேனியில் ஊர்ந்து கோலம் போடுவதுப்போல் கற்பனை சகட்டுமேனிக்கு வாட்டியெடுக்கும். அந்த வயதுக்கே உரிய ஏக்கம் அவளை வதைக்கும்.

இப்போதெல்லாம் அப்படிப்பட்ட கற்பனைகளை ஓரம்கட்டி வைத்திருந்தாள்! அந்த அளவிற்கு மனசு மரத்துப் போயிருந்தது.

ஆனாலும், எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய பயம் உள்மனசுக்குள் ஊர்ந்துகொண்டே இருந்தது.

'அம்மா– அப்பா காலத்திற்கு பிறகு எனக்கென்று ஒரு துணை அவசியமல்லவா? உண்மையிலேயே சுமலதா சொன்னதுபோல் எனக்கு வயதாகிவிட்டதா? இதற்கு மேலும் தள்ளிப்போட்டால் குழந்தைப் பெறுவதில் சிக்கலாகிவிடுமா? சிக்கல் என்றால் ஊனமாகப் பிறக்குமாமே! இல்லாவிட்டால் மூளை வளர்ச்சி குறைந்து.. அய்யோ.. அதற்கு கல்யாணமே

பண்ணிக்கொள்ளாமல் இருந்துவிடலாமே!'

"அம்மா... அங்காளபரமேஸ்வரி... என் திருமண விஷயமாய் உன்னிடம் முதல் முதலாய் கோரிக்கை வைக்கிறேன். கல்யாணம் பற்றிய கனவுகள் போய், பயம்தான் விஞ்சி நிற்கிறது. என் குடும்ப சூழ்நிலையும், வாழும் சூழ்நிலையும் வேறு. கடைசிவரை தனித்து வாழ்ந்துவிட முடியும் என்ற தைரியமெல்லாம் கிடையாது. உன்னை நாடி வந்திருக்கிறேன். என் வாழ்க்கையை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன்!" என்று கோவிலுக்குச் சென்று வேண்டிக்கொண்டாள்.




**கா**ல்களைக் கழுவிக்கொண்டு வீட்டிற்குள் நுழையும் போதே... நெய்யில் பால்கேசரி உருகும் மணம் மூக்கைத் துளைத்தது. வீட்டின் சுத்தமும், சமையல் வாசமும் ஒரு இனியப் பொழுதின் அச்சாரமாக மனதை மகிழ்வித்தன.

ஆளரவம் கேட்டு சமையலறையில் இருந்து வந்த துர்கா, "வந்துட்டியா மானு.. கொஞ்சம் முன்னமே வந்திருக்கலாமே...? உதிரிமல்லி வாங்கி இருக்கேன்... அதை கட்டணும்... நேரம் ஓடுது.. அட... மானு என்ன அது கையிலே... பூவா?"

"ஆமாம்மா.. வரும்போதே வாங்கி வந்துட்டேன்!"

"பரவாயில்லையே" என்று மகளைப் பார்த்து ஆச்சரியப் பட்டவள், "எனக்கென்னமோ இந்த இடம் முடிவாயிடும்னுதான் தோணுது" என்றாள், மகிழ்ச்சியாய்.

கண்களாலேயே 'எப்படி?' என்பதுப்போல் கேட்டாள், மகள்.

"என்னைக்கும் இல்லாத அதிசயமா... நீயே பூவோடு வந்து நின்னே பாரு! இதுக்கு முன்னாடி பட்டும்படாம நடந்துப்ப..."

"நான் சமையல்ல உதவி பண்ணவா?"

"வேணாம் மானு... இன்னும் பதினைஞ்சு நிமிடத்துல



முடிச்சிடுவேன். வெயில்ல போயிட்டு வர்றதால முகம் சோர்ந்துப் போயிருக்கு. கடலைமாவும், கஸ்தூரி மஞ்சளும் கலந்துப் போட்டுக்கிட்டு படு! அப்புறம் பாரு.. ரோஜா மாதிரி பளபளக்கும் முகம்!"

சிரித்தபடி நகர்ந்தவள், அம்மா சொன்னது போலவே கடலை மாவை பாலில் கலந்து– முகத்தில் போட்டுக் கொண்டாள்.

'மேகலாவைப் போல அம்மாவும் அவ்வளவு நம்பிக்கையாய் சொல்கிறாளே! இந்த இடம் முடிவாகிடுமா? வரப்போகிறவர் பேர்கூட என்னன்னு கேட்டுக்கலையே.. என்னப் பேராக இருக்கும்?'

நான்காவது முறையாய் வேறு உடையணிந்து– ஆள் உயர கண்ணாடிமுன் நின்று இப்படியும் அப்படியுமாய் சரிபார்த்தான், நகுலன்.

கறுப்புநிற ஜீன்ஸ் பேண்ட், சந்தன நிறத்தில் மெல்லிய கறுப்புகோடு போட்ட சட்டையை பேண்ட்டுக்குள் விட்டு 'இன்' பண்ணினான்.

திருப்தியாய் இருந்தது.

"அம்மா தயாரா?" வெளியில் வந்தான்.

"ம்.."

வராந்தா ஊஞ்சலில் அமர்ந்திருந்த அம்மா வேததாயகியைப் பார்த்து முகம் மாறினான்.

"என்னம்மா இது?"

"என்ன?"

"என்ன சேலை உடுத்தி இருக்கே? காஞ்சி பருத்திச் சேலையும், வெள்ளை ரவிக்கையுமா?"

"ஏன், இதுக்கென்ன?"

"ஏம்மா இப்படி பண்ணுறே? சாதாரணமா கோவிலுக்குப் போனாக்கூட பட்டுக் கட்டிக்கிட்டுப் போவே? இப்ப எனக்கு பொண்ணுப் பார்க்கப் போறோம். ரொம்ப சாதாரணமா உடுத்தி இருக்கீங்க? நாம உடுத்தற உடையிலேயும், தோற்றத்திலேயும்

தான் நம்ம உள்மனசு வெளிப்படும்."

"போற இடமும் சாதாரணமானதுதானே? அதுக்கு இதுபோதும்!" –முகத்தில் சிறு மகிழ்ச்சிக்கூட இல்லை.

"அம்மா– பொண்ணு பார்க்கப்போறது உன் பிள்ளைக்கு!"

"என் விருப்பப்படியா எல்லாம் நடக்குது? என்ன இல்லே நம்மக்கிட்டே? உன் பேர்ல மட்டும் சொந்தமா ரெண்டு வீடு. வேளச்சேரி வீட்டை வாடகை விட்டதுல மட்டும் மாசம் பதினைஞ்சாயிரம் வருது. நீயும் நல்லாப் படிச்சிருக்கே. இருபத்தைஞ்சாயிரம் சம்பளம் வாங்குறே. உன் ஒரே தங்கச்சியையும் அப்பா இல்லாத குறை தெரியாம எழுபத்தைஞ்சு பவுனும், கையிலே பத்து லட்சம் சீர்வரிசை, பைக்குனு நிறைவா செஞ்சு கல்யாணம் பண்ணிக் கொடுத்தே! அப்படிப்பட்ட உனக்கு நான் எவ்ளோ வசதியான வீட்டிலேருந்து பொண்ணுப் பார்க்கணும்? நீ என்னடான்னா... தரகர் காண்பிச்ச சாதாரண வரனை... 'கட்டினா இவளைதான் கட்டுவேன்' என்கிற மாதிரி முடிவுப் பண்ணிட்டே? நம்ம தகுதிக்கு கொஞ்சம்கூட ஒத்துவராத இடம். ஒரு படம் வரையற சாதாரண ஆள்... என் சம்பந்தியா? போதாதுக்கு அவங்ககிட்டே எதையும் கேட்கக்கூடாதுன்னு வாயிலே 'பிளாஸ்திரி' போடாதக் குறையா கட்டளையும் போட்டுட்டே... இந்த வீட்டுக்கு வரப்போகிற ஒரே மருமகளை... பஞ்சப்பராரி குடும்பத்திலேருந்தா தேர்வு செய்யணும்?"

நகுலன் சிலகணங்கள் அம்மாவை தீர்க்கமாய்ப் பார்த்தான்.

"அம்மா... பிளீஸ்... திரும்பவும் சொல்றேன்! பொண்ணு வீட்ல அதைப் போடு, இதைப் போடுன்னு கேட்கக்கூடாது. என் பேச்சை மீறி நீ நடந்துக்கிட்டா... இந்த பெண் பார்க்கும் படலம் இதுதான் முதலும், கடைசியும்னு நெனச்சிக்க. இந்த குடும்பத்தை கட்டிக் காப்பாத்த ஒரு பொண்ணை தேர்வு செய்யறோம். அவ வாழ்ந்த உலகத்தைவிட்டு நமக்கே நமக்குன்னு நம் பொறுப்புகளை சுமக்க வர்றவகிட்டே கூடுதலா எந்த சுமையும் வேண்டாம்மா. அவ கொண்டுவர்ற தங்கத்தாலேயும், வெள்ளியாலேயும் நம்ம வீடு நிறைய வேணாம்.



அவ மனநிறைவோடு உன்னையும், நம்ம வீட்டையும் தாங்கிக்கிட்டாலே போதும்மா–!"

"........!"

"நான் அவளைப்பத்தி நல்லா விசாரிச்சுகிட்டுதாம்மா இந்த முடிவை எடுத்தேன். நான் அவளைத் தேர்வு செய்ததுல கொஞ்சம் சுயநலமும் இருக்கு. இந்தக் காலத்துப் பொண்ணுங்க படுவேகம். நாகரீக மாற்றங்களுக்கேற்ப உடையிலே மட்டுமில்லே– மனசளவிலேயும் சுருங்கிட்டாங்க. விட்டுக்கொடுத்து அனுசரணையா போகணும்னு எதிர்பார்க்கவே முடியாது. ஆனா, இவ அப்படியில்லேம்மா! நல்லப்பொண்ணு... பொறுமைசாலி!"

"இதையே எத்தனைமுறை சொல்லுவே? இந்த வீட்ல உன் நாட்டாமைதானே?"

"எல்லாம் உனக்காகதாம்மா! சரி– இந்தச் சேலையை மாத்திட்டு பட்டுச்சேலை கட்டிக்கோயேன்– எனக்காக பிளீஸ்ம்மா!"

"என்னவோ போ... எனக்கு எதுவும் பிடிக்கலே" என்றபடி உடை மாற்ற அறைக்குள் போனாள், வேதநாயகி.

நகுலன் அந்த ஊஞ்சலில் அமர்ந்தான்! வலிய அவளின் முகத்தை மனக்கண்களில் பதியவைத்தான்.

மானசா!

பெயரைப் போலவே ஆளும் அவ்வளவு அழகு! நகுலன் அவளை முதலில் தரகர் கொண்டுவந்த புகைப்படத்தில்தான் பார்த்தான். அப்போதுகூட அவளைப்பற்றி அவன் பெரிதாய் நினைக்கவில்லை. ஆனால், அன்றொருநாள் எதேச்சையாக அங்காளபரமேஸ்வரி கோவிலுக்குச் சென்றபோதுதான் அவளைப் பார்த்தான்.

நிடுநிடுவென்ற போதுமான உயரத்தோடு– அழகும், கண்ணியமும் கலந்த பாவனையில்– பளபளத்த முகத்தோடு, நல்ல நிறத்தில்... பாம்பாய் நீண்டிருந்த கருங்கூந்தலில் மல்லிகைச்சரம் சூடி... சேலையை நேர்த்தியாய் உடுத்தி– கைகூப்பியபடி அம்மனை நோக்கி பரவசமாய் நின்றிருந்தவளைப்

பார்த்ததும்... 'இவளை எங்கோ பார்த்திருக்கிறோமே?' என்று தோன்றியது.

அவன் யோசித்து... யோசித்து குழம்பிக்கொண்டிருக்கும் போதுதான் அவளுடன் வந்தத் தோழி, "மானசா... அங்கே லட்டு பிரசாதம் விக்குறாங்க... வாங்கலாமா?" என்று அழைத்தாள்.

மானசா!

சட்டென நினைவு வந்தது.

தரகர் போனவாரம் கொண்டுவந்துக் கொடுத்த பெண்ணின் பெயரும் மானசாதான். முகமும் அதே! ஒரு சிலரைப் பார்த்ததுமே... அவர்களின் பூர்வீகம் முழுதும் அறிந்துகொண்டதைப் போல் மனசு எடை போட்டுவிடும். மானசாவின் செயல்பாடுகள் அவனை வெகுவாய்க் கவர– அவள் அறியாமல் பின்தொடர்ந்துச் சென்றதோடு– குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தான்.

எல்லாமே அவன் எதிர்பார்த்ததுப் போலவே இருந்தன.

மிக சாதாரண குடும்பம். பணப் பற்றாக்குறையினால் தள்ளிப்போகும் மானசாவின் திருமணம். அடக்கமானப் பெண். நோய்வாய்ப்பட்ட அம்மா! இப்படிப்பட்ட பெண்ணால்தான்... மாமியாரின் உடல் பலகீனத்தை உணர்ந்து தாங்க முடியும்.

அப்போதே முடிவு பண்ணிவிட்டான், நகுலன். 'மானசாதான் என் மனைவி' என்று!

இதை எதையும் அவன் தன் அம்மாவிடம் சொல்லவில்லை. தரகர் மூலமாக பார்த்து முடிவு செய்ததுப் போலவே காண்பித்துக்கொண்டான்.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே வேதநாயகி இந்த வரன் வேண்டவே வேண்டாம் என்று ஒத்தைக்காலில் நின்றாள்.

நகுலனோ பிடிவாதமாகவும், உறுதியாகவும் இருந்ததில் வேதநாயகி ஒத்தைக்காலை கீழே போடவேண்டியதாகி விட்டது.

வேதநாயகி பச்சை நிறத்தில் சிவப்பு கரை போட்ட பட்டுச்சேலையும், சிவப்பு ரவிக்கையுமாக அறைக்குள்ளிருந்து





வெளிப்பட்டாள்.

"இது போதுமா? இல்லே... 'மேக்கப்', 'லிப்ஸ்டிக்'கெல்லாம் போட்டுக்கிட்டு வரவா?" என்றாள், சிரிப்பற்ற கிண்டலுடன்.

நகுலன் புன்னகைத்தான்.

"இப்ப என் மேல உனக்கு கோபம் இருக்கலாம். ஆனா, ஒரு நாள் மனசு நிறைஞ்சு என்கிட்ட நன்றி சொல்லுவீங்க... கிளம்பலாமா?"

வேதநாயகி பதில் சொல்லாமல் மகன் பின்னே சென்றாள்.

**டா**க்சியிலிருந்து இறங்கினர், இருவரும். பழமையைத் தாங்கி நின்ற சின்னவீடு! எந்தவித நாகரீகப் பூச்சுமின்றி... பச்சைவர்ணமிட்ட இரட்டை கதவு. வலதுப்பக்கம் திண்ணை. இடதுப்பக்கம் முருங்கைமரம். கொத்து கொத்தாய் பூத்து... சடை சடையாய் தொங்கிக்கொண்டிருந்தன பிஞ்சுகள்.

அணிலொன்று லாவகமாய் பூக்களைக் கடித்துப் போட்டுக் கொண்டிருந்தது.

அன்புச்செழியனும், துர்காவும் வாசலுக்கு வந்து கைகூப்பி வரவேற்றனர்.

"வாங்கம்மா... வாங்க... உள்ளே வாங்க!"

எதிர்– அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து சில தலைகள் ஆர்வமாய்– அவசரமாய் எட்டிப் பார்த்தன.




"**எ**ன்ன நகுல் இது... வீடு ரொம்பச் சின்னதா இருக்கு?" மகன் காதில் கிசுகிசுத்தாள் வேதா.

"நாம ஒண்ணும் வீட்டை விலை பேச வரலே. தவிர, இது அவங்களுக்கு சொந்த வீடும் இல்லை. வந்த வேலையைக் கவனிப்போம்மா..." என்றான், மெல்லிய குரலில்.

"என்னங்க... குறைஞ்சது ஏழெட்டுப் பேராவது வருவாங்கன்னு



நினைச்சேன். ரெண்டே பேர் வந்திருக்காங்க!"

மெதுவாகதான் சொன்னாள், துர்கா. ஆனால், வேதா காதில் விழுந்துவிட்டது.

"எங்களுக்கு சொந்தபந்தம் நிறையவே இருக்காங்க. ஒரு பொண்ணு... ரத்னான்னு பேரு. திருச்செந்தூர்ல கட்டிக் கொடுத்திருக்கோம். ரொம்ப வசதியான இடம். நாங்களும் குறை வைக்கலே. தரகர் சொன்னார். கஷ்டப்படுற குடும்பம்னு. அதான் எதுக்கு கும்பலை சேர்த்து சிரமம் வைப்பானேன்னு– ரெண்டு பேர் மட்டும் கிளம்பி வந்தோம்."

"அம்மா..." சங்கடப்பட்டான், நகுலன்.

"என் தங்கை... இப்ப உண்டாகி இருக்கா. பயணம் கூடாதுன்னு டாக்டர் சொன்னதால... வரவழைக்கலே. முக்கியமா எனக்கு இந்தமாதிரி சடங்குல... பொண்ணை அலங்கரிச்சு பலபேர் முன்னிலையிலே நிக்கவைக்கிறதுல உடன்பாடில்லை. பெத்தவங்க மட்டுமே தீர்மானிச்சால் போதும்னு நினைக்கிறேன். உறவுக்காரங்களை கல்யாணத்துக்கு கூப்பிட்டுக்கலாம்" என்றான், நகுலன் தெளிவாக.

அவன் பேசிய பாங்கு மானசாவின் பெற்றோரை மிகவும் கவர்ந்தது.

"சரி... நேரமாகுது உங்கப் பொண்ணை வரச்சொல்லலாமே!" என்றாள் வேதா.

"இதோம்மா... துர்கா போய் அழைச்சிட்டு வா!"

அறைக்குள் இருந்த மானசாவுக்கு ஹாலில் பேசிய அத்தனையும் காதில் விழுந்தது. முகம் பார்க்காமலே அவன் மீது பெரிய மரியாதை உண்டானது.

துர்கா காப்பி கோப்பைகள் அடங்கிய தட்டை கையில் கொடுத்து மகளை அழைத்து வந்தாள்.

நகுலன் பிரமித்துப்போனான்.

வேதாகூட கொஞ்சம் அசந்துதான் போனாள்.

'பரவாயில்லை... 'போட்டோ'வில் பார்த்ததைவிடவும் நேரில்

இன்னும் அழகாக இருக்கிறாள்.'

'அன்று கோவிலில் எளிமையான அழகில் ஜொலித்தவள், இன்று மைசூர்பட்டுடுத்தி, கண்களுக்கு மெலிதாய் மையிட்டு, தலைநிறைய பூச்சூடி மயக்குகிறாளே!' நகுலன் காப்பி கோப்பையை எடுத்தபோது... ஏறிட்டு நோக்கிய மானசாவைப் பார்த்து... மெல்லிய புன்னகையைப் படரவிட்டான்.

வியர்த்துப்போனாள். உள்ளுக்குள் திடீரென எங்கிருந்தோ ஆயிரக்கணக்கான பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன.

சம்பிரதாய பேச்சுகள் நடந்தன.

மானசாவிற்கும் அவனை ரொம்பவே பிடித்துவிட்டது.

"தரகர் எல்லாம் சொல்லி இருப்பாரே... உங்க விருப்பப்படி செய்யுங்க... நாங்க எதையும் எதிர்பார்க்கலே!" கணீரென்று... எரிச்சலை மறைத்துப் பேசினாள், வேதா.

"சொன்னாரும்மா... ரொம்ப நன்றிங்க!"

"ஆனா... கல்யாணத்தை மட்டும் விமரிசையாப் பண்ணிடுங்க!" திடீரென குண்டை தூக்கிப் போட்டாள்.

நகுலனே எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அன்புச்செழியன் ஏற்கெனவே அந்த முடிவில்தான் இருந்தார்.

'நல்ல இடம். மானசா நிறைவாக வாழ்க்கை நடத்துவாள். கடன் வாங்கியாவது திருமணத்தை நல்லவிதமாய் நடத்திவிட வேண்டும்' என்று நகுலனுக்கு சின்ன உறுத்தல் மட்டும் நெருடிக்கொண்டிருந்தது. அதை எப்படிச் சொல்வது என்று திணறினான்.

அவன் எதிர்பார்த்த அத்தனை அம்சங்களும் மானசாவிடம் இருந்தன, ஒரு விஷயத்தைத் தவிர! அவன் குடும்பத்திற்கு வேலைக்குச் செல்லும் பெண் சரிப்பட்டு வரமாட்டாள். இவளோ வேலைக்குச் சென்று சம்பாதிப்பவள். தன் குடும்பத்தை தூணாய் தாங்கியவள். திருமணத்திற்கு பிறகும் தாங்க வேண்டும் என்று நினைப்பாள். அதில் தவறொன்றும் இல்லை.

ஆனால், அவன் எதிர்பார்த்த முதல் தகுதியே... வீட்டோடு



இருந்து குடும்பத்தை நிர்வகிப்பதுதான். வேறு வழியில்லை... இந்த நேரத்தில் சொன்னால்தான் ஆலோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வருவார்கள். தரகரிடம் முன்பே சொல்லி தெரியப்படுத்தி இருந்தால்... முதல் வேலையாக வேண்டாம் என்று மறுப்பாள். இப்போது நகுலனைப் பற்றி ஒரு நல்ல அபிப்ராயம் அவள் மனதில் வேரூன்றி இருக்கும். உடனே மறுக்கத் தோன்றாமல் யோசித்து முடிவெடுக்கலாம். அது சாதகமாகவும் இருக்கலாம்.

நகுலன் தன்னை தயார்படுத்திக்கொண்டான்.

"அப்புறம்... ஒரு முக்கியமான விஷயம்!" என்றான்.

"சொல்லுங்க" என்றார், அன்புச்செழியன்.

அறைக்குள் இருந்த மானசாவின் செவிகள் அவன் சொல்லப் போகும் விஷயத்தை கூர்ந்து கவனித்தன.

"உங்க பொண்ணு கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போகக்கூடாதுங்கிறது எங்களோட வேண்டுகோள்!"

அன்புச்செழியனும், துர்காவும் மட்டுமல்ல... மானசாவும் இந்த வேண்டுகோளை எதிர்பார்க்கவில்லை.

'அதெப்படி? அது இயலாத காரியம் அல்லவா?' மானசாவின் மகிழ்ச்சிப் பொங்கிய பாலில்– தண்ணீர் ஊற்றி மட்டுப்படுத்தியது போலிருந்தது.

"த...தரகர் இதைப் பத்தி ஒ...ஒண்ணுமே சொல்லலியே?" தயங்கியபடி கேட்டார், அன்புச்செழியன்.

"அதைத்தான் இப்பச் சொல்லிட்டோமே! இதோ பாருங்க எங்க குடும்பம் வசதியானது. போதாதுக்கு என் பிள்ளை கைநிறைய சம்பாதிக்கிறான். வீட்டுக்கு வரப்போகிற மருமகளோட சம்பாத்தியத்துல குடும்பம் நடத்தவேண்டிய அவசியமே இல்லை. எங்க வீட்டுக்கு வர்ற மருமகள் யாரா இருந்தாலும் போன ஜென்மத்துல புண்ணியம் பண்ணியிருக்கணும்!" என்றாள் வேதா 'நறுக்'குத் தெரிந்தாற்போல்.

"அம்மா... நான் பேசிக்கிறேன்... ஒண்ணும் அவசரமில்லை சார்! நல்லா ஆலோசனைப் பண்ணிட்டு பதில் சொன்னால் போதும்" என்றான் நகுலன், மெல்லியப் புன்னகையுடன்.

"பத்துப் பேருக்கு சமைச்சு வச்சேன். வந்ததோ ரெண்டே பேர். எவ்ளோ வீணாப்போச்சு. இத்தனை பேர்தான் வருவோம்னு முன்னாடியே சொன்னால் என்ன? பைநிறைய பணத்தை எடுத்துட்டுப் போய் கைநிறைய சாமான் வாங்கிட்டு வர்ற காலம், இது. வசதியானவங்களுக்குத் தெரியுமா நம்ம மாதிரி ஆளுங்களோட கஷ்டம்? அக்கம் பக்கத்து வீடுகள்ல இந்தப் பலகாரங்களை கொடுத்துட்டு வர்றேன்."

"அல்பம் மாதிரி பேசாதே துர்கா! உன் வேலையை மட்டும் பாரு!"

"அதுசரி!" என்றாள், ஏளனமாய்.

மானசா யோசனையுடன் அமர்ந்திருந்தாள். அலங்காரங்களைக் கலைத்துவிட்டு, இரவு உடைக்கு மாறினாள்.

"சாப்பிடலையா மானசா?"

"பசிக்கலேப்பா!"

அதற்குள் துர்காவும் வந்துவிட்டாள்.

"என்ன பசிக்கலே? அதையே நினைச்சிட்டிருக்காதே... இது இல்லைன்னா இன்னொரு இடம் வராமலா போகும்?"

"பைத்தியக்காரி... பைத்தியக்காரி... அறிவில்லே உனக்கு? என்னப் பேசணும்னு தெரியாது? அம்பத்தஞ்சு வயசாச்சு. எப்பதான் புத்திவரும்?" கோபமாய் கத்தினார்.

"இப்ப நான் என்ன தப்பாப் பேசிட்டேன்னு கத்துறீங்க?"

"பின்னே... இது இல்லேன்னா இன்னொரு இடம்ங்கிறே? இதைவிடவும் அருமையான இடம் வாய்க்குமா?"

"அவங்கதான் மானசாவை வேலைக்கே போகக் கூடாதுங்கிறாங்களே...!"

"நல்லதுதானே... மானசா இந்தக் குடும்பத்துக்காக பன்னிரண்டு வருடமா ஓடிக்கிட்டே இருக்கா! கடவுளாப் பார்த்து மானசாவுக்கு மகாராணியாட்டம் வாழக்கூடிய வீட்டை காட்டி இருக்கார். பொண்ணுக்கு இதைப் போடுங்க... இத்தனை பவுன்தாங்க... கையிலே இவ்வளவு ரொக்கம்



தந்துடுங்க... முக்கியமா பொண்ணு வேலைக்குப் போகணும்னு நிபந்தனைகள் போடுற இந்தக் காலத்துல... எதுவும் வேண்டாம்... பொண்ணு சம்பாதிக்கணும்ங்கற அவசியம் இல்லைன்னு சொல்ற மனசு எத்தனைப் பேருக்கு இருக்கு? இதுல யோசிக்க எதுவுமே இல்லை. நம்ம சம்மதத்தை சொல்லிடலாம்."

"இல்லேப்பா... அவசரப்படாதீங்க" இடைமறித்தாள், மானசா.

"ஏம்மா?"

"சில விஷயங்களை நாம ஆழமா யோசிக்கணும். உணர்ச்சிப் பூர்வா முடிவெடுக்கக்கூடாது."

"என்னம்மா சொல்றே?"

"என்னை வேலைக்குப் போகவேண்டாம்னு சொல்றதெல்லாம் நல்ல விஷயம்தான். ஆனா, அது எனக்கோ, நம்ம குடும்பத்துக்கோ ஒத்துவராதே!"

"ஏன் ஒத்துவராது?"

"அப்பா... ஒரு நல்ல சம்பந்தம் அமைஞ்சிடுச்சுன்னு தலைகால் புரியலே, உங்களுக்கு. அவங்க கல்யாணத்தை விமரிசையா செய்யணும்னு சொல்லிட்டாங்க. கையிலே ஐம்பதாயிரம் வச்சுக்கிட்டு என்னப் பண்ண முடியும், உங்களால? கடன் வாங்கித்தான் செய்யணும்!"

"ஆமாம்மா... கடன் வாங்கித்தானே ஆகணும்?"

"அந்தப் பணத்துக்கு ஆபீசில் கடன் போட்டு வாங்கிடுவேன். ஆனா, அதை திருப்பித்தர நான் வேலைக்கு போய்த்தானே ஆகணும்?"

"என்ன மானசாப் பேசுறே? உங்க அப்பாவை அவ்வளவு கேவலமாகவா எடை போட்டுட்டே?"

"அ...ப்...பா!"

"நீ ஏம்மா கடன் வாங்கணும்? எனக்கு வாங்கத் தெரியாதா? அதை அடைக்கத்தான் தெரியாதா? என் உடம்புல தெம்பு இன்னும் வத்திப்போகலே."

"நான் சொல்றதை ஏம்ப்பா புரிஞ்சிக்கமாட்டேங்கிறீங்க? உங்களுக்கு வயசாயிடுச்சுப்பா... அரசாங்கமே ஓய்வுக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைக்கிற நேரம். இப்பப் போய்.. என் கல்யாண கடனுக்காக காலம் முழுக்க ஓயாம உழைக்கணுமா? அப்படி உங்களைக் கஷ்டப்படுத்தி எனக்கு இந்த கல்யாணம் அவசியமா?"

"அம்மாடி மானசா... என்னை மிருகம்னா நினைச்சே? பெத்துக்க தெரிஞ்சவனுக்கு கரையேத்தத் தெரியாதா? நாயும், பூனையும் ஆறேழு குட்டிகளைப் பெத்து.. தன் பத்திய சாப்பாட்டுக்காக தான் பெத்த குட்டியையே சாப்பிடுமாமே.. அந்த மாதிரி நினைச்சியா என்னை? எங்க சுயநலத்துக்காக உன் வாழ்க்கையை விழுங்கச் சொல்றியா? போம்மா... மேலும் மேலும் பேசி அப்பா மனசை உடைச்சிடாதேம்மா! நகுலன்தான் மாப்பிள்ளை.. அதில் எந்த மாற்றமும் இல்லை!" என்றார், ஆணித்தரமாக!

மானசா திகைப்புடன் பார்த்தாள்.




உறக்கம் பிடிக்காமல் புரண்டுக்கொண்டிருந்தவளை இருதினம் முன்பு பவுர்ணமியை கொண்டாடிவிட்டு சோர்ந்து போயிருந்த தேய்பிறை நிலா ஆச்சரியமாய்ப் பார்த்தது.

அப்பாவின் கூற்று நியாயமாய் பட்டாலும். பாசமான நெஞ்சம் மறுத்து மருகியது.

'எப்படி முடியும்? குறைந்தது இரண்டு லட்சமாவது கடன் வாங்கவேண்டும். அந்தக் கடனை எத்தனை ஆண்டு சுமப்பார்? என்னப் பண்ணுவது? அந்த நகுலனிடமே இதைப்பற்றி பேசிப் பார்த்தால் என்ன?

அவளை மேலும் யோசிக்க விடாமல் ஹாலில் இருந்து அம்மாவின் குரல் கேட்டது.



"நீங்க பாட்டுக்கு ஈஸியா சொல்லிட்டீங்க. உங்களால கடன் வாங்கி திருப்பித் தரமுடியுமா? நீங்க சம்பாதிக்கிற சம்பாத்தியம் என் ஆஸ்பத்திரி செலவுக்கே காணாதே!"

"கொஞ்சம் உன்னையும் மாத்திக்க, துர்கா. இன்னைக்கு மானசாவைப் பார்த்தேயில்லே? ஆசைப்பட்டு அவளே பூவாங்கி வந்தா. அம்மன் சிலையாட்டம் அலங்காரம் பண்ணி நின்னப்ப அவ மனசுல எவ்வளவு ஆசையும், ஏக்கமும் இருக்குதுன்னு புரிஞ்சுக்கிட்டேன். இருபத்தெட்டு வயசாயிடுச்சு, துர்கா இந்த வயசுல நீ நாலு குழந்தைகளுக்கும் தாயாகிட்டே! பாவம்டி அவ! உழைச்சே ஓடாத் தேயறா. அவளை இன்னமும் வாடவிட நான் தயாரா இல்லே!"

"___"

"நான் விளம்பரப் படங்கள் வரையறது தவிர.. எனக்குத் தெரிஞ்ச, தெரியாத எல்லா வேலையும் செய்யப்போறேன். நீ மனசு வச்சா மாசம் ஆயிரம் ரூபா சேமிக்கலாம்."

"எப்படி?"

"உன் நோய்களுக்கு அரசாங்கம் இலவசமா பரிசோதனையும் பண்ணி, மருந்து-மாத்திரைகளும் தர்றாங்க. நீ கவுரவம் பார்க்காம அரசு ஆஸ்பத்திரிக்கு போய்வரப் பழகணும்."

"___"

"மானசாவோட வாழ்க்கை நல்லா இருக்கணும்ங்கறதைத் தவிர வேற எந்த நினைப்பும் நமக்கு வந்துடக்கூடாது" இன்னும் ஏதேதோ திட்டங்களை அடுக்கிக்கொண்டே போனார் அன்புச்செழியன்.

நெஞ்சை அடைப்பதுபோல் அழுகை குமுறிக்கொண்டு வந்தது, மானசாவுக்கு.

மேகலா மானசாவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சரி.. அதுக்காக?"

"நகுலனைப் பார்த்துப் பேசலாம்னு இருக்கேன்."

"பேசி..?"

என்னை வேலைக்குப் போக அனுமதிக்கணும்னு கேட்பேன். சம்மதிக்கலேன்னா..."

"இந்த சம்பந்தமே வேண்டாம்னு சொல்லப் போறியாக்கும்? முட்டாளா நீ? என்னையெல்லாம் என் புருஷன் வீட்டோட இருந்து குடும்பத்தைப் பார்த்துக்கன்னு சொல்லமாட்டாங்களான்னு தவிக்கிறேன், மானசா. அதிகாலையிலே எழுந்து சமைச்சு, கணவன், பிள்ளைங்களை தயார்பண்ணி அனுப்பி... அரக்க, பரக்க ரெயில்பிடிச்சு ஆபீஸ் வந்து... மறுபடி சாயந்திரம் அதே இயந்திரத்தனமா வேலை செய்து. வேண்டாம்டி மானசா! நீயாவது குடும்ப வாழ்க்கையை சுகமாக அனுபவித்து வாழு! நகுலன்தான் உனக்கு ஏத்தவர். உண்மையைச் சொல்லப்போனா - நீ புண்ணியம் பண்ணியிருக்கணும்."

"எல்லாம் சரி... ஆனா, எங்க அம்மா - அப்பா?"

"அது அவங்க கடமை, மானசா. ஊர்ல உள்ள நடுத்தரக் குடும்பத்துபெத்தவங்கசெய்யற அதே கடமையைத்தான் உன்னைப் பெத்தவங்களும் செய்யறாங்க. உங்க அப்பா தெளிவாத்தான் இருக்கார். உங்க அம்மாதான் கஷ்டப்படாம வாழணும்னு ஆசைப்படுறாங்க. வாழ்க்கையைப் பத்தி நீ பயப்படுற அளவுக்குகூட அவங்க பயப்படலே. அவங்களைப் பத்தி யோசிக்கிறே... கவலைப்படுறே... உங்க அம்மா உன்னை நினைச்சு கவலைப்படலையே?"

"அப்படியெல்லாமில்லே மேகலா! பெத்தத்தாய்க்கு கவலையில்லாம இருக்குமா?"

"ஊகூம்... இன்னும் கொஞ்சம் பொறுப்பு வரணும். எப்ப வர்றது? சந்தர்ப்பத்தை நாமதான் தரணும்."

"பாவம் மேகலா. பரீட்சை வச்சு அவங்களுக்கு பொறுப்பு வரவைக்கிற அளவுக்கு உடல்நிலை ஆரோக்கியமானவங்களா அம்மா? உடல் தொல்லைகள் நிறைய! இந்தளவுக்கு அம்மாவைப்பத்தி பேசறதெல்லாம் நம்மளை மாதிரி நடுத்தர குடும்பத்துலதான் இல்லையா, மேகலா? வசதியானவங்களைப் பாரு. பெரியவங்க நிம்மதியா காலை நீட்டி சாப்பிடுறாங்க



எங்கள்ல யாராவது ஒருத்தி ஆண்பிள்ளையாப் பிறந்திருந்தா - அப்பா இந்த வயசிலேயும் கடுமையா உழைக்கிறதை தடுத்திருக்கலாமே! மானசாவின் கவலை மேலும் அதிகரித்துக் கொண்டேதான் போனது.

அப்போது 'இன்டர்காம்' அழைத்தது. எடுத்து "அலோ" என்றாள், மானசா.

"மேடம்... உங்களைப் பார்க்க நகுலன்னு ஒருத்தர் வந்திருக்கிறார். வரவேற்பறையில் காத்திருக்கிறார்" என்றாள், வரவேற்பு பெண்.

"நகுலனா? என்றாள், ஆச்சர்யமாய்.

"இதோ வர்றேன்" என்று ரிசீவரை வைத்தாள்.

"என்ன மானசா?" ஆர்வமாய் கேட்டாள், மேகலா.

"நகுலன் வந்திருக்காராம்."

"வாவ்... சார் ரொம்பத்தான் வேகமா இருக்கார். நானும்கூட வர்றேன். தூர இருந்தே பார்க்கிறேன்."

இருவரும் கேபினைவிட்டு வெளியில் வந்தனர். வரவேற்பறை சோபாவில் அமர்ந்திருந்த நகுலன் வசீகரமாயிருந்தான். வரவேற்பாளினி அவனை ஓரக்கண்ணால் பார்த்து 'சைட்' அடித்துக்கொண்டிருந்தாள்.

"ஏய்... மானசா...! எத்தனை அம்சமாய் இருக்கிறார், நகுலன். இப்படிப்பட்டவரைப் பார்த்தபின்பும் எப்படி உனக்கு குழப்பம் வரலாம்? விட்டுடாதே... பிடி! வாழ்த்துக்கள்." அவள் தோளில் தட்டிக்கொடுத்துவிட்டு கேபினை நோக்கி நடந்தாள், மேகலா.

மானசாவின் கால்களில் இருந்த சக்தி எல்லாம் திடீரென காணாமல்போயின. உள்ளம் படபடத்தது. நாக்கில் நீர் வறண்டுவிட்டது.

நெருங்கிவந்தவளை கண்டதும் புன்னகையில் முகம் மலர எழுந்து நின்று கைகூப்பினான்.

"வணக்கம் மானசா!"

முதன்முதலாய் அவள் பெயரை அவன் உச்சரித்தபோதுதான்

அந்த பெயருக்கு அதிக உயிர்ப்பும், அழகும் இருப்பதாகப்பட்டது.

"வ...வணக்கம்!"

"தொந்தரவு பண்ணிட்டேனோ?"

"அ... அதெல்லாமில்லை!"

"சில விஷயங்கள் பேசணும். அதற்குத் தோதான இடம் இதில்லை. பக்கத்திலே ஒரு 'காபி ஷாப்' இருக்கிறது. கொஞ்சம் வரமுடியுமா, பிளீஸ்..."

அவளே அவனிடம் பேசவேண்டும் என்று நினைத்தவள் தானே? அவனே தேடி வந்துவிட்டான். மணி பிற்பகல் நான்கைத் தாண்டிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அலுவலக நேரமும் முடியப்போகிறது.

"இதோ வந்துட்டேன்!"

உள்ளேபோய் சற்றுநேரத்தில் திரும்பிவிட்டாள்.

"வாங்க, போகலாம்!"

அவனோடு இணையாக நடக்கையில் அந்தப் பிரதேசம் முழுக்கவே பனிக்காற்றை சுமந்திருப்பது போலிருந்தது.

'காபி ஷாப்'பின் நுனிநாக்கில் சரளமாய் புரளவிட்ட ஆங்கிலத்துடன் நிறைய ஜோடிகள் அமர்ந்திருந்தனர். நகுலன் சுவரோரமாய் இருந்த மேசை முன் அமர்ந்தான்.

"என்ன சாப்பிடுறீங்க மானசா? பீட்ஸா, கட்லெட், பப்ஸ்?"

"காப்பி மட்டும்!"

"இனிப்பாவது?"

"சரி."

'ஆர்டர்' பண்ணிவிட்டு அவளை ஏறிட்டான்.

"உங்ககிட்ட நிறையப் பேசணும், மானசா. நேத்து வீட்ல பேசணும்னு நினைச்சேன். அதை எங்க அம்மா விரும்ப மாட்டாங்க. உங்க வீட்லயும் அப்படி எண்ணம் இருக்கலாம். எதுக்கு பெரியவங்களை சங்கடப்படுத்திக்கிட்டு? அதான் ஆபீசுக்கே வந்துட்டேன்."

"......?"



"எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சுப்போச்சு, மானசா. இது உங்களை நான் மூணாவது முறையா சந்திக்கிறேன். ஆனா பல காலம் பேசிப் பழகினமாதிரி உள் உணர்வு?"

"மூணாவது முறையா? நேத்துதான் பார்த்துக்கிட்டோம். அடுத்து இன்னைக்கு!"

"கணக்குல பலகீனமா இருப்பான் போலன்னு மனசுக்குள்ள சிரிச்சிங்கதானே? அதுதான் இல்லே... நான் உங்களை இதுக்கு முன்னாடி ஒருமுறை அங்காளம்மன் கோவில்ல பார்த்திருக்கேன்!"

"கோவில்லயா?" வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம் மானசா! பார்த்ததும் ஆச்சரியப்பட்டேன். அதுக்கு முன்னால புகைப்படம், ஜாதகமெல்லாம் தரகர் மூலமா வந்தாச்சு. அடையாளம் கண்டு உங்களை தெரிஞ்சுக்கிட்டேன். உங்களோட அமைதியும், அடக்கமும் என்னைக் கவர்ந்தன. அக்கம்பக்கத்திலே விசாரிச்சப்ப... நான் என் வாழ்க்கைத் துணைகிட்டே எதிர்பார்க்கும் அத்தனைத் தகுதியும் உங்களிடம் இருப்பதை தெரிஞ்சுக்கிட்டேன். நீங்கதான் என் மனைவின்னு எப்பவோ முடிவும் பண்ணிட்டேன்!"

அவன் பேசப்பேச பரவசமானாள். ஆனாலும், தன் பக்கத்து பிரச்சினையை சொல்லும்போது அந்த முடிவும் மாறுமில்லையா?

"நீங்க சொல்றதெல்லாம் ஆச்சரியமா இருக்கு. ஆனா, என் பக்கம் சில பிரச்சினை இருக்கு. அதை ஒரு கோரிக்கையா நீங்க எடுத்துக்கணும். உண்மையைச் சொல்லப்போனா... நானே இது விஷயமா உங்கக்கிட்டே பேசணும்னு நினைச்சிருந்தேன்!"

"நீங்க என்ன சொல்லப்போறீங்கன்னு எனக்குத் தெரியும், மானசா!" சிரிப்பு மாறாமல் பார்த்தான்.

"தெரியுமா? என்ன?"

"நீங்க வேலைக்குப் போகணும்னுதானே?"

"கடவுளே... எப்படி உங்களுக்கு...?"

"உங்க குடும்பச்சூழல்... குடும்பத்துக்கான உங்க பங்களிப்பு...

வருமானம்... இன்னும் சில விஷயங்களும் தெரியும்."

"___?"

"உங்கள் சூழ்நிலையில் உள்ள பெண் யாரா இருந்தாலும் கேட்க நினைக்கிற கோரிக்கைதான, இது! ஆனா – இதுக்கு பதில் சொல்றதுக்கு முன்னாடி என் குடும்ப சூழ்நிலையைப்பத்தியும் நான் சொல்லணும்..."




"**அ**ம்மான்னா எனக்கு தெய்வம். உயிர் அது இதுன்னு எல்லாரும் சொல்வாங்க. எனக்கு இதையெல்லாம் விடவும் மேலே! நான் தலையெடுக்கிறதுக்கு முன்னாலேயே அப்பா இறந்துவிட்டார். வெளி உலகமே தெரியாது, அம்மாவுக்கு. நல்லவேளை, சொந்தமா ரெண்டு வீடு இருந்ததால தப்பிச்சோம். வீட்டை வாடகைக்குவிட்டு–அந்த வருமானத்திலே என்னையும், என் தங்கை ரத்னாவையும் நல்லா வளர்த்தாங்க. அப்பாவோட இழப்பு அம்மாவை ரொம்ப பாதிச்சிட்டுது.

நாளாக ஆக அந்தப்பாதிப்பு, உடல்நிலை மாற்றங்களில் தெரிய ஆரம்பிச்சது. கடந்த நாலு வருடமா அம்மாவுக்கு வலிப்பு நோய் இருக்கு. எந்த நேரத்துல எந்த சூழ்நிலையில அவங்களுக்கு வலிப்பு வரும்னுசொல்ல முடியல. தங்கைக்கு கல்யாணம் பண்ணி அனுப்பி மூணு வருடமாகுது. நான் அலுவலகம்போய் வருபவன். ரெண்டு, மூணுதடவை அம்மா வலிப்பு வந்து ரொம்ப நேரமா அப்படியே கிடந்து– நான் வீடு திரும்பும்போதுதான் பார்க்க நேர்ந்தது. ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கேன். சில நேரம் சமையலறையில் விழுந்து வலிப்பு வந்து, அரிவாள்மனையில் கால்பட்டு... பத்து தையல் போட்டிருக்கோம்!"

"கடவுளே! அப்படிப்பட்ட நோயாளி பக்கத்தில் யாராவது இருந்தே ஆகணுமே! வேலைக்கு ஒரு ஆள்



போட்டுக்கலாமே?"

"அதையும் செய்தேன், மானசா. சில நேரங்களில் குளித்துக் கொண்டிருக்கும்போது வலிப்பு வந்து விடுவதுண்டு. அம்மா சங்கடப்படுவதுண்டு. பிள்ளையாய் இருந்தாலும் தோளுக்கு மிஞ்சி வளர்ந்த ஆண் அல்லவா? முப்பந்தைந்து வயது பெண்ணை அம்மாவை கவனித்துக்கொள்ள நியமித்தேன்.

என் அம்மாவிடம் சின்னக்குறையுண்டு. வெளி ஆட்களை வீட்டில்நடமாடவிடுவதுபிடிக்காது. அந்தப்பெண்மணிஇப்படியும், அப்படியும் நடந்தால் சந்தேகத்தோடு– பின்தொடர்வார்கள். இல்லாவிட்டால் அம்மா ஹாலில் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பார்கள். தன்னை சந்தேகப்படுவது தெரிந்து, அவள் பாதியிலேயே வேலையைவிட்டு நின்றுவிட்டாள். அதற்குப்பிறகும் நான்கைந்துபேர் மாறிமாறி வந்து போய்விட்டார்கள். சிலருக்கு அம்மாவின் சந்தேகப்புத்தி பிடிப்பதில்லை. சிலருக்கு நிஜமாகவே திருட்டுப்புத்தி! கடைசியில் இப்போது ஒரு பெண்மணியை நியமித்திருக்கிறேன். இது எத்தனை நாளைக்கோ?"

"........?"

"என் தங்கை ரத்னா மூன்று ஆண்டு கழித்து இப்போதுதான் கர்ப்பமாகி இருக்கிறாள். உடல்நிலையும் பலகீனமாகி இருப்பதால்... அவளை முழுஓய்வில் இருக்கும்படி டாக்டர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவளின் மாமியாரும் கடந்த ஆண்டு தவறிவிட்டதால், அவளுக்கு உதவ யாருமில்லை. அதனால் அவளை விரைவில் பூ முடித்து இங்கே அழைத்துவிடலாம் என்றிருக்கிறோம்."

"........?"

அவளையும், என் அம்மாவையும் தாய்மாதிரி கவனித்துக் கொள்ள என் வீட்டுக்கு ஒரு நல்ல மருமகள் வேண்டும். உங்களைப் பார்த்தும் எனக்கு பெரிய பாரம் குறைந்ததுபோல் உணர்வு! இந்த காலத்தில் படித்தப் பெண்களுக்கும், சகிப்புத்தன்மை கிடையாது. ஆனால், நீங்கள் குடும்பச் சுமையை தாங்கியவர்கள். பொறுமைசாலி. நோய்வாய்ப்பட்ட அம்மாவைக்

கவனித்துக்கொண்ட அனுபவமும் உங்களுக்கு இருக்கும். நான் நினைப்பது சரிதானே, மானசா?"

"எ-எல்லாமே சரிதான்! உங்கள் எதிர்பார்ப்பு என்னைப்பற்றி அறிந்தது எல்லாம் சரிதான். ஆனால், என் பெற்றோரை என் பொருட்டு கடனாளியாக்கிவிட்டு வருவதில் மனசு கூசுகிறது. அப்பாவுக்கு வயதாகிவிட்டது. சில நேரங்களில் மிக உயரத்தில் விளம்பர படங்கள் வரையும்போது… எங்கள் அடிவயிறு கலங்கும். என் திருமணத்திற்காக அவர் கடன்பட்டு, அதை அடைக்க இன்னும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுவார். உங்கள் தரப்பில் எந்தத் தவறும் சொல்ல முடியாது ஏனென்றால், மன விசாலத்துடன் நீங்கள் நடந்துகொண்டீர்கள்.

வெளிப்படையாக சொல்வதென்றால், எனக்காக என் அப்பா கடன்படுவதில் எனக்கு விருப்பமில்லை. அம்மாவும் நோயாளி. அதனால் என் திருமணத்திற்கு நான்தான் ஆபீசில் 'லோன்' போட்டு வாங்க இருக்கிறேன். அதைத் திருப்பி செலுத்தணும். அதுக்காகவாவது நான் வேலைக்குப் போயாகவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன்!" என்றாள், சங்கடத்துடன்.

சற்று நேரம் அவளையே குறுகுறுவெனப் பார்த்தான், நகுலன்.

கேரட் அல்வாவை சாப்பிட்டு முடித்தவன், கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டு தண்ணீர் குடித்தான்.

"உங்களிடம் நான் இரண்டு தடவை மன்னிப்பு கேட்க வேண்டும் மானசா! மன்னிப்பீர்களா?"

"மன்னிப்பா? அதுவும் ரெண்டு மன்னிப்பா?" புரியவில்லை! மானசாவின் புருவங்கள் குழப்பத்தில் நெளிந்தன.

"ஒன்று– உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படுவதற்கு."

மானசாவின் மனசு உடனடியாக வாடிப்போனது.

"இரண்டாவது–"

"—"

"உங்கள் அனுமதியின்றி உங்க வீட்டினருக்கு உதவி விட்டேன்!"



என்ன?"

தயவுசெய்து கோபப்படாதீங்க, மானசா. நீங்கள் இப்போது சொன்ன அத்தனை விஷயங்களும் பெண் பார்க்க வரும்முன்பே யோசித்தவன், நான்! இந்த காலத்தில் ஆடம்பரமான திருமணங்கள் அவசியமற்றவை என்பது என் எண்ணம். கோவிலில் எளிமையாய் கல்யாணம். அநாதைப் பிள்ளைகளுக்கு வயிறார சாப்பாடு. இதைவிட, இவர்களைவிட மனப்பூர்வமான ஆசிர்வாதத்தை, உற்றாரும், சுற்றத்தாரும் நிச்சயம் வழங்கிவிடப் போவதில்லை.

என் அம்மாவின் ஆசை ஆடம்பரத் திருமணம், அதை உங்கள் தலையில் கட்டுவது என்ன நியாயம்? தவிர, அதன் காரணமாகத்தானே நீங்கள் மறுபடி, அதாவது திருமணத்திற்குப் பிறகும் தொடர்ந்து வேலைக்குப் போகவேண்டும் என்கிறீர்கள்? அதனால், காலையில் உங்கள் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

"சென்று!"

"உங்கள் பெற்றோரைச் சந்தித்து திருமணச் செலவுக்கான ரெண்டு லட்சத்தை கொடுத்துவிட்டு வந்தேன்."

"எ…எ…ன்…ன…து?" விக்கித்துப்போனாள், மானசா. அவமான உணர்வில் கண்கள் கலங்கின.

பதறிப்போனான், நகுலன்.

"மானசா அவசரப்பட்டு எதை எதையோ யோசிக்காதீங்க. உங்கள் மனசைப் புண்படுத்துவது என் நோக்கமல்ல. உன் அப்பா ரொம்பப் பிடிவாதமாக வாங்க மறுத்துவிட்டார். நான்தான் விடாப்பிடியாகவற்புறுத்திக்கொடுத்தேன். அவர் மேல் எனக்கும் அக்கறை இருக்கு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்." தாங்கிக்கொள்ளவோ, கைகொடுக்கவோ ஆண்பிள்ளை இல்லாத வீடு! இனி, நானும் அவர்களுக்கு ஒரு பிள்ளை மாதிரிதானே? எல்லாப்பிரச்சினையும் இந்த கல்யாணச் செலவினால்தானே? அதன் காரணமாக பொருத்தமான ஒரு அன்பான பெண்ணை இழக்க நான் விரும்பவில்லை. அந்த ரெண்டு லட்சம் என்– நம் திருமணத்திற்காகதானே கொடுத்தேன்? இதுவும் என் கடமைதானே மானசா?"

சரியாய் வார்த்தைகளை கோர்த்து வாயடைக்க... பதில்கூற முடியாமல் ஊமையாகிப்போனாள். "தன் சொந்தக் காலில் நின்று வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் எந்தப் பெண்ணுமே சுயகவுரவம் பார்க்கும் விஷயம் இது என்றும் புரிகிறது. பிளீஸ் மானசா... எதைப்பற்றியும் யோசிக்காதீங்க. திருமணத்திற்கு பிறகு நீங்கள் என்னில் பாதிதானே? எனக்கு சொந்தமான எல்லாமுமே உங்களுக்கும் சொந்தம்தானே? நான்... உங்களைப் பார்த்த நிமிடத்திலிருந்தே என்னவள் என்று நினைக்கத் தொடங்கிவிட்டேன். நம்ம கல்யாணம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நல்லபடி நடக்கணும், மானசா. இப்ப எனக்கு முப்பது வயசாகுது. இத்தனை ஆண்டுகளில் நான் எங்க. அம்மாகிட்டே எந்த விஷயத்தையும் மறைச்சதில்லே... ரெண்டு. விஷயத்தைத் தவிர!"

"........"

"உங்களை நான் ஏற்கெனவே கோவில்லப் பார்த்ததையும், இப்ப ரெண்டு லட்சம் கொடுத்ததும் தெரியாது. தெரியவும் வேண்டாம். புரிஞ்சுக்கவீங்கன்னு நினைக்கிறேன். பிள்ளையைப் பெத்த எந்த அம்மாவுமே இதையெல்லாம் ஜீரணிக்கமாட்டாங்க இல்லையா? அதனால இதை நீங்க பெரிசா எடுத்துக்க வேணாம்."

"எ...என்ன சொல்றதுன்னே புரியலே. எனக்கு கொஞ்சம் மனசுக்கு கஷ்டமா இருக்கு.

"பிளீஸ்... பிளீஸ் மானசா... என்னைத் தப்பா நினைச்சிடாதீங்க. உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு. அதனால நீங்க கிடைக்க என்ன வேணாலும் பண்ணத் தயாரா இருக்கேன்!

அவன் பேசுவதெல்லாம்வியப்பாகவும், சங்கடமாகவும் இருந்தாலும்– மழைச்சாரலில் நனையும்போது உண்டாகும் சிலிர்ப்புபோலவும் இருந்தது.

'அவன் நினைத்தால் தன் குடும்ப தகுதிக்கு ஏற்றபடி வசதியான வீட்டிலிருந்து பெண்ணெடுத்து இருக்கலாம். ஏனோ, என்னை அவனுக்குப் பிடித்திருக்கிறது. அதனால் பல படிகள் கீழிறங்கி



வந்து உதவியும் செய்கிறான். அவன் கருத்தில் உண்மையும் இருக்கலாம் அல்லவா?'

தன்னைத் தேற்றிக்கொள்ள அவள் முயன்றாலும் மனசுக்குள் ஏதோ ஒன்று உறுத்தியது.

## 7

"என்மேல் நம்பிக்கை இல்லையா மானசா? நான் எவ்வளவோ மறுத்தேன். அவர் தான்ம்மா விடாப்பிடியாகக் கொடுத்துட்டுப் போனார். இதிலே எனக்கும் உடன்பாடு இல்லேம்மா. என்னம்மாப் பண்ணட்டும்? 'நான் எப்படியாவது இந்த கல்யாணத்தை சிறப்பா பண்ணிடுவேன்'னு சொல்லியும், 'வயசான காலத்திலே கஷ்டப்படாதீங்க... என்னை வேத்து மனுஷனா நினைக்காம பணத்தை வாங்கிக்குங்க'ன்னு– விட்டேயில்லேம்மா."

"இப்ப என்ன ஆகிப்போச்சுன்னு அப்பாவை குற்றம் சொல்றே, மானு? உன் அழகுக்கும், படிப்புக்கும் அவங்க கோடிக் கோடியா கொட்டிக் கொடுக்கணும். ஏதோ பிரச்சினை தீர்ந்ததுன்னு விடுவியா?"

"அம்மா எந்த காலத்திலே இருக்கே நீ? வெளி உலகம் பத்தி என்ன தெரியும், உனக்கு? ப்ச்... சரிவிடு... என்ன சொன்னாலும் உன்னால புரிஞ்சுக்க முடியாது!" விட்டேத்தியாக சொன்னாள்.

"மானசா."

"என்னப்பா?"

"உண்மையைச் சொல்லணும். இந்த கல்யாணத்துல முக்கியமா நகுலனை பிடிச்சிருக்கா? இல்லேன்னா சொல்லும்மா...!"

"அதெல்லாம் பிரச்சினையே இல்லேப்பா. அவர் ரொம்பவே நல்லவர்... நான் எதிர்பார்த்ததைவிடவும்! ஆனா... என்னை விலை கொடுத்து வாங்கிட்ட மாதிரி உணர்றேன். அதை... அதை... எப்படி சொல்றதுன்னே தெரியலேப்பா!"

அன்புச்செழியன் மகளின் தோளைத் தொட்டு மெல்ல அழுத்தினார். அதில் அனுசரணையை உணர்ந்தாள்.

கையின் சுருக்கம் கண்ணில் அறைய- அவரின் வயோதிகம் அப்பட்டமாய் தெரிந்தது. விரல்களில் லேசான நடுக்கம்.

இந்த வயதான காலத்தில் மேலும் கடனாளியாக்கி, கஷ்டப்படுத்துவது எந்தவகையில் நியாயம்?

"அம்மாடி- இந்த குடும்பத்துக்காக நீ நிறையவே உழைச்சிட்டே! போற இடத்திலேயாவது வசதியா, மகாராணி மாதிரி வாழணும்னு ரொம்ப ஆசை இருந்துச்சு. ஆனா, நான் ஆசைப்பட்ட மாதிரியே எந்த பிக்கல் பிடுங்கலும் இல்லாம ஒரு இடம் அமைஞ்சிருக்கு. எதையும் மனசுலப் போட்டு குழப்பிக்காதே மானு! உன்னோட நல்ல மனசுக்கு அவங்கக் கொடுக்கிற சீதனம்தாம்மா இது! மத்தபடி இப்பவும் நான் உன் கல்யாண செலவை ஏத்துக்க தயாராதாம்மா இருக்கேன். அப்பா சுயநலத்துக்காக உன்னை வித்துட்டார்னு மட்டும் தப்பா நினைச்சிடாதேம்மா!"

அவரின் மனத்தாங்கல் புரிய... இளகிப்போனாள்.

"என்னப்பா நீங்க? சரி... விடுங்க! என் கல்யாண விஷத்தை திலகா, லலிதாவுக்கெல்லாம் சொல்லியாச்சா?" என்று சூழ்நிலையை கலகலப்பாக்கினாள்.

இரண்டே மாதத்தில் திருமணம் என்று முடிவானதால், இரு வீட்டாரும் கல்யாண ஏற்பாடுகளை கவனிப்பதில் மும்முரமாயினர்.

நகுலன் தினமும் மானசாவுடன் தொலைபேசியில் பேசினான்.

மானசாவின் மனதில் புத்தம் புது காதல் ரோஜா பூத்தது. அவளும் ஆசையுடன் பேசினாள். அவன் அழைப்புக்காகக் காத்திருந்தாள்.

அன்றும் பேசிக்கொண்டிருந்தபோது, "மானு... நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்கமாட்டியே..." என்றான், நகுலன்.

"என்ன... சொல்லுங்க?"



"உன்னை அவமதிக்கிற மாதிரி நினைச்சுக்கமாட்டியே..."

"நீங்க பீடிகைப் போடுறதைப் பார்த்தா பயமாயிருக்கு."

"பயப்படுறதுக்கு எதுவுமில்லே, மானு! நீ என் மனைவியாகப் போறவ! உன்னுடைய சுகம், துக்கம் மட்டுமல்ல... கடமைகள்லேயும் எனக்குப் பங்கு இருக்கு இல்லையா?"

"........?"

"உன்னை நான் வேலைக்குப் போக அனுமதிச்சிருந்தா கண்டிப்பா உன் சம்பாத்தியத்தில் பெத்தவங்களுக்கு கொடுப்பே. அதை நானும் தடுக்கமாட்டேன். இப்ப... நான் வேலைக்குப் போக அனுமதிக்காததால. அதுக்கு வழியில்லே... ஆக..."

"........?"

"மாதா மாதம் நான் ஒரு தொகையை என் மாமனார், மாமியாருக்கு தர நினைக்கிறேன்... அனுமதிப்பியா?"

"எ...என்ன?"

"அவங்களும் எனக்கு அப்பா- அம்மா மாதிரிதானே மானு? நான் தாராளமா சம்பாதிக்கிறேன். அவங்க கஷ்டத்துல பங்கெடுத்துக்கணும்னு நினைக்கிறேன்... ப்ளீஸ் மானு... அனுமதிப்பியா?"

"மன்னிச்சிடுங்க...!"

"........?"

"என்னைத் தப்பா நினைக்காதிங்க நகுல். உங்க விசாலமான மனசை நினைச்சி பெருமைப்படுறேன்; சந்தோஷப்படுறேன். கல்யாண விஷயத்துலேயே அப்பாவுக்கு நீங்க எந்த சிரமமும் தரலே. அதுவே பெரிய விஷயம். இதுக்கு மேலே எதுவும் வேணாம். அதை அப்பாவும் விரும்பமாட்டார். ப்ளீஸ் என்னை வற்புறுத்தாதீங்க."

"இப்போதைக்கு இந்த பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். ஆனால், நல்லா யோசிச்சிட்டு பதில் சொல்லு..." என்றான்.

**த**ன் இரு சக்கர வாகனத்தை பழுதுநீக்க விட்டிருந்ததா அன்று மாலை பேருந்தில் வீடு திரும்பினாள், மானசா.

ரொம்ப நாள் கழித்து பஸ் பயணம்!

என்னதான் வாழ்க்கை வசதிகள் பெருகி, கார், ஆட்டோ ஸ்கூட்டர் என்று பயணப்பட்டாலும், பஸ்சில் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து செல்லும் சுகம் தனித்துவமானது.

சலசலத்து ஓடும் ஆற்றோர பாறாங்கல் மீது அமர்ந்து மணக்கும் புளியோதரையும், மாவடு ஊறுகாயும் சாப்பிடு இன்பம்போல் அலாதியானது.

சூரியன் இன்னும் விடைபெறவில்லை. மேகங்கள் மஞ்ச வர்ணத்தை தீட்டியிருந்த அழகு, மனதை உற்சாகப்படுத்தியது எதிர்காற்று முகத்தில் மோதி... கழுத்து வியர்வை துடைத்துவிட்டுப் போனது.

நகுலன் அன்று மதியம் போனில் பேசியதெல்லா நினைவிற்கு வந்தது.

'நிச்சயம், என்னைக் கவரவேண்டும் என்பதற்கா சொல்லவில்லை. உண்மையில் என் பெற்றோருக்கு உத வேண்டும் என்ற ஆதங்கம் மிகுந்திருந்ததே அவர் பேச்சில் தெய்வம் என்னைக் கைவிடவில்லை. ஒரு நல்ல அன்பா மனிதரை என் வாழ்க்கைத்துணையாய் அனுப்பி வைத்திருக்கிற சாதுரியமற்ற என்போன்ற குணமுள்ள பெண்ணுக் இப்படியொரு கணவர் வாய்ப்பது அதிருஷ்டம் அல்லவா திருமணத்திற்கு பின் அவர் சிறிதும் மனம் கோணாதபடி நா நடந்துகொள்ள வேண்டும். முழுக்க, முழுக்க என் வாழ்க்கை அவருக்காக அர்ப்பணிக்க வேண்டும். அதுதானே உன்ன தாம்பத்தியத்தின் வெற்றி!'

திருமண நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. இடைபட் நாட்களில் அவனை வெகுவாய் நேசிக்கத் தொடங்கிவிட்டா மானசா. உறக்கம் வர மறுத்து, விடியும்வரை அவன் நினை களுடன் போராடினாள்.

திருமணம் ஆனதும் ஒரு வாரம் அவருடன் காஷ்



போகவேண்டும். பனிமழையில் வீட்டின் உயரத்திற்கு உறைந்திருக்கும் பனிப்பாறைகளை– ஒருவரோடு ஒருத்தர் அணைத்து நடந்தபடி பார்க்க வேண்டும். ஆப்பிள் மரங்களை ரசிக்கணும். போன வாரம் தினசரி பத்திரிகையில்கூட படம் போட்டிருந்தார்களே! கொத்து கொத்தாய் சிவந்து தொங்கும் ஆப்பிள்கள்... என்ன அழகு? அதில் ஒன்றைப் பறித்து– இருவரும் சுவைத்து... அப்படியே ஒருவரை ஒருவர் சுவைத்து–

அவள் நினைவில் உடம்பில் மதமதப்பு ஏறி... சோம்பலானது. ஏக்கத்தில் புரண்டு புரண்டு படுத்தாள்.

இருபதெட்டு வயது வாழ்க்கையில் இந்த உணர்வு புதியது– இனியது.

ஒரு ஞாயிறு!

திடீரென வந்து நின்றான், நகுலன். அழைப்பிதழ் கொடுப்பதற்கு அன்புச்செழியனும், துர்காவும் வெளியில் சென்றிருந்தனர்.

ஞாயிறில்தானே... நிதானமாகக் குளிக்க முடியும்?

தலையிலிருந்து கால்வரை எண்ணெய் தடவி, தலைக்கு முட்டையும், தயிரும் கலந்து பூசி, உடம்புக்கு கடலைமாவும், கஸ்தூரி மஞ்சளும் தேய்த்து குளித்து... மின்னினாள்.

தலைக்கேசம் தோகையாய் அடர்ந்திருக்க... மஞ்சளில் மினுமினுத்த தேகம் அழகைக்கூட்டி, அவளை தேவதையாய் காட்டியது.

அணிந்திருந்த இரவு உடையை சற்றே மேலே உயர்த்தி– கால்விரல்களுக்கு நக 'பாலீஷ்' இட்டுக்கொண்டிருந்தாள்.

டி.வி.யில் ஒலித்துக்கொண்டிருந்த–

**"வெந்நீரில் நீ குளிக்க...**
**விறகாகி தீ குளிப்பேன்...**
**உதிரத்தில் நானும் கலப்பேன்..."**

என்ற பாடலை தானும்கூட சேர்ந்துப் பாடிக்கொண்டிருந்தாள், மானசா.

வண்டியைவிட்டு இறங்கிய நகுலனின் விழிகளில் அவள் வளைந்து குனிந்திருந்தக் கோலம்... அவள் உடம்பில் இளமை





ரத்தம் பாய வைத்தது.

மெல்ல அடியெடுத்து அவள் முன்போய் நின்றான்.

**8**

நிமிர்ந்தவளின் முகத்தில் ஆச்சரியமும், அதிர்ச்சியுமாய்... ஓடிப்போய் ஒரு துண்டை எடுத்து இரவு உடை மீது போர்த்திக்கொண்டாள்.

அந்த செய்கை நகுலனைக் கவர்ந்தது. அதைவிட, அவளின் இயற்கையான அழகு மனதை மயக்கியது.


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.


"வா... வாங்க... உக்காருங்க... அம்மாவும், அப்பாவும் வீட்லே இல்லே..."

"தெரியும்!"

"........!"

"நானும் அழைப்பிதழ் தரத்தான் போய்க்கிட்டிருந்தேன். ஒரு ஆட்டோவுல மாமாவையும், அத்தையையும் பார்த்தேன். சரிதான்... கல்யாணப் பொண்ணு தனியாதான் இருக்கும்... துணைக்கு கொஞ்ச நேரம் இருந்துட்டு வருவோமேன்னு நேரா வந்துட்டேன்."

"அக்கம் பக்கத்துல யாராவது பார்த்துட்டா தப்பாப் பேசுவாங்க..."

"இருக்கட்டுமே... இதெல்லாம் ஒரு 'திரில்லிங்'தானே?"

"என்ன திரில்லிங்?" -மானசாவின் அழகிய விழிகள் பயத்தால் விரிந்தன.

"கல்யாணத்துக்கு முன்னால... பொண்ணு வீட்லேயே

போய்.. பொண்ணுக்கிட்டே குறைஞ்சது ஒரு உம்மாவாவது வாங்கிட்டோ... இல்லே கொடுத்துட்டோ போகலேன்னா.. நாளைக்கு என் பேரன்- பேத்திகள் எல்லாம் கிண்டல் பண்ண மாட்டாங்களா?"

"அய்யோ... என்ன இப்படியெல்லாம் பேசுறீங்க. போயிடுங்க.."

"மானு- படிச்சவதானே நீ.. இந்த காலத்தில் இதெல்லாம் சாதாரண விஷயம். கல்யாணத்துக்கு இன்னும் பதினைஞ்சு நாள்தான் இருக்கு. அதுக்கப்புறம் நாம கணவன்- மனைவி உரிமையோடு எல்லாமே நடக்கும். ஆனா, எல்லை மீறாத இந்த மாதிரியான சின்னச் சின்ன சிலுமிஷங்கள் நினைத்து பார்த்து அசைபோட அருமையான தருணங்களா அமையும்."

அவன் கண்கள் ஏக்கத்துடன் பார்த்தன.

வியர்த்துப்போனாள், மானசா.

"என்னங்க.. என்னவோ மாதிரியெல்லாம் பேசுறீங்க."

"நீ இப்ப எப்படி இருக்கே தெரியுமா? மயில் தோகையை விரிச்சிட்டு நிக்கிற மாதிரி.."

"........?"

"இந்த உடை உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு மானு.."

"நீங்க புறப்படுங்க நகுல்.. உங்க பார்வையே சரியில்லே.."

"ஏன் மானு... இந்த ஏக்கம், ஆசை எதுவுமே உனக்கு இல்லையா? இப்படி பாரு... என்னைப் பார்த்து சொல்லு.." சட்டென அவள் கையைப் பற்றினான்.

உடம்பெங்கும் மின்சார அதிர்வலைகள்.

தன் கையை உதறி விடுவித்துக்கொண்டு அறைக்குள் ஓடி தஞ்சமடைந்தாள். கதவைச் சார்த்துவதற்குள் நகுலன் தள்ளிக்கொண்டு உள்ளே வந்துவிட்டான்.

வகையாய் மாட்டிக்கொண்டதால் தவித்துப் போனாள்.

"போயிடுங்க நகுல்.. யாராவது பார்த்துட்டா அசிங்கம்."

"போயிடுறேன்.. ஆனா, ஒரே ஒரு முத்தம் கொடு."



"அய்யோ.. நான் மாட்டேன்!"

"அப்போ நான் போகமாட்டேன்."

"பிளீஸ் நகுல்" என்றவளின் மனசும் ஆசையில் பெண்டுலம் போல் ஆடியது.

"எவ்ளோ ஆசையா.. திருட்டுத்தனமா வந்திருக்கேன். ஏமாத்தறியே..?"

"இதெல்லாம் தப்பு நகுல்."

"மானு... ஒரே ஒரு முத்தம்தானே கேட்டேன். நீயாகக் கொடுத்துட்டா நல்லது.. இல்லேன்னா.."

"இல்லேன்னா?"

"நானே எடுத்துக்குவேன்.. மொத்தமா.." அவன் பார்வை ஏற- இறங்க அளவெடுத்து பெருமூச்சுவிட்டது.

"அய்யோ.. இது சரியில்லே.. போயிடுங்க."

நகுலன் நெருங்கி வந்தான். இருவருக்கும் மூன்றடி மட்டுமே இடைவெளி.

"பிளீஸ் போயிடுங்க.."

"தூக்கமே வரமாட்டேங்குது, மானு.. வா.."

"ஊகூம்.."

"பிளீஸ்டா.." அவளை இழுத்து அணைத்தான்.

மானுவால் தடுக்க நினைத்தாலும்... உள்ளிருந்த ஆசை தடுக்கவில்லை.

"இது தப்புங்க.."

"ஒரு முத்தம்தானே? ம்.." முகத்தை அவள் முகம் நோக்கி குனிந்தான்.

ஆண்மையும், கம்பீரமுமாய் நெருங்கிய அவன் முகம் அவளைத் தடுமாற வைத்தது.

கன்னம் நோக்கி உதட்டை கொண்டுப்போக..

"ஊகூம்... இங்கே!" என்று தன் உதடுகளை குவித்துக் காட்டினான்.

"நான் மாட்டேன்!"

"நான் போகவேமாட்டேன்."

"என்க்கு அங்கே கொடுக்கத் தெரியாதே!"

"அப்ப... நான் முதல்ல சொல்லித் தர்றேன். அப்புறம் நீ தருவியாம்... என்ன?" கரங்கள் இடுப்பை வளைக்க... அவள் முகம் நோக்கி குனிந்தான், நகுலன்.

மானுவின் விழிகள் சொக்கி... மூடின.

"**நா**ளைக்கு அம்பத்தூர், பாடி, பட்டாளத்துல இருக்கிற சொந்தக்காரங்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கப் போகணும். காலையில சீக்கிரமா எழுப்பிவிடு, துர்கா."

"இன்னைக்கே வெயில்ல நல்ல அலைச்சல்தான். நாளைக்கு ஒரு நாள் ஓய்வு எடுத்துட்டு நாளன்னிக்கு மறுபடி கொடுக்கப் போகலாமே?"

"ஏதுடி நேரம்? இன்னும் ரெண்டு நாள்ல உள்ளூர்ல முடிச்சிட்டு சேலத்துக்கும், விருதுநகருக்கும் போய் சம்பந்தி வீட்டாரை அழைக்கணுமே! போதாதுக்கு கல்யாண வேலை வேற... ஒரு நாள் சுணங்கினாலும் போச்சு!"

"ஏங்க... நான் ஒண்ணு சொன்னா... தப்பா..."

"வேணாம் துர்கா! நீ என்னச் சொல்லப் போறேன்னு தெரியும்... வேணாம்!"

"........?"

"நாகர்கோவில்ல இருக்கிற கிருத்திகாவையும் கூப்பிடணும்னு தானே?"

"........!" ஆச்சர்யமானாள்.

"எனக்கும் பாசமிருக்குடி- அவளும் இந்தக் குடும்பத்துக்காக உழைச்சவதானே? ஆனா, கல்யாணத்துக்கு கூப்பிடுறதெல்லாம் சரிவராது. அவ யாரையோ காதலிச்சி ஓடிப்போயிட்டாள்னுதான் ஊராருக்குத் தெரியும். அவன் வேத்து மதத்துக்காரன்னுத் தெரியாது. மானசா வாழப்போற இடம் பாரம்பரியமானவங்க. சம்பிரதாயம், சடங்குகள்ல ரொம்ப நம்பிக்கை உள்ளவங்க. அவங்களுக்குத் தெரிஞ்சா நல்லது நடக்கிறமாதிரி, கெட்டதும்



நடக்கலாமில்லையா? பாவம்... இப்பதான் அவ மனசுக்கேத்த மாதிரி ஒரு நல்ல இடம் அமைஞ்சிருக்கு. கிருத்திகாவால அது கெட்டுட வேணாம். போ... போய் நீ தூங்கு. மறக்காம மாத்திரைப் போட்டுக்க!" என்ற அன்புச்செழியன் படுத்துவிட்டார்.

அவர் கூற்றில் நியாயம் இருப்பதை உணர்ந்த துர்கா, இறுக்கிப் பிடித்த கிருத்திகாவின் நினைவுகளை அசை போட்டபடி படுத்துவிட்டாள்.

சிறிது நேரத்திற்குள்ளாகவே அன்புச்செழியனிடமிருந்து குறட்டைச் சத்தம் வந்தது.

உறக்கம் வராமல் புரண்டவளை தொலைபேசியின் அலறல் உலுக்கியது.

'இந்த இரவில் யாராக இருக்கும்?'

எடுத்து "அலோ" என்றாள்.

"அலோ... அன்பு இருக்காரா?"

"தூங்கறார்..."

"நான் மட்டுமென்ன... தூக்குல தொங்கறார்னா சொன்னேன்... எழுப்பு மேடம்!" நக்கலாய் சொன்னான்.

"அலோ... யாரு நீங்க?"

பதில் கூறாமல் சிரித்தபடி 'டொக்' என வைத்துவிட்டான்.

துர்காவிற்கு கண்கள் பொங்கின.

'பாவிங்க... ஆள் மாத்தி ஆள், தினத்துக்கும் இந்த மாதிரி 'போன்' பண்ணி மனசை உடைக்கிறானுங்களே! கண்டிப்பாய் இவர் தொழில் சம்பந்தப்பட்ட தெறிந்த புள்ளிகள்தான்! இவருடைய எளிமையானத் தோற்றமும், உடையும் மற்றவர்கள் பார்வையில் கேலி செய்யத் தூண்டுகிறதா என்ன?'

கணவனையே பார்த்தாள்.

ஒருக்களித்து கால்களை மடக்கி, கைகளை அதனுள் புதைத்து சின்னகுழந்தையைப் போல் உறங்கிக்கொண்டிருந்தார்.

'கடவுள் நல்லவரைக் கொடுத்திருக்கிறார். ஆனால், கையெழுத்து அழகாக இருந்து என்ன பயன்? தலையெழுத்து நல்லாயில்லையே!'

வீட்டின் அருகில் தண்டவாளம் இருந்தது. ரெயில்கள் கடக்கும்போது.. வீட்டில் அந்த அதிர்வு எதிரொலிக்கும்.

ஜன்னலோரக் கட்டிலில் படுத்திருந்த மானசாவிற்கு ரெயிலின் சப்தம் துல்லியமாய் கேட்டது.

கொத்தாய்... ஒரே வரிசையில் பறந்து திரும்பிய வெண்மை நிறப் பறவைகள்... பார்ப்பதற்கு போர்விமானங்களின் சாகசம் போல் இருந்தது.

எப்போதும் அவைகளை ரசிக்கும் மானசாவிற்கு இப்போது எண்ணமெல்லாம்... பகலில் நடந்த முத்தக் காட்சியின் மீதே இருந்தது.

நினைக்கும்போதே உடம்பெங்கும் ஏதோ ஊர்வது போலிருந்தது.

அப்போது...

அவளது 'செல்போன்' ரீங்கரித்தது.




ஆச்சரியப்பட்டாள், மானசா.

"நகுல்... என்ன இந்த நேரத்திலே? மணி என்னத் தெரியுமா...? நள்ளிரவு ஒண்ணரை..."

"ஒரே 'ரிங்'லே எடுத்துட்டியே... நீயும் தூங்கலியா மானு?"

"ஊகூம்... தூக்கம் வரலே..."

"எனக்கும்தான்! யானைப்பசியோடு வந்தேன். ஒரே ஒரு முத்தம் கொடுத்துட்டு விரட்டி அடிச்சிட்டே. இப்பப்பாரு... என் மொத்தத்தூக்கமும் போயிடிச்சி!"

"ரொம்பத்தான் ஆசை. ஆனாலும், நீங்க ரொம்ப மோசம், நகுல். ஒரு பொண்ணு தனியா இருக்கறப்ப வீட்டுக்குள்ளே வந்து அராஜகம் பண்ணினது தப்பு!"

"நிஜமா சொல்லு... உனக்கு ஆசை இல்லை?"



"சீ..."

"எப்படா கல்யாணம் ஆகும்னு தவிப்பா இருக்கு, மானு. உன்னை அப்படியே கடிச்சுத் திங்கணும் போலிருக்கு."

"போனை வச்சிடுவேன்!"

"ஏன்டா... பேசிப்பேசியே சூடேத்துறேனா?"

"ரொம்ப மோசமா பேசுறீங்க... நேரமாச்சு! வச்சிடவா?"

"ப்ச்... கொஞ்சநேரம் ஏதாவது பேசு."

"என்னதான் பேச?"

"ஆசையா... எதையாவது பேசு. விடியவிடிய என் தூக்கம் கெடுறமாதிரி... 'பேசுடா...'"

"ம்..." இனிமையான இரவு நேரம்."

"ம்..."

"நல்ல காற்று... ஜில்லுன்னு குளிரு..."

"அப்புறம்..."

"இந்த நேரம்... உங்களை நான் கட்டிப்பிடிச்சுக்கிட்டு சொல்லுவேன்..."

"ஏய்..." என்றான், தவிப்பான குரலில்.

"ஓடிவாங்க... திருடனைப் பிடிச்சுட்டேன்னு."

"அடிப்பாவி... நான் திருடனா?"

"ஆமாம்... என் மனசைத் திருடினது யாராம்?"

நேரம் போவதே தெரியாமல் விடிய விடிய காதல்மொழி பேசி தாம்பத்தியத்திற்கான அடித்தளத்தை ஆழமாகப் போட்டனர்.

திருமணம் நல்லபடியாக நடந்தேறியது.

அன்புச்செழியனை தன் கடைசிச் சுமையையும் இறக்கி வைத்துவிட்ட மகிழ்ச்சியைவிடவும், தன் அன்பு மகளை பிரியப் போகிறோம் என்ற எண்ணம்தான் அதிகம் வாட்டியது.

வாழ்த்து வழங்கியவர், "புகுந்த வீட்டுக்கு பெருமை சேர்க்கிற மாதிரி நடந்துக்கம்மா. ஒரு பேரனோ, பேத்தியோ உடனே பெத்துக் குடுத்துடு!"

மானசா பெற்றவர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்டு, கண்ணீர் மல்க புகுந்த வீட்டிற்குப் புறப்பட்டாள். இருபத்தியெட்டு ஆண்டுகளாக வளர்ந்து, தழைத்தோங்கி– நிழலும், காற்றும் தந்த அந்த பவளமல்லிச்செடியை வேரோடுப்பிடுங்கி தன் வீட்டிற்கு எடுத்துச்சென்றான், நகுலன்.

என்னக்காரணமோ?

திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களில் நகுலனின் தங்கை ரத்னாவின் குடும்பத்தினர் இரண்டு, மூன்று பேரைத் தவிர... வீட்டில் யாருமில்லை.

வேதநாயகியின் மனமும், குணமும் அப்படி!

யாரையும், எந்த உறவினர்களையும் ஒண்டவிடமாட்டாள்.

ரத்னாதான் ஆரத்தியெடுத்து வரவேற்றாள்.

"வாங்க அண்ணி!"

மானசாவும் சிநேகத்துடன் புன்னகைத்தாள்.

வேதநாயகிக்குதான் மனசே ஆறவில்லை.

"இந்த வீட்டுக்கு மருமகளாக வருவதென்றால் எப்படி இருந்திருக்கணும். பொண்ணு அழகா இருந்தா மட்டும் போதுமா? நீயே பாரு ரத்னா! பத்து பவுன் நகையாம்! உடம்புல தேடிப்பார்க்க வேண்டியிருக்கு. இதுவே நான் பார்த்திருந்தா... நூறு பவுன் நகையோடு ரெண்டு லாரி அளவுக்கு சீர் சாமானோடு வந்திருப்பா! கையிலே என்ன அது நாட்டாமை சொம்பு மாதிரி? அதிரசம்போட்டுக் குடுத்து அனுப்பி இருக்காங்களாமே? உன் அண்ணனோட மாமியார் வீட்லே? உட்கார்ந்து அவங்க ரெண்டு பேரையும் திங்கச்சொல்லு!"

"அம்மா... சத்தமாப் பேசாதேம்மா...காதுல விழுந்துடப் போகுது."

"விழட்டுமே! அவங்க குடும்பத்து பவிசு என்னன்னு உங்க அண்ணியும் உணரட்டுமே!"

"வேணாம்மா... அண்ணன் காதிலே விழுந்தா மனசு கஷ்டப்படும். அண்ணியைப் பார்த்தா நல்லவங்களாத் தெரியறாங்க. இனிமே அவங்க நம்ம குடும்பத்துப் பொண்ணு.



நீ கேவலமாகப் பேசினா– நம்மை நாமே பேசிக்கிற மாதிரி."

"வந்ததுமே உன்னையே கவுத்துட்டாளா, நல்ல கைகாரியா இருப்பாப் போலிருக்கே?"

"பேசிப்பேசியே என்னைக் கலைப்பாக்காதே!" என்ற ரத்னா, நகுலனின் சாடையில் இருந்தாள். வெள்ளந்தியாய் பேசினாள்.

வந்திருந்த நண்பர்களின் கேலி கிண்டலுக்கு நகுலன் வெட்கப் பட்டுக்கொண்டிருக்க... தனியே அமர்ந்திருந்த மானசாவிடம் சென்றாள், ரத்னா.

"அண்ணி."

சடாரென எழுந்து நின்றாள்.

"குடிக்க காப்பி தரவா?"

வே...வேணாம்!"

"சங்கடப்படாதீங்க... சகஜமா இருங்க. இனி இது உங்க வீடு. வாங்க... வீட்டை சுத்திக்காட்டுறேன்."

மானசா புதிய இடம், புதிய மனிதர்கள், புதிய சூழ்நிலை போன்ற சங்கடங்களால் ஆட்பட்டிருந்தாள். ரத்னா அழைத்ததும் அவளுடன் சென்றாள்.

ஒவ்வொரு அறையாய்க் காட்டினாள்.

"இது சமையலறை... விசாலமா இருக்கா?"

"ரொம்பவே...!"

"இது பூஜையறை... உங்களுக்கே தெரியுமே– நீங்க ஏத்திவச்ச விளக்கு... அழகா சுடர்விட்டு எரிஞ்சிட்டிருக்கு பாருங்க!"

ரத்னா– மெல்ல–மெல்ல அவள் மனதில் இடம்பிடித்தாள்.

"இது அம்மாவோட அறை, அது வெளிவராந்தா, இது சின்ன அறை... அநேகமா கூடிய சீக்கிரம் என் பிரசவத்திற்காக பயன்படும்.

"எத்தனையாவது மாசம்?"

"நாலு முடிஞ்சு, அஞ்சு தொடங்கிடுச்சு!"

"வாந்தி மயக்கம் இருக்கா?"

"அதெல்லாம் மூணாவது மாசத்தோடு சரியாப்போச்சு.

கர்ப்பப்பை கொஞ்சம் பலஹீனமா இருக்குன்னு டாக்டர் சொன்னார். அங்கே பெண்துணை இல்லை. நானே எல்லாப் பொறுப்பையும் பார்த்துக்கிறதால... களைச்சுப்போயிருக்கேன் அண்ணி. அதனாலேதான் அம்மாவும், அண்ணனும் அஞ்சாவது மாசத்திலேயே வளைகாப்பு நடத்தி இங்கே அழைச்சிக்கிறோம்னு சொன்னாங்க".

"ஆமாம்... அதான் சரி! நீங்க முழு ஓய்வுல இருக்கணும்."

"அதென்ன வாங்க, போங்க? உங்களைவிட ரெண்டு வயசு சின்னவதான். பேர்சொல்லியே கூப்பிடுங்க அண்ணி!"

சரின்னு சிரித்தாள்.

"இதென்ன வாசல்ல நுழைஞ்சதுமே ரெண்டு அறைகள்... அதுவும் காலியா இருக்கே?"

"உறவுக்காரங்க யாராவது வந்தா தங்குறதுக்கு. பாருங்களேன்... முக்கியமான ஒரு அறையை உங்களுக்கு நான் காட்டவேயில்லை."

"........."

"உங்க படுக்கையறைதான். ஆனா, இப்ப பார்க்க வேணாம். அலங்காரத்தை பாதியிலேயே விட்டுட்டு வந்துட்டேன். முடிச்சிட்டு வந்திடுறேன்" கண்சிமிட்டி சொல்லிவிட்டு, மாடியறை நோக்கி நடந்தாள், ரத்னா.

மானசாவுக்கு ஜிவ்வென்றிருந்தது. அன்றைய முத்தமும், சீண்டலும் அவளை வெகுவாய் உருகவும், தவிக்கவும் செய்திருந்தது.

நகுலன் இங்குமங்கும் பட்டுவேட்டி- சட்டையால் பரபரவென நடந்துகொண்டிருந்தாலும்... கொடியுடலோடு கனக்கச்சிதமாய் அமர்ந்திருந்த புது மனைவியை அடிக்கடி நோட்டம் விடாமலில்லை.

நேரம் நகர்ந்தது.

நகுலனை ரத்னாவின் கணவன் சீண்டிக்கொண்டிருக்க, மானசாவை அலங்கரித்துக்கொண்டிருந்தாள், ரத்னா.

"நல்ல நீளமான கூந்தல் அண்ணி, உங்களுக்கு. அழகா



இருக்கு" என்றபடி சரம்சரமாய் மதுரை மல்லியையும், கனகாம்பரத்தையும் சூடினாள்.

வெண்பட்டில் சிவப்புநிற முந்தானை. அதே நிறத்தில் ரவிக்கை என ஓவியம்போலிருந்தாள்.

வேதநாயகி அங்கு வந்தாள்.

சட்டென எழுந்து நின்றாள், மானசா.

"இருக்கட்டும்... இருக்கட்டும்... இந்த மரியாதை கடைசி வரை இருக்கட்டும் இந்தா ரத்னா..." என்று ஒரு 'வெல்வெட்' பெட்டியைக் கொடுத்தாள்.

"இதை உங்க அண்ணிக்குப் போட்டுவிடு. எங்கேயோ ஒட்டிக்கிட்டிருக்கு அவ நகை..." அலட்சியமாய் சொல்லிவிட்டு போய்விட்டாள்.

"அம்மா இப்படித்தான் அண்ணி! நாக்குல தேனை வச்சுட்டு கொட்டிக்கிட்டே இருப்பாங்க. ஆனா, மனசுல தேன் இருக்கும். கண்டுக்காதீங்க..."

"பெரியவங்கன்னா அப்படித்தானே? நான் இதையெல்லாம் பெரிசா எடுத்துக்கமாட்டேன்."

"நிம்மதி... இந்தாங்க..." நகைப்பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுத்தாள்.

"என்ன ரத்னா இதெல்லாம்?" கண்களை ஆச்சரியத்தில் அகண்டன.

"அம்மா நகைகள்ல பாதியை மாத்தி உங்களுக்காக வாங்கினோம். எல்லாம் அண்ணனோட தேர்வுதான்..." என்றபடி நெக்லஸ், இரட்டை சங்கிலி, ஆரம், ஆறு வளையல்கள், பவளம் முத்து பதித்த கம்மல் என்று ஒவ்வொன்றாய் கொடுத்தாள்.

"எனக்கெதுக்கு ரத்னா இதெல்லாம்?"

"இந்த வீட்டு மருமகளுக்கு அம்மா தர்ற சீதனம்... ம்... வாங்கிக்குங்க."

தடுமாற்றத்துடன் வாங்கிக்கொண்டாலும் உள்ளுக்குள் சின்ன உறுத்தல் எழத்தான் செய்தது.

'அவங்களே வாழ்த்தி இதையெல்லாம் குடுத்திருக்கலாமே!'

# 10

ஆனந்தமான இரவு முடிந்து மெல்ல விடிந்தது. விழிப்பு வந்ததும்… மானசாவை வெட்கம் ஓடிவந்து தழுவிக்கொண்டது. பக்கத்தில் உறங்கிக்கொண்டிருந்த நகுலனை ஆசைப்பொங்க பார்த்தாள். இரவு முழுக்க அவனின் குறும்புப் பார்வைகளையும், குறும்புப் பேச்சுகளையும், களியாட்டங்களையும் நினைக்கும் போது… முத்தமிட்டு சிவந்திருந்த இதழ்கள் சிரிப்பில் விரிந்தன.

கடிகாரத்தில் மணி ஐந்தை நெருங்கிக்கொண்டிருந்தது. மானசா, பொதுவாகவே ஆறு மணிக்குமேல் எழுந்துதான் பழக்கம். புகுந்தவீட்டில் அப்படி இருக்க முடியாதே! ஆகவே, திருமணத்திற்கு ஒரு மாதம் இருக்கும்போதே தினசரி ஐந்து மணிக்கு 'அலாரம்' வைத்து எழுந்து பழக்கமானாள்.

குளிப்பதற்காக சென்றவள் ஆச்சரியமாய் திரும்பிவந்து, கணவனை எழுப்பினாள்.

"என்னங்க…"

"ம்…"

"என்னங்க…"

"சொல்லு, டார்லிங்" என்றான், கண்களைத் திறக்காமலேயே! அவனின் மார்பு ரோமங்களில் இவளின் மல்லிகைப்பூக்களின் இரண்டு மயக்கம் மீளாமல் படுத்திருந்தன.

"குளியலறை கதவுல தாழ்ப்பாளே இல்லையே."

"அதனாலென்ன?" என்றவன், கண்களைத் திறந்து– அவளது கழுத்தில் கரங்களை வளைத்துப்போட்டு இழுத்தான்.

"அதனால என்னவா? தாழ்ப்போடாம எப்படி குளிக்கிறதாம்?"

"குளிக்கிறதுக்கு தண்ணியும், சோப்பும் போதாதா? கதவு எதுக்கு? நம்ம அறைக்குள்ளேயே இருக்கிற குளியலறை. வேறு யாரும் வரப்போறதில்லே. அதான்… போன வாரமே



தாழ்ப்பாளை கழற்றி எடுத்துட்டேன்!"

"கழற்றினீங்களா? ஏன்?"

"என்ன மானு… உனக்கு ஒண்ணுமே தெரியலே… புதுப் புருஷனும், பொண்டாட்டியும் தனியாகவா குளிப்பாங்க? அதுவும் நம்ம ஊரு தண்ணி கஷ்டத்துல? சிக்கனமாகவும் இருக்கணும். சிக்குன்னு இருக்கிற என் மானுவுக்கு நான் சோப்பும் போடணும். சரி… சரி… வா… குளிக்கலாம்."

ஏற்கனவே மிரண்டுபோயிருந்த மானு, அவனிடமிருந்து விலகி… "குளிக்கலாமா… என்ன சொல்றீங்க நகுல்?"

"புரியலையா?" அவளைக் கண்களால் அளந்தபடி நெருங்கினான்.

"அய்யோ… வேணாங்க…! சேர்ந்து குளிக்கிறதெல்லாம் அசிங்கம்… நான் மாட்டேன்!"

"உன் அனுமதியை நான் கேட்டேனா, மானு? என் பொண்டாட்டிக்கு சோப்பு போட யாரோட அனுமதியும் தேவையில்லை" என்றவன், அலேக்காக அவளைத் தூக்கினான்.

பயத்தில்… வேணாம்… வேணாம்" என்று கத்தியபடி அவன் கழுத்தை கட்டிப்பிடித்துக்கொண்டாள்.

அவனுக்கு இன்னும் வசதியாக… எளிதாய் போனது. குளியலறைக்குள் அம்சமாக தூக்கிச்சென்றான்.

தாமதமாக கிடைத்த மணவாழ்க்கையில் தினம் தினம் இரட்டிப்பான இன்பத்தை அவளுக்கு அள்ளிக் கொடுத்தான் நகுலன்.

மானசா அந்தக் குடும்பத்தை பொறுப்புடன் நடத்திச் சென்றாள்.

வேதநாயகிதான் மருமகளிடம் ஒட்டாமல் விலகிச் சென்றாள்.

மனைவியின் சமையலை நகுலன் ரசித்து, சுவைத்து சாப்பிட்டால், வேதா மிகக் கொஞ்சமாய் சாப்பிட்டுவிட்டு கையைக் கழுவுவாள்.

"என்னம்மா வத்தக் குழம்பு மட்டும்தான் சாப்பிட்டே! இன்னும் மோர்க் குழம்பு, ரசம் எல்லாம் இருக்கு. அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே?"

"போதும்ப்பா..."

"ஏம்மா... உடம்புக்கு ஏதும்...?"

"அதெல்லாம் இல்லேப்பா... சாப்பாடு பிடிக்கலே... அவ்வளவுதான்!" என்றாள், பளீரென்று.

மானசாவின் வெளிப்படையான பேச்சு வலிக்கவே செய்தது. இருந்தாலும் அவளும் கோபித்துக்கொள்ள முடியாதே!

மாமியாரிடம் தனிமையில் கேட்டாள்.

"உங்களுக்கு என்னப்பிடிக்குமோ சொல்லுங்க அத்தை... விதவிதமா சமைச்சிப்போடுறேன்."

"அம்மாடி மானசா... எனக்கு எல்லாமே பிடிக்கும். ஆனா, உன் சமையல் எனக்குப் பிடிக்கலே. கைப்பக்குவம் ஒண்ணு இருக்கு. அது உங்கிட்ட இல்லே போல..." சாவதானமாய் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

இந்த சமையல் விஷயம் தினந்தோறும் நடந்தது.

ஆரம்பத்தில் நகுலன்கூட நினைத்தான். 'ஒருவேளை மானசா மேலுள்ள மயக்கத்தில் அவள் சமையலை அமிர்தமாய் நினைக்கிறேனோ? உண்மையிலேயே... அம்மா சொல்லுவது போல நல்லா இல்லையோ?' என்று.

ஆனால், நாளாக, ஆக சமையலில் கலக்கினாள், மானசா.

யாராலும் குறைசொல்லமுடியாத பக்குவம், அம்மா வீம்புக்காக சொல்கிறாள் என்று புரிய– அமைதி காத்தான்.

மானசாவும் அவள் குணம் புரிந்து... பெரிதுபடுத்தாமல் மற்ற வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஆரம்பத்தில் மாமியாரின் குணம் சலிப்பைத்தந்தாலும்... அன்று திடீரென வேதநாயகிக்கு வலிப்பு வந்து துடித்தபோது– புதிதாய் அந்தக்காட்சியைப் பார்க்க நேர்ந்தபோது உறைந்துபோனாள்.

வாயில் நுரை தள்ளியது. கூடவே, நாக்கைக் கடித்துக்



கொண்டதில் ரத்தமும் பொங்கி வந்தது. அப்போது நகுலன் அலுவலகத்தில் இருந்தான்.

பெருக்க– துவைக்க அமர்த்தப்பட்டிருந்த அம்மது வயது காமாட்சியின் துணையோடு கையில் சாவியைக் கொடுத்து மட்டுப்படுத்தினாள்.

வீட்டில் யாரும் இல்லாதபோது இப்படி வலிப்பு வந்தால், அந்த சூழ்நிலையைப் பொறுத்து எத்தனையோ ஆபத்துகள் வரலாமே! அடுத்தவர் உதவி எவ்வளவு அவசியம் அத்தைக்கு?

உருகிப்போனவள் தன் தாயைவிடவும் மேலாக கவனித்துக் கொண்டாள்.

நகுலனின் பெரும் பாரம் கரைந்தது. தான் எதிர்பார்த்ததை விடவும் உயர்வாய் நடந்துகொண்ட மனைவி மீது காதல் அதிகரித்தது.

மானசா புகுந்த வீட்டுக்கு வந்த ஒரே மாதத்தில் ரத்னாவுக்கு வளைகாப்பு நடத்தி பிறந்த வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர்.

நாத்தனாரையும் தன் உடன்பிறந்தவளைப்போல் பார்த்துக் கொண்டாள்.

எந்த வேலையும் செய்யவிடுவதில்லை. அவளுக்கு என்னென்ன பிடிக்குமென கேட்டறிந்து பக்குவமாக சமைத்துப் போட்டாள். இரவில் படுக்கப்போகுமுன் குங்குமப்பூ, பாதாம், பிஸ்தா, பேரீட்சம்பழங்களைச் சிதைத்துப்போட்ட பாலை கொடுப்பது வரை பார்த்துப்பார்த்து செய்தாள்.

ரத்னாவும் அண்ணியின் உபசரப்பில் கரைந்து போனாள்.

நாட்கள் தத்தி தத்திச் சென்றன. மானசா மனசில் அந்த
ஆசை மட்டும் நீருபூத்த கனன்றுக்கொண்டே இருந்தது.

அன்றிரவு... கணவனின் மார்பில் தலைவைத்தபடி...
டி.வி.யில் "வளர்த்தகலை மறந்துவிட்டாள் கேளடா
கண்ணா!" பாடலை பார்த்துக்கொண்டிருந்தான்.

"பழைய பாட்டுன்னா ரொம்பப் பிடிக்குமா நகுல்?"

"ரொம்ப... ரொம்ப! பாட்டுவரிகளைச் சிதைக்காத இசை–

பழைய பாடல்களில்தானே இருக்கு?"

அடுத்து எம்.ஜி.ஆரின், "காஷ்மீர்... பியூட்டிபுல் காஷ்மீர்" பாடல் ஒளிபரப்பாக- மானசாவின் மனசெல்லாம் மத்தாப்பூவானது.

"ஏங்க..."

"சொல்லு...!" அவன் முதுகில் விரல்களால் கோலம் போட்டான்.

"நீங்க வெளிநாடு, வெளியூருக்கெல்லாம் போயிருக்கீங்களா?"

"என்ன இப்படிக் கேட்டுட்டே? நானொரு பயணப் பறவை தெரியுமா?"

"நிஜமாகவா?"

"மலேசியா, சிங்கப்பூர், கோலாலம்பூர் போயிருக்கேன். இங்கே கிட்டத்தட்ட எல்லா ஊருக்கும் போயிருக்கேன். பாதி நாள்பயணம் என்றால், மீதி நாள் ஆபீஸ் விஷயமா போவேன். இப்பதான் நாலு ஆண்டுகளா அம்மாவுக்கு உடம்பு முடியாமல் போனதிலிருந்து போறதில்லே."

"காஷ்மீர் போயிருக்கீங்களா?"

"ஓ! காஷ்மீர், குலுமணாலி, சிம்லா எல்லாம் போயிருக்கேன். எனக்கு ரொம்பப் பிடிச்ச சுற்றுலா சுற்றுலா இடங்கள் இதெல்லாம்!"

'எனக்குக்கூட காஷ்மீர்ன்னா ரொம்பப் பிடிக்கும்.'

"அப்படியா?"

"ரொம்ப நாள் கனவுங்க. நம்ம தேன்நிலவுக்கு காஷ்மீர் போகலாமா? "சிறு குழந்தையைப் போல் தேக்கி வைத்த ஆசையை உள்ளம் திறந்துக்கொட்டினாள்.

"தேநிலவுக்கா?" ஆச்சர்யமாய் தலை உயர்த்தி மனைவியைப் பார்த்தான்.

"ம்...!"

"அதெல்லாம் நமக்கெதுக்கு மானசா? நீயே பார்க்கிறதுக்குனு



சிம்லா ஆப்பிள் மாதிரி இருக்கே!"

"பேச்சை மாத்தாதீங்க. கேட்டதற்கு பதில்!"

"என்ன மானு! புரியாமல் பேசுறே? நாமபாட்டுக்கு தேநிலவுக்குன்னு கிளம்பிப் போயிட்டா அம்மாவையும், ரத்னாவையும் யார் பார்த்துக்கிறது?"

"........?"




மகளைப் பார்க்க அன்புச்செழியனும், துர்காவும் வந்திருந்தனர்.

"வாங்க... ஏய் மானசா... யார் வந்திருக்கான்னுப் பாரு!" என்று உள்நோக்கி குரல் கொடுத்துவிட்டு, பின்கட்டுக்குச் சென்றுவிட்டாள், வேதநாயகி.

அதோடு சரி. மரியாதைக்கு சாப்பிடுங்க என்றுகூட சொல்லாமல், பரஸ்பரம் ரெண்டு வார்த்தைக்கூட பேசாமல் அமைதியாக அவமானப்படுத்தினாள்.

இருவருக்குமே சங்கடமாக இருந்தது. என்றாலும், மகளின் புகுந்த வீடு அல்லவா? எதையும் பெரிதாக எடுத்துக்கொள்ள முடியாதே!

மானசா பெற்றவர்களைக்கண்டு அகமகிழ்ந்தாள். பழரசம் கொடுத்து மனம் குளிர்ந்தாள். விட்டகதை, தொட்டகதை எல்லாம் பேசினர். சற்று பூசினாற்போலிருந்த மானசாவைப் பார்த்ததுமே புரிந்துபோனது. அவள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள் என்று!

பெற்றவர்களை மதிய உணவு சாப்பிடச்சொல்லி வற்புறுத்தினாள். அவர்களுக்கும் பசிக்கவே செய்தது. புறப்படும் போதே- மகளின் கையால் மதிய உணவு சாப்பிட்டு, மாலை வரை அளவளாவிவிட்டு புறப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கிளம்பி வந்தனர். ஆனால், சம்பந்தியம்மாளின் பாராமுகம்

சங்கடப்படுத்தவே... சாப்பிடாமலேயே புறப்பட்டுவிட்டனர்.

கிளம்பும்போது சொல்லிக்கொண்டே போதும், வேதாவின் முகம் இருகிப்போய்தான் இருந்தது.

தாமரை இலைத்தண்ணீராய் பட்டும்படாமலும் இருந்த மனைவியின் உள்ளத்தில் ஊறின்றுக்கொண்டிருக்கும் கவலையை நகுலன் அறியாமலில்லை.

அறைக்குள்...

விலகிச்சென்றவளை இழுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்டு அவள்கழுத்தில் முகம் புதைத்தாள்.

"மானு உனக்கு என்மேல கோபம்தானே?"

"அ...அதெல்லாம் ஒண்ணுமில்லையே...! ஸ்டவ்ல பால் வச்சிட்டு வந்திருக்கேன்... பொங்கிடப்போகுது..." அவனிடமிருந்து பிய்த்துக்கொள்ள முயன்றாள்.

அவனோ, முன்னிலும் இறுக்கிப்பிடித்தான்.

"பரவாயில்லை... பொங்கட்டும். இதோ பாரு மானு. எனக்கு எல்லாமே நீதான். நீயே என்னைப் புரிஞ்சுக்கலேன்னா எப்படி? எனக்கு மட்டும் தேனிலவு போகணும்னு ஆசை இருக்காதா? எல்லாமே இருக்குடா ஆனா, நினைச்சதும் செயல் படுத்த முடியாத சூழ்நிலைகளும், கடமைகளும் ஆசைகளை கட்டிப்போட வைக்குது, மானு. உனக்கே தெரியும், அம்மாவோட உடல் நிலை பத்தி. அவங்களை விட்டுட்டு நாம எப்படிப் போகமுடியும்? தவிர, ரத்னா வேற! பிரசவத்துக்காக இங்கே வந்திருக்கிறா. அவளை நாங்க கட்டிக்கொடுத்தது வசதியான இடத்துலதான். ஆனா, அவளோட புருஷன் இதுவரைக்கும் ஒரு சினிமாவுக்குக்கூட அழைச்சிட்டுப் போனதில்லே. இப்ப நாம காஷ்மீர், சிம்லான்னு ஊர்சுத்தக் கிளம்பினா அவ மனசு பாதிக்காதா மானு? அந்த வேதனை அவ வயித்துல இருக்கிற குழந்தையைக்கூட பாதிக்கலாம் இல்லையா? கொஞ்ச நாள் போகட்டுடா... இதுபத்தி ஒரு நல்ல முடிவெடுக்கலாம். என்ன?"

"சரிங்க! என்றாள், உணர்ச்சியற்றக் குரலில்.



"அப்புறம்... முக்கியமான விஷயம்."

"........"

"இனிமேல் அஞ்சரை ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடுவேன். நாம, ரெண்டுபேரும் தினமும் ஒரு மணி நேரம் 'வாக்கிங்'போகிறோம்... சரியா? ஒரு மாசம், ரெண்டு மாசமில்லே. நாம சாகிறவரைக்கும் 'வாக்கிங் போகிறோம்."

"சரிங்க!"

"என்ன மானு... அதை கொஞ்சம் சந்தோஷமா சொல்லக் கூடாதா? இவ்ளோ சொல்கிறேன்... என்னைப் புரிஞ்சுக்க மாட்டியா?"

"தலைவலி... அவ்வளவுதான்! மத்தபடி எந்த வருத்தமும் இல்லை. அதான் நியாயமான காரணங்களைச் சொல்லிட்டீங் களே... பிறகென்ன?"

"இப்பதான் மூச்சே வந்த மாதிரி இருக்கு. நன்றிடா!" கண்களை நேருக்கு நேருக்கு பார்த்து சிரித்தவன் முன் வலுக்கட்டாயமாய் புன்னகையை உற்பத்தி செய்தாள்.

**ந**குலன் சொன்னவாக்கைக் காப்பாற்றினான். தினமும் ஐந்தரைக்கெல்லாம் வீட்டிலிருந்தான். அவன் வருவதற்குள் இரவு உணவை தயார்செய்து வைத்துவிடுவாள், மானசா. வந்ததும்... டீ குடித்துவிட்டு, ஒரு குளியலும் போட்டுவிட்டு வீட்டைவிட்டு கிளம்பிவிடுவார்கள்.

நகுலனின் வீடு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலின் பக்கத்து தெருவில் இருந்தது. அங்கிருந்து கடற்கரை மிக அருகில்தான்!

வீட்டிலிருந்து கடற்கரைவரை நடந்து, சற்று அமர்ந்துவிட்டு மறுபடி வீட்டிற்கு நடையைக்கட்ட வேண்டியது. நடக்கும்போது அன்று நடந்த சம்பவங்கள் பற்றி, வீட்டைப்பற்றி, அரசியல் பற்றி, வேளச்சேரி வீட்டிக் மாடியை விஸ்தரிப்பது பற்றி என்று பலவும் பேசிக்கொண்டே நடப்பார்கள்.

மானுவுக்கு இந்த நடைப் பயிற்சி மனதிற்கு மிக இதமாகவும்,

உடம்பிற்கு ஆரோக்கியமாகவும் இருந்தது. கடற்கரைக்கு இவர்களைப்போன்ற தம்பதியர் தங்கள் குழந்தைகளுடன் வந்து விளையாடி மகிழ்வதைப் பார்க்கும்போது- அவளுக்கு சீக்கிரமே குழந்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசை எழுந்தது.

அவளின் ஆசை வெகு சீக்கிரமே நிறைவேறியது. அவளுக்கு நாள் தள்ளிப்போயிருந்தது. இப்போதுதான் ஆஸ்பத்திரி சென்று உறுதிப்படுத்திக்கொள்ளும் அவசியமின்றி- மருந்துக் கடையில் கிடைக்கும் உபகரணத்தைக்கொண்டு வீட்டிலேயே விஷயம் அறிந்துகொள்ளலாமே!

யாருக்கும் தெரியாமல் மானசாவும் அந்த சோதனையில் ஈடுபட்டாள்.

கர்ப்பம்தான் என்று உறுதியானது.

மானசாவிற்கு தலைகால் புரியவில்லை. அவள் பிறந்து வளர்ந்து இத்தனை அற்புதமான, அதிகமான சந்தோஷத்தை அவள் அனுபவித்ததே இல்லை.

மேடிட்ட வயிற்றுடன், லேசாய் மூச்சுவாங்க, முகம் கூடுதல் வளையவந்த ரத்னாவைப் பார்த்து- தன்னையும் அதேமாதிரி கற்பனை·செய்துப்பார்த்தாள்.

'நகுல் ஆபீசிலிருந்த வரட்டும். விஷயத்தைச் சொன்னதும்... என்ன செய்வார்? அப்படியே என்னைத்தூக்கிச்சுற்றி... 'ஊகும்... இனி அப்படியெல்லாம் கண்டமேனிக்கு தூக்கக் கூடாது' என்று சொல்லிவிடவேண்டும். வேறு... ஏகப்பட்ட சந்தோஷத்தில் என்னை அப்படியே கட்டிலுக்கு... ஊகூம்... குளியலறைக்கு போய்... ஷவரைத் திறந்து நனைந்தபடி எனக்கு முத்தமிடுவதென்றால்... சாருக்கு அலாதி இன்பமாயிற்றே! ம்... அந்தக் குளியலுக்கும் தயாராக இருக்க வேண்டும்" உற்சாக மிகுதியில் பாட்டுப் பாடிக்கொண்டே வேலையில் ஈடுபட்டாள்.

"என்ன அண்ணி... இன்னைக்கு, உங்க முகத்துல ஒரு வித்தியாசம் தெரியுது. 'ஜாலி'யா பாட்டுப் பாடுறீங்க. குலோப்ஜாமூன் செய்றீங்கபோல... மணம் தூக்குது."



"சும்மாதான் ரத்னா. உனக்கும் பிடிக்கும்தானே?"

"அண்ணி என்ன செய்தாலும் எனக்குப் பிடிக்கும்."

"நன்றி ரத்னா. நீ போ. நான் எடுத்துட்டு வர்றேன்."

"இப்ப வேணாம். அண்ணன் வந்தபிறகு சாப்பிட்டுக்கிறேன்." எதையோ யூகித்தபடி, இங்கிதமாய் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

நகுலன் வந்தான்.

இனிப்பை நீட்டினாள்.

"என்ன மானு இனிப்பெல்லாம் தர்றே? நிறைய சம்பளத்தில் வேலை கிடைச்சிருக்குங்கன்னு குண்டைத் தூக்கிப் போட்டுடாதே!"

"ப்ச்... அதெல்லாம் இல்லீங்க.. குண்டைத் தூக்கிப்போட மாட்டேன். எட்டு மாசம் கழிச்சி குழந்தைப் பெத்துத் தருவேன்!"

"மானு..." திகைப்புடன் எழுந்தான்.

"ஆமாங்க உறுதியாயிடுச்சு!"

"இதை ஏன் என்கிட்டே முன்னாடியே சொல்லலே... கவனமாயிருக்க வேணாமா?"

"பு..புரியலே... என்ன சொல்றீங்க?"

"இப்ப என்ன அவசரம் மானு?"

"எ..ன்..ன..து?"

"இப்ப வேணாம்!"

"........?"

**ம**றுநாள் மாலை!

வழக்கம்போல 'வாக்கிங்'! வழக்கத்திற்கு மாறாக மானுவின் முகத்தில் சிரிப்பு தொலைந்திருந்தது.

நகுலன் மெல்ல மானுவின் கையை இறுகப் பற்றினான். அவள் விடுவித்துக்கொள்ள முயன்று தோற்றாள்.

"சாரி மானு..."

"........?"

"நேத்து நான் பளிச்சுன்னு அப்படி பேசியிருக்கக்கூடாது!"

"........?"

இதைக் கலைப்பதால் வலி உனக்கு மட்டுமல்ல... எனக்கும் தான்! ஏன்னா... நான்தானே இந்த உயிருக்கு தகப்பன்!"

"நகுலன்!" ஒரு சின்ன வெளிச்சக்கீற்று முகத்தில் பளீரிட்டது.

"ரத்னா பிரசவத்துக்காக இங்கே வந்திருக்கா. ஒரு தாய் ஸ்தானத்துல் இருந்து பார்த்துக்க வேண்டியது உன் கடமை தானே? இப்ப ரத்னாவுக்கு ஏழு மாசம் குழந்தை பிறந்து ஒன்பதாவது மாசம்தான் அவளை புகுந்த வீட்டுக்கு அனுப்புவோம். இதுக்கே ஒரு ஆண்டு தேவைப்படும். அந்த நேரத்திலே நீயும் குழந்தை பெத்துகிட்டா- ரொம்ப சிரமமாயிடும். ஒரு பொறுப்பான குடும்பத் தலைவன் ஸ்தானத்தில் இருந்து நான் எடுக்கிற முடிவு சரின்னு- நிதானமா யோசித்துப் பார்த்தா உனக்கே தெரியும். பிளீஸ்டா...புரிஞ்சுக்கோ!"

ஆச்சர்யமாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'எவ்வளவு சுயநலம் இவருக்கு?'

அவளுக்கு அடி மனசில் கசந்தது.

## 12

திடீரென வீட்டு வாசல் முன் வந்து நின்ற மகளை ஆச்சரியமாய் பார்த்து... ஆர்வமாய் அழைத்தாள், துர்கா.

"மா...னு! நீயா! வா...வா... உள்ளே வா... மாப்பிள்ளை..." என்றபடி அவரையும் வரவேற்க தலையை வெளியே நீட்டினாள்.

"நான் மட்டும்தான்ம்மா வந்தேன்...!"

"ஏம்மா... உங்களுக்குள்ளே பிரச்சினை ஏதாவது..."

"உடனே ஏம்மா தப்பா யோசிக்கிறே? எங்க வீட்டு சூழ்நிலை





பத்திதான் தெரியுமே! மாமியார்கூட எப்பவும் யாராவது இருந்தாகணும். ரத்னாவுக்கு இது நிறைமாசம். எந்த நேரத்திலும் வலி வரலாம். அதனாலதான் உங்க மருமகனை வீட்டிலேயே இருக்கச் சொல்லிட்டேன். அப்பா எங்கேம்மா? ஞாயிற்றுக் கிழமையாச்சே. வீட்ல இருப்பாருன்னு வந்தேன்."

"தூங்கறார் மானு.. வீட்டு கிரகப்பிரவேசம்னு இரவு பகல் பார்க்காம வேலை. 'பெயிண்ட்' அடிச்சார். அதான் அசந்து தூங்கறார்."

"வீட்டுக்குப் 'பெயிண்ட்'டா? என்னம்மா சொல்றே?" திடுக்கிட்டாள்.

"உனக்குத் தெரிய வேணாம்னார், உங்கப்பா. மனசு கேக்கலே மானு! முன்னே மாதிரி வரையறதுக்கு அவ்வளவா வாய்ப்புகள் வர்றதில்லே. அதனாலதான் இப்ப வீட்டுக்கெல்லாம் 'பெயிண்ட்' அடிக்கிற வேலையும் செய்யறார். நான் சொன்னதா அப்பாவுக்கு தெரிய வேணாம்."

மானுவின் உள்ளம் பிசைந்தது.

"மானு..."

"என்னம்மா?" என்றபடி 'பிளாஸ்டிக்' பைநிறைய கொண்டு வந்த பழங்களை அம்மாவிடம் தந்தாள். இதெல்லாம் எதுக்குமா.. நாங்க என்ன சின்னக் குழந்தைகளா?"

"சின்னவங்க மட்டும்தான் பழங்கள் சாப்பிடணும்னு சட்டமா என்ன? சொல்லப்போனா வயசானவங்கதான் நிறைய பழங்கள் சாப்பிடணும். ஏதோ சொல்ல வந்தியே..."

"ஆமாம்டி... விசேஷமா இருக்கியா?"

அம்மா அப்படி கேட்டதும் நெஞ்சில் முகம் புதைத்து அழவேண்டும் போலிருந்தது.

"இ-இல்லேம்மா..."

"ஏம்மா... கல்யாணமாகி ஆறேழு மாசமாயிடுச்சே... டாக்டர் கிட்டே போனியா?"

"இன்னும் ஒரு ஆண்டு கழிச்சுப் பெத்துக்கலாம்னு



சொல்லிட்டார், உங்க மாப்பிள்ளை. அதை விடும்மா. இப்பல்லாம் ஏன் என்னைப் பார்க்க வர்றதேயில்லை. கல்யாணம் பண்ணி முடிச்சதும் நான் யாரோவாகிவிட்டேனா?"

"இல்லே மானு– எங்களுக்கு மட்டும் ஆசையில்லையா? அங்கே வரவே சங்கடமா இருக்கு."

"ஏம்மா?"

"உங்க மாமியாருக்கு நாங்க வர்றதே பிடிக்கலேங்கிறதை ஒவ்வொருமுறையும் நாசூக்கா தன் நடவடிக்கையால தெரியப் படுத்திடுறாங்க."

"அவங்க அனுபவம் அவ்வளவுதம்மா. அதையெல்லாம் பெரிசு பண்ணாம அப்பாவும், நீயும் வந்து போகணும்மா."

"சரி... சரி... அப்பாவை எழுப்பிவிடுறேன். பேசிட்டிரு. நான் கடை வரை போயிட்டு வந்திடுறேன்."

"எதுக்கு– எனக்கு சமைச்சுப்போடத்தானே? வேறெதுவும் வேணாம். இருக்கிறதைப் போடு."

அவர்கள் பேச்சுக்குரல் கேட்டு அன்புச்செழியன் விழிப்பதற்கும், மானசா அறைக்குள் நுழைவதும் சரியாய் இருந்தது.

"மானு– எப்பம்மா வந்தே?" துரிதமாய் எழுந்தமர்ந்தார்.

"இப்பதாம்ப்பா... என்னப்பா இது... வெயில் தீயாய் எரியுது. உள்ளே அனல் கொட்டுது. 'பேன்' கூடப் போடாமத் தூங்குறீங்க?"

"போட மறந்துட்டேன்" என்ற அவர் பதிலில் பொய் மறைந்திருந்தது.

அது அவளுக்கும் புரிந்தது.

இயல்பான விசாரிப்புகள் முடிந்தபின் சாப்பிட அமர்ந்தவளுக்கு அடுத்த அதிர்ச்சி.

ஞாயிறு என்றால் அப்பாவுக்கும் சரி, அம்மாவுக்கும் சரி, அசைவம் இருந்தாக வேண்டும். இன்றோ வெறும் ரசமும், தேங்காய்– பொட்டுக்கடலை சேர்த்தரைத்த துவையலும்தான்.

இத்தனை சிக்கனத்துக்கும் காரணம் தேவையான வருமானம்

இன்மை! வயதாகிவிட்ட அப்பாவால் இன்னும் எவ்வளவு நாள்தான் உழைக்கமுடியும்?

'நான்கு பெண்களைப் பெற்றும்... ஏனிந்த அவல நிலை? ஆண்பிள்ளைக்கு மட்டும்தான் பெற்றவர்களை கடைசிவரை காப்பாற்றும் உரிமையும், கடமையும் இருக்கிறதா? ஏன், பெண்ணுக்குக் கிடையாதா? பெற்றுவளர்த்து ஆளாக்குபவர்கள் அவர்கள். ஆனால், பெண்ணின் உழைப்பும், பொறுப்பும் புகுந்த வீட்டுக்கு மட்டும்தானா? என்னக்கொடுமை இது? யார் போட்ட சட்டம்?' மருகி வெதும்பினாள் மானசா.

அவளால் இப்போதைக்கு அதை மட்டும்தானே செய்ய முடியும்?

**உ**லர்த்தப் போட்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டுப் படியிறங்கிவந்த மானசாவையே சிலகணங்கள் பார்த்த வேதநாயகி, அருந்திக்கொண்டிருந்த பானத்தை தன் எதிரில் இருந்த முக்காலியில் வைத்துவிட்டு, "மானசா" என்றழைத்தாள்.

"என்னங்கத்தை?"

"துணிகளை வச்சிட்டு வா... கொஞ்சம் பேசணும்."

"இதோ வந்துட்டேன்." வேகமாய் உள்ளறைக்குச் சென்ற வேகத்தில் திரும்பிவந்தாள்.

"சொல்லுங்கத்தை!"

"காப்பி குடிச்சாச்சா?"

"ம்..."

"சொல்லுறேன்னு தப்பா எடுத்துக்காதே. ரத்னாவுக்கு குழந்தைப் பிறந்து முழுசா ஒரு மாசமாகப்போகுது. ஆனா, இதுவரைக்கும் உன் வீட்டிலேருந்து யாராவது எட்டிப் பார்த்தாங்களா சொல்லு?"

"அ...அது... அம்மாவுக்கு கொஞ்சம் முடியல... ரெண்டு நாள்ல வந்து பார்க்கிறேன்னு அப்பா 'போன்' பண்ணினார் அத்தை!

"நீ நல்ல பொண்ணுதான்... மறுக்கலே... ஆனா, உன்னைப்



பெத்தவங்களுக்கு இங்கிதம் பத்தாது. பள்ளிக்கூடத்தில் டீச்சர்கிட்ட சாக்குப்போக்கு சொல்ற மாதிரி உடம்பு சரியில்லே... மனசு சரியில்லைன்னு சொன்னா என்ன அர்த்தம்? ஆமா... உனக்குக் கல்யாணமாகி ஒன்பது மாசமாயிடுச்சில்லே... இன்னுமா குளிச்சிட்டிருக்கே?"

"அ...அது வந்து..."

"மானு இன்னுமா தயாராகலே? 'வாக்கிங்' போகணுமில்லே..." என்றபடி அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டான், நகுலன்.

"இருடா, என்ன அவசரம்... நீ சொல்லு மானு!"

"நீ உள்ளே போ... குழந்தை அழறாப்போல இருக்கு..." என்று அனுப்பிவிட்டு, அம்மாவின் அருகில் அமர்ந்தான்.

"அம்மா... நான்தாம்பா கொஞ்சம் தள்ளிப்போடலாம்னு சொல்லி இருக்கேன். ரத்னாவையும், குழந்தையும் பார்த்துக்கிறதுக்கு ஆள் வேணுமே!"

"அட... ஆமாம்...! அதை நான் யோசிக்கவே இல்லே பாரேன். அப்புறம்... உன் மாமனாரும், மாமியாரும் ரத்னாவை வந்து பார்க்கவே இல்லே! அதுக்குத்தான் சொன்னாங்க. பாத்திரமறிஞ்சு பிச்சை எடு, குலமறிஞ்சு பொண்ணு எடுன்னு. என் பேச்சைக் கேட்டியா?"

"அம்மா... அவங்களுக்கு என்ன சூழலோ? வருவாங்கம்மா... தப்பாப் பேசாதே!" என்று உடனே அந்த இடத்தை காலி செய்தான்.

**ம**றுநாள் மனைவியுடன் 'வாக்கிங்' செல்லும்போது இயல்பாய் கேட்டான், நகுலன்.

"என்ன இருந்தாலும் மாமாவும், அத்தையும் பண்ணுறது தப்புதானே மானு?"

"எந்த மாமா- அத்தை?"

"எனக்கு நீ ஒருத்திதானே பொண்டாட்டி? உங்க அம்மா-அப்பாவைப் பத்திதான் கேக்கறேன்."

"என்னாச்சு?" காற்றில் அலைபாய்ந்த முடிகளை ஒதுக்கி

விட்டபடி கணவனை ஆழ்ந்து நோக்கினாள்.

"ரத்னா யாரு? என் தங்கச்சி. உன் நாத்தனார். குழந்தைப் பெத்திருக்காளே... வந்துப் பார்க்கக்கூடாதா?"

"அ...அது..."

"புரியுது மானு! அவங்க பிரச்சினை என்னன்னு எனக்குத் தெரியாதா? நீயாவது சொல்லலாம்லே? இதிலென்ன கவுரவப் பிரச்சினை? மதியம் உங்க வீட்டுக்குப்போயிட்டு வந்தேன்."

"வீட்டுக்கா?" கண்கள் விரிந்தன.

" ஆமாம். குழந்தைக்கு அரை பவுன்ல நகை, துணிமணி, பவுடர், சோப்புன்னு எல்லாம் வாங்கிக்கொடுத்துட்டு வந்தேன். நாளைக்கு குழந்தையைப் பார்க்க வரச்சொல்லி இருக்கேன்!"

அந்த வார்த்தைகளில் அவனறியாமல் வெளிப்பட்ட ஏளனமும், அவர்கள் வீட்டு வறுமையின் வெட்ட வெளிச்சமும் மானசாவை கூனிக் குறுகவைத்தன.

திரண்ட கண்ணீர் முத்துகளை கணவன் அறியாமல் துடைத்தாள்.

வீடு திரும்பியபோது... அதிர்ச்சி காத்திருந்தது.

ரத்னா குழந்தையுடன் தனியறையில் இருக்க... ஹாலில் வேதநாயகிக்கு வலிப்பு வந்து... வாயில் நுரைத்தள்ள... கூடவே நாக்கைக் கடித்துக்கொண்டதில் ரத்தமும் சேர்ந்து வர... உள்ளே நுழைந்த இருவரின் உடம்பும் திகிலில் நடுங்கின.




**வ**லிப்பு மட்டுமின்றி கூடவே நெஞ்சுவலியும் வந்திருந்ததால்... வேதநாயகி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

மானசா மாமியாரை கவனமாய் பார்த்துக்கொண்டாள். அதிகாலையில் ஆரம்பிக்கும் வேலை நள்ளிரவுவரைத் தொடரும். இரவில் வேதநாயகிக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் தங்கினாள்.



விடியலில் வீட்டிற்குக் கிளம்பி, குளித்து, சமைத்து, முடித்து, மாமியாருக்கும் எடுத்துச்செல்வாள். அதுவரை அம்மாவுடன் நகுலன் துணையிருந்தான். மறுபடி மாலை மூன்று மணிக்குப் புறப்பட்டு, சாப்பிட்டு, இரவிற்கு சமைத்து, ரத்னாவுக்கு தேவையானதை தனியே சமைத்து வைத்துவிட்டு, வேதாவுக்கு எடுத்துக்கொண்டு ஓடுவாள்.

பத்து நாட்கள் தொடர்ந்தது ஓட்டம்.

வேதநாயகி வீடு திரும்பினாள். அன்றிரவுதான் வீட்டில் உறங்கினாள், மானசா. பத்து நாட்களாய் கண்விழித்ததில்... உடம்பெங்கும் அசதி. கால்களில் வலி.

மென்மையான கரங்கள் அவள் கால்களை அமுக்கிவிட... திடுக்கிட்டு கண்விழித்தாள்.

நகுலன் மனைவியை இதமாய் பார்த்து புன்னகைத்தான்.

"தூங்கு மானு!"

"என்னங்க இது... எடுங்க கையை!"

"ஏன்டா... உனக்கு கால் வலிக்குதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்."

"அதுக்காக... நீங்க... கால் அமுக்கிவிடணுமா?"

"ஏன்... இதிலென்ன தப்பு? எங்க எல்லாருக்காகவும் உழைக்கிற உனக்கு இப்படி அமுக்கிவிடுற தகுதியும், உரிமையும் எனக்கு மட்டும்தான் இருக்கு!"

சொன்னாக் கேளுங்க... சங்கடப்படுத்தாதீங்க!"

கெஞ்சினாள்.

"பிளீஸ்... தடுக்காதே மானு. உன்னைத்தவிர வேறு யாரைக் கல்யாணம் பண்ணி இருந்தாலும்... இந்த மாதிரி முகம் சுளிக்காம, என் குடும்பத்துக்காக சேவை பண்ணி இருக்கமாட்டாங்க. நீ எனக்காக உன் விருப்பங்களை சாகடிச்சு... என்னை திருப்திப்படுத்தறே. உன்மேல உள்ள காதல் அதிகமாகிக்கிட்டே போகுது மானு..." காதல் பொங்கப் பேசியபடி அவள் பாதங்களில் முத்தமிட்டான்.

சிலிர்த்தபடி கண்மூடினாள்.

நகுலன் இதமாய் அவளை கால்களைப் பிடித்துவிட்டான்.

**யா**ர் தடுத்தாலும், இலையுதிர் காலமும், வசந்த காலமும் வராமல் இருப்பதில்லை!

நல்ல கணவன்தான். கஷ்டமில்லாத வாழ்க்கைதான் ஆனால், எல்லாவற்றையும் மீறி ஏதோ ஒரு குறை, ஏதோ ஒரு அதிருப்தி மானசாவின் மனதைக் குடைந்துகொண்டே இருந்தது.

ரத்னாவை நல்லபடி கவனித்து, குழந்தையுடன் புகுந்த வீட்டுக்கு அனுப்பியாயிற்று.

வேதநாயகி அவ்வப்போது 'வெடுக் வெடுக்' என பேசினாலும் மருமகள் மீது கரிசனம் இருக்கவே செய்தது. அவளின் பொறுமையும், அனுசரணையும் அக்கம் பக்கத்து வீட்டு மருமகள்களிடம் அவள் காணாதது.

மானசாவின் ஏக்கம் அறிந்த கடவுள், அவளுக்கு குறிஞ்சி மலரைப் பரிசாகத் தந்தார்.

ஆம்… மானசா கருவுற்றாள்.

மாமியார் வீட்டிற்கு ரத்னாபோய்விட்டதால், குழந்தை பெற்றுக்கொள்வதில் எந்தத் தடையுமில்லை. நகுலன் மனைவியை அப்படித் தாங்கினான். மனைவிக்கு பழங்களாய் வாங்கிக் குவித்தான். வேதாவுக்கும் ஏக சந்தோஷம்.

அன்புச்செழியனும், துர்காவும் மகளை அடிக்கடி வந்து பார்த்தனர். அப்போதும் வேதா முகம் கொடுத்து பேசவில்லை.

மானசா அவளாகவே சமைத்து, அவளாகவே சாப்பிடுவதால், அம்மா கைமணத்திற்கு நாக்கு ஏங்கியது.

ஆறாவது மாதம் வயிறு நன்றாக மேடிட்டிருந்தது. ஏழாவது மாதம் பிரசவத்திற்காக அம்மா வீட்டிற்கு போய்விடுவது சம்பிரதாயம்.

'போய் விதவிதமாய் அம்மாவை சமைத்துப் போடச் சொல்லி சாப்பிட வேண்டும்' இப்போதிருந்தே எதிர்பார்த்தாள்.



ஆனால், அன்றிரவே அந்த ஆசையின் மீது கைநிறைய மண்ணள்ளிப் போட்டான், நகுலன்.

ஒருக்களித்துப் படுத்திருந்த மனைவி மேல் கையைப் போட்டு அழுத்தாமல் அணைத்தான்.

"உள்ளே இருக்கிறது ஆண் குட்டியா, பெண் குட்டியா மானு?"

"அதென்ன குட்டிங்கிறீங்க? நான் என்ன ஆடா? மாடா?"

"அதான் சொன்னேனே மானு– நீ என் மான்குட்டி!"

"சாமர்த்தியம் நிறைய…"

"எதைச் சொல்றே… இதையா?" வயிற்றைத் தடவிக் கேட்டான்… விஷமமாய்!

"சீ… உங்க பேச்சின் சாமர்த்தியத்தைச் சொன்னேன்."

"அப்படிங்கிறே… அவ்ளோ நல்லாவாப் பேசுறேன்."

"இல்லேன்னா… நான் இந்த வீட்டு மருமகளா ஆகியிருக்க முடியுமா?"

"நீ எனக்குன்னு பொறந்தவடி. சரி, சொல்லு– இது ஆனா, பொண்ணா?"

"தெரியாது. ஆனா, எதுவா இருந்தாலும் நம் குழந்தை. வாரியணைச்சு கொஞ்சற நாளுக்காகக் காத்திருக்கேன். ஆமா, உங்களுக்கு என்ன குழந்தை வேணும்?"

"பொண்ணு… உன்னை மாதிரியே!"

"உங்க ஆசைப்படியே நடக்கட்டும்!"

"ஆங்…. முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேனே! பங்கஜா ஆஸ்பத்திரியில் ரொம்ப நல்லா கவனிப்பாம். சுத்தமா இருக்கு. ஏகப்பட்ட டாக்டர்கள் இருக்காங்க. உன் பிரசவம் அங்கேதான்."

"அந்த ஆஸ்பத்திரி நம்ம பகுதியில்தானே இருக்கு? என் அம்மா, அப்பா வரப்போக ரொம்ப தூரமில்லையா?"

"இருக்கட்டுமே மானு… நமக்கு எளிதுதானே?"

"புரியாமப் பேசாதீங்க. நான் அம்மா வீட்டுக்கு…"

"இருடா அவசரப்படாதே..! உன் பிரசவம் இங்கேதான்."

"எ...ன்...ன...து?"

"பிளீஸ்டா... என்னை நல்லாப் புரிஞ்சுக்க. நீ என் பக்கத்திலே இருந்தாதான் எனக்கு பலம். உன் பிரசவம் இங்கேயே நடக்கட்டும்."

"அதெப்படிங்க? ரத்னாவை நாம இங்கே..."

"அது வேற விஷயம், மானு! இது வேற. அம்மாவுக்கு ஏதாவதொண்ணு ஆனா... சொல்லக்கூட யாருமில்லை. எனக்கு நீயும் முக்கியம். அதேபோல அம்மாவும் முக்கியம்தானே? உதவிக்கு ஆளைப் போட்டுக்கலாம். நீ அம்மா வீட்டுக்குப் போயிட்டின்னா, உன்னையும், குழந்தையையும் தினமும் அங்கே வந்து பார்க்கணும். ஆபீசுக்கும் போயிட்டு, அங்கேயும் வந்துப்போனா, அம்மாவைப் பாத்துக்க நேரமே இல்லாமல் ஆயிடும், மானு. நீயே யோசிச்சுப் பாரு!"

'அவன் வரையில் யோசிச்சுப் பார்த்தால் எல்லாமே சரிதான். ஆனால், என் பக்கம்?'

மானசாவின் நெஞ்சம் கலங்கிற்று.

**மா**னசா மனதை இறுக்கிக்கொண்டாள். எந்த விஷயத்திலும் எதிர்பார்ப்புகளை வைத்துக்கொள்வதில்லை. தன் வாழ்க்கை தனக்கானதல்ல. அடுத்தவரின் விருப்பங்களை நிறைவேற்ற மட்டும்தான் என்பதை முழுமையாக உணர்ந்தாள்.

வைரம்போன்ற பெண், மனைவியாகும்போது கண்ணாடியாக மாறுகிறாள். அடுத்தவர் விருப்பங்களை எதிரொலிக்கிறாள்.

நகுலனின் ஆசைப்படியே அழகான பெண் குழந்தை பிறக்கிறது.

துர்காவிற்கு ஒருவகையில் மானசாவின் பிரசவம் புகுந்த வீட்டினர் விருப்பப்படி நடந்தது நிம்மதியைத் தந்தது. இந்தக் காலத்தில் பிரசவம் என்று போனால் பல தனியார் ஆஸ்பத்திரிகள் கொள்ளை அடிக்காதக்குறையாய் பிடுங்குவது ஊரறிந்த உண்மை. மாப்பிள்ளை வீட்டாரின் அந்தஸ்துக்கு அரசாங்க





ஆஸ்பத்திரியிலும் சேர்க்க முடியாது. குறைந்தது முப்பது, நாற்பதாயிரம் செலவாகுமே! என்ன செய்யப் போகிறார்?' என்று கணவனை நினைத்து கவலைப்பட்டாள். அனால், அவளது மன உளைச்சலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான், நகுலன்.

அன்புச்செழியன்தான் வருத்தப்பட்டார்.

"என்ன துர்கா இது? மாப்பிள்ளை இப்படிப் பண்ணுறார்? பிரசவம்னா சாதாரண விஷயமா? பிள்ளைக்கு வாய்க்கு சுவையா சமைச்சுப் போட முடியலே. சரி... அதை விடு. பிரசவத்திற்குப் பிறகு பத்தியச் சோறு ஆக்கிப் போட வேணாமா? பச்சப் பிள்ளையை வச்சிக்கிட்டு மானசாவே எல்லாத்தையும் செய்யணுமா? அந்தம்மா உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாது. சும்மாவே எப்பப் பார்த்தாலும் உடம்புக்கு முடியலே... முடியலேன்னு படுத்துக்கிடக்கும். மானசாவை நினைச்சாத்தான் கவலையா இருக்கு!"

"எல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுங்க. மாப்பிள்ளையை ஒண்ணும் மானசாவை அப்படி விட்டுடமாட்டார். அதுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணுவார். என்று ஆறுதல் படுத்தினாள்.

சிறுக சிறுக மானசாவின் பிரவத்திற்கென இருபத்தைந்தாயிரம் ரூபாய் சேமித்து வைத்திருந்தார், அன்புச்செழியன். அந்த பணத்தில் பேத்திக்கு இடுப்புக்கும், கழுத்துக்கும் நகை வாங்கிப் போட்டார்.

வேதநாயகி அதை வாங்கிப் பார்த்து முகம்சுழித்தாள்.

ஓட்டைச் சட்டியானாலும், கொழுக்கட்டை வெந்தால் சரின்னுதான் என்புள்ளை சொன்னான்னு உன் வீட்டிலே சம்பந்தம் வச்சுக்கிட்டேன். இங்கே என்னடான்னா மாவுக்கே வழியில்லை... என் புள்ளே தலையெழுத்து- யாராலே மாத்த முடியும்? "

அன்புச் செழியனும், துர்காவும் கூனி குருகி நிற்க... மானசாவின் உள்ளம் கொதித்தது.

## 14

குழந்தைக்கு 'அனுரேகா' என்று பெயர் சூட்டினார்கள். அப்படியே மானசாவை உரித்து வைத்திருந்தாள். அன்புச் செழியன் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பேத்தியைப்பார்த் ஓடிவந்து விடுவார். வேதநாயகியின் சிடுசிடு பார்வை பேச்சு, துர்காவுக்கு பேத்தி மீதான பாசத்தை அடக்கி வாசிக்க வைத்தது. அவள் அடிக்கடி வருவதில்லை.

அன்று... பேத்தியை தூக்கிக் கொஞ்சிக்கொண்டு இருந்த அப்பாவைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தாள், மானசா. தற்காலிகமாக சமையலுக்கு ஒரு பெண்மணியை அமர்த்தி இருந்தனர். அவள் கொண்டுவந்து தந்த இஞ்சித் தட்டிப்போட்ட மோரை வெயிலுக்கு இதமாய்... வேகமாய் தொண்டையில் சரித்துக்கொண்டார், அன்புச்செழியன்.

உள் அறையிலிருந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்த வேதநாயகிக்கு வயிறெறிந்தது.

"சீ... என்ன பொழப்பு இது? நாண்டுகிட்டு சாகலாம்" என்று பொத்தாம் பொதுவாய் சொன்னதோடு ஒரு பாயை எடுத்துவந்து அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் போட்டு காலை நீட்டிப்படுத்தாள்.

அதிர்ந்து போனாள், மானசா.

அவளுக்கென்று தனியறை. நல்ல காற்று வசதியுடன்... பஞ்சு மெத்தையுடன் இருக்க... இங்கே வந்து படுத்தது... அதுவும் அவள் கால் அன்புச்செழியனின் சம்மணமிட்ட கால்களை உரசியவாறு...

அன்புச்செழியன் சங்கடத்துடன் நகர்ந்து அமர்ந்தார்.

மாமியாரின் அநாகரீகச் செயல் ஆத்திரத்தை தந்தது. ஒரு ஆண், அதிலும் வயதில் மூத்தவர் எதிரே சம்பந்தி உறவில் இருக்கும் பெண்மணி பாய்விரித்துப் படுத்தது வேண்டுமென்றே அவமதிப்பது போலிருந்தது.





"சார், உங்க படத்துல நடிக்க ஒரு வாய்ப்பு கொடுங்க."

"'பேய்ப்படம்' எடுக்கிறப்போ வாங்க!"

-அனன்யா, திருச்சி.



"மாமியாரும், மருமகளும் சண்டை போடுறதை அந்த ஆளு கண்டுகொள்ளாம நிக்கிறாரே?"

"அவர் பட்டிமன்ற நடுவராம்."

-லெ.நா. சிவகுமார், சென்னை.



"கல்யாணமானா ஒரு நம்பிக்கை ஏற்படும்னு சொல்றது உண்மைதான்டா..."

"எப்படி சொல்றே...?"

"பேய், பிசாசுன்னா எனக்கு இதுவரை நம்பிக்கை கிடையாது. இப்ப நம்பிக்கை வந்துட்டுடா!"

-எஸ். மாரியப்பன், தேனி.

# இதயம் பேசுகிறது!

## மயக்கிய நாவல்!

'காதல் என்ன மாயமோ' எங்களை மயக்கிவிட்டது. கலகலப்பாகத் தொடங்கிய கதையை நெகிழ வைக்கும் வகையில் கொண்டு சென்று காதல் கவிதையாய் படைத்திருந்தார் பங்கஜா ஜனார்தன்.

**த. சத்தியநாராயணன், அயன்புரம்.**

அருமையான குடும்ப நாவல். அசத்தியிருந்தார் பங்கஜா ஜனார்தன். 'கழுதைப்புலி' குட்டிக்கதையும் அற்புதம்.

**அரியலூர் எஸ். மாரிமுத்து.**

நாவலில் அத்தை மஞ்சு, வருணின் தாயாகவே வாழ்ந்திருந்தார்.

**ஆனந்த்ராஜ், சாஸ்திரிநகர்.**

'காதல் என்ன மாயமோ' நாவல், 'பார்வை ரகசியம்', 'கழுதைப்புலி' கதைகள் ரம்மியமாக இருந்தன.

**பிச்சைமுத்து**
**சிங்கப்பெருமாள்கோவில்.**




அட! என்ன மாயமோ மந்திரமோ... 3 மணி நேர[ம்] மகுடிக்கு கட்டுண்ட நாக[ம்] போல் லயித்திருந்தேன்.

**ஆர். ராஜகோபால[ன்]**
**கொம்மடிக்கோட்[டை]**

காதல் இன்றி ஒரு அணுகூ[ட] அசையாது என்பதை அழகா[க] அருமையாக... சூப்பராக ஜோராக... விளக்கியது.

**எஸ். பாலாஜி, வடக்குமாங்[குடி]**

'ராணிமுத்து' கவிதைக[ள்] அனைத்தும் எங்களை சிந்தி[க்க] வைக்கின்றன.

**குழுமணி க[...]**

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-60000**



"பாப்பா 'உச்சா' போயிட்டா மானு- நாப்கினை மாத்து!"

"அப்பா இப்படி கொஞ்சம் வாங்க!" குழந்தையை வாங்கிக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

"என்னம்மா?"

தப்பா எடுத்துக்காதீங்க... இனிமேல் நீங்க இங்கே வராதீங்க!"

"மா-னு-"

"புரிஞ்சுக்குங்கப்பா- பிளீஸ்!"

"சரிடா!" என்றார், வலிசுமந்த கண்களுடன்- ரணமான இதயத்துடன். அருபதைச்சுமந்த தள்ளாட்டத்துடன் நடந்து சென்ற அப்பாவை விம்மலுடன் நோக்கினாள்.

அலுவலகம் புறப்பட்ட நிலையில் நகுலன், மனைவியின் பேச்சைக்கேட்டு அருகில் ஓடிவந்தான்.

"மானு என்ன இது?"

"எதுங்க?"

"மாமாவை எதுக்கு இனிமேல் இங்கே வராதீங்கன்னு சொல்லி அனுப்பினே?" வார்த்தையில் ஆதங்கம்.

"அதனால உங்களுக்கென்ன கஷ்டம்?" என்றபடி தங்கள் அறை நோக்கி நடந்தாள்.

உள்ளே வந்ததும் வியப்புடன் அவளின் தோள்களைப் பற்றினான் நகுலன்.

"என்ன மானு! ஒரு மாதிரிப் பேசறே?"

"எல்லாரும் ஒருமாதிரி நடந்துக்கும்போது- நான் பேசறது மட்டும்தான் உங்களுக்கு உறுத்துதா?"

"நான் என்னக்கேட்டேன்- நீ என்ன சொல்றே?"

"சொன்னா மட்டும் சரிப் பண்ணிடுவீங்களா?"

"——?"

"எங்கப்பா என்னங்க தப்பு பண்ணிட்டார்? அத்தைக்கு அவரைக் கண்டாலே ஆகலே! இன்னைக்கு அவர் மேல கால்

படுற மாதிரி பாயை விரிச்சுப்படுக்கிறாங்க. ஒரு ஆம்பளை உக்காந்திருக்கப்ப... இப்படி வந்து படுக்கிறது அநாகரீகமாகத் தெரியலே?"

"சத்!" பளாரென மனைவியை அறைந்தான்.

"என்ன தைரியம் உனக்கு? என்கிட்டேயே ஏங்க அம்மாவைப் பத்தி அநாகரீகமானவங்கன்னு சொல்லுவே? உடம்புக்கு முடியாதவங்க... தன் வீட்லே எங்கே வேணாலும் படுக்க உரிமையில்லையா? அதை தப்பா அர்த்தப்படுத்தி பேசுவியா? இது... இதுவே கடைசியா இருக்கட்டும்!"

சொல்லிவிட்டு வெளியேறினான்.

இரண்டு ஆண்டு தாம்பத்தியத்தில் அவனது முதல் அடி! அது அவ கன்னத்தில் விழவில்லை... இதயத்தில்!

குமுறிவந்தது அழுகை! மூடிய அறைக்குள் முகம்பொத்தி கதறினாள்.

பிறகு தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு குழந்தையுடன் வெளியில் வந்தவள்... அப்படியே திகைத்து நின்றுவிட்டாள்.

காரண[illegible] நகுலன் தாயிடம் கத்திக்கொண்டிருந்ததுதான்.

"நீ என்ன சொன்னாலும் சரி! நீ பண்ணினது தப்புதான் வீடுதேடிவந்தவங்க மனசை நோகடிச்சு அனுப்பி இருக்கே யாரு அவரு? மானசாவோட அப்பாதானே? அவர் தன் மகளையும், பேத்தியையும் பார்க்க ஆசையா வர்றாரு. நியாயமா பார்த்தா... பிரசவம் அவங்க வீட்ல நடந்திருக்கணும். உனக்கா வேண்டாம்னேன். அதனால இங்கே வர்றார். ஆனா, நீ உன் நடவடிக்கையால காயப்படுத்தறே!"

"ஆமா... பெரிய திவான் பரம்பரை. நூல் மாதிரி ஒ செயினை வாங்கிப்போட்டுட்டான். அதனால என் பேத் அந்த ஆள் சொத்தாயிடுவாளா? கங்கையிலே குளிச்சாலு காக்கை ஒருபோதும் அன்னம் ஆகாது... புரிஞ்சுக்கோ. அந்தா காத்துகூட என் பேத்திமேல படவேணாம்."

"மானசா யாரு? நீ சொல்ற காக்காக் கூட்டத்திலிருந் வந்தவதான். அவதான் பலமுறை உன் உயிரைக் காப்பாத்



இருக்கா... ஈவு இரக்கமில்லாமல் பேசாதேம்மா!"

"சும்மாவா? பரதேசிக் குடும்பத்திலேருந்து பொண்ணெடுத்து வாழ்க்கை குடுத்திருக்கே!"

"வேணாம்மா... அநாகரீகமாகப் பேசாதே! மானசா படிச்சவ. கைநிறைய சம்பாதிச்சவ. உன்னைப் பார்த்துக்கணும்ங்கிறதுக் காகவே நான் போட்ட நிபந்தனைக்கு கட்டுப்பட்டு வேலையை விட்டவ! இப்ப தெரிஞ்சுக்க... நீ பார்த்த பொண்ணுங்களை நான் ஏன் மறுத்தேன்னு? உள்ளன்போடு உன்னை உள்ளங் கையிலே வச்சு தாங்கி இருப்பாங்கன்னா நினைக்கிறே? மானசாவால மட்டும்தான் அது சாத்தியம். அவ மனசை இதுக்குமேலும் நோகடிக்காதேம்மா. உன் வயசுக்கு இதுக்கு மேலே நான் ஆலோசனை சொல்றது தப்பு!" என்றவன் அதே கோபத்துடனே அலுவலகம் புறப்பட்டுச்சென்றான்.

இதை எதிர்பார்க்காத மானசாவின் முகத்தில், எங்கிருந்தோ ங்காற்று வந்து மோதியது.

'தாயை தாரத்திடமும், தாரத்தை தாயிடமும் விட்டுக் காடுக்காத அருமையான மனிதன்? திருமண விஷயத்தில் வர் சுயநலமாய் செயல்பட்டாலும், அவர் பக்கத்து ழ்நிலையில் தவறென்ன இருக்கிறது? நான்தான் அவரைத் வறாய் புரிந்துகொண்டிருக்கிறேன். இப்பேர்ப்பட்ட ணவருக்காக எதையும் தாங்கிக்கொள்ளலாம். யார் என்ன சான்னால் என்ன? எனக்கு என் கணவர் முக்கியம். அவர் னசும், நிம்மதியும் முக்கியம்.

அலுவலகத்திலிருந்து விரைவிலேயே வீடு திரும்பிவிட்ட லனை வியப்புடன் பார்த்தாள், மானசா.

கை– கால்களைக் கழுவியவன், குப்புறக் கவிழ்ந்து சிரித்துக் ாண்டிருந்த குழந்தையை தூக்கிக்கொண்டு அறைக்குள் ன்றான்.

புரிந்துகொண்டவளாய் காப்பி போட்டு எடுத்து வந்தாள். நீட்டிய காப்பியை வாங்காமல் பத்திரமாய்"அவள் கைப்பற்றி கத்தில் அமர்த்தி... "சாரி மானு!" என்றான்.

"எதுக்கு?"

"அடிச்சதுக்கு! ஆபீசில் வேலையே ஓடல. 'நானா, நானா என் மானுவை கைநீட்டி அடிச்சேன்?'ன்னு என்னையே நம்பாம கேள்வி கேட்டுக்கிட்டேன். பச்சை உடம்புக்காரி– எவ்ளோ அரக்கத்தனமா– சேச்சே– வலிக்குதா மானு?"

"இல்லே... முதல்ல காப்பியை குடியுங்க... ஆறிடப் போகுது!"

"பரவாயில்லே விடு– என் மனசு ஆறலையே! பதிலுக்கு நீயும் என்னை அடிச்சிடு மானு!" உள்ளம் கசிந்ததில் கண்களும் கசிந்தன.

அந்த அன்பில் நெக்குருகிப் போனவள், மெல்ல அவன் தோளில் சாய்ந்துகொண்டாள்.

"என்மேல அன்பையும், அக்கறையையும் கொட்டுறவருக்கு கோபத்தைக் கொட்டவும் உரிமை இருக்கிறதா நினைக்கிறேன் அதை நான் அப்பவே மறந்துட்டேன். அனுவைப் பாருங்க உங்களையே பார்த்துட்டிருக்கா..." நொடியில் அவனை உற்சாகமான மனநிலைக்கு மாற்றினாள்.

**நா**ட்கள் வேகமாய் ஓடின.

அனுரேகாவுக்கு இப்போது இரண்டு வயது!

கண்ணும் கருத்துமாக வளர்க்கும் முருங்கைமரம் கொத்து கொத்தாய் பூக்களுடனும், காய்களுடனும் கனத்து வளைந்திருக் ஐப்பசியில் ஒரேயடியாய் மனதை ஒடித்து முறிந்துகை போய்விடுமே– அதுமாதிரி ஒரு புயல் மானசா குடும்பத்திலும் வீசியது.

நகுலனும், வேதநாயகியும் தங்கள் நெருங்கிய உறவில் வீட்டுத் திருமணம் என்று சேலம் புறப்பட்டுச் சென்றனர் குழந்தைக்கு காய்ச்சல் என்பதால் மானசா பயணத்தைத் தவிர் வேண்டியதாகிவிட்டது. திருமணத்தில் கலந்துக்கொண் ரெயிலில் திரும்பும்போதுதான் அந்த சம்பவம் நடந்தது.

அவர்கள் பயணம் செய்த ரெயிலில் தீவிரவாதிகளா



...வக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்துச் சிதற... நகுலன் ...பணம் செய்த பெட்டிக்கு சேதம் ஏதும் ஏற்படாவிட்டாலும்– ...டுத்தடுத்த பெட்டிகள் வெடித்துச் சிதறியதில் ஏதோ ஒரு ...பாருள் நகுலனின் முகத்தை பதம் பார்க்க... அவனது ...விழிகளும் சேதமடைந்தன. வேதநாயகிக்கோ– அதிர்ச்சியில், ...த்தில் செவிப்பறைகள் கிழிந்ததோடு– ஒருபக்கம் உடலும் ...யலிழந்துப்போனது.

மானசா அடைந்த துயரத்திற்கு அளவே இல்லாமல் ஆனது. ...ழுதழுது ஓய்ந்தவள், தன்னைத்தானே தேற்றி திடப்படுத்திக் ...ண்டாள்.

அனு மட்டுமல்ல... மேலும் இரண்டு வளர்ந்த குழந்தைகள்– ...வொரு அசைவிற்கும் அவனை நம்பி இருக்கின்றனர். ...ர்களின் நம்பிக்கைக்கும், மன ஆறுதலுக்கும் தன்னால் ...ப் பங்கமும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாய் ...னக்கிலேசத்தையும், அதைரியத்தையும் அடியோடு ...த்தெறிந்தாள்.




...குலனின் உலகமே இருண்டு போனது. வேதாவோ படுத்த ...கையில். மானசா பம்பரமாய் சுழல்கிறாள். நகுலனின் ...ள் இரண்டுமே பார்வை இழந்துவிட்டன. எவ்வளவோ ...ர்கள் பார்த்தாகிவிட்டது. ஏகப்பட்ட பணம் செலவழித்துப் ...வையை மீட்க முடியவில்லை.

...ஒரு டாக்டர் துளி நம்பிக்கை கொடுத்தார். நகுலனின் ...ின் வேர்கள் முழுக்கவே செயலிழந்துவிடவில்லை. ...ந்து தரும் மருந்துகளாலும், நல்ல சத்தான உணவுகளாலும் ...பெற வாய்ப்பிருக்கு. அப்போது இரவல் விழிகளைப் ...பார்வையைப் பெற நாற்பது சதவீதம் வாய்ப்பிருக்கு.

அதற்காக பல லட்சங்கள் செலவாகும். அநுவை சிகிச்சைக்கு அயல்நாட்டிற்கு செல்ல வேண்டும்.

அது போதுமே மானசாவிற்கு!

நம்பிக்கையுடன் கணவனை ஆறுதல்படுத்தினாள். அவனோ உடைந்துபோய் அழுவதை வாடிக்கையாக்கிக்கொண்டான் கம்பீரம் குலைந்து, மனதளவில் இறந்துப்போனான் அவனை ஒருநிலைக்குக் கொண்டுவர பெரிதும் பாடுபட வேண்டியிருந்தது.

சமைத்து முடித்து, குட்டியாய் ஓடியாடித் திரிந்த அநுரேகாவை சமாளித்து, மாமியாரைக் கவனித்து, கணவனைத் தாங்கி- தன்னை முழுவதுமாக தொலைத்துக்கொண்டிருந்தாள், மானசா.

அன்று...

கணவனை குளிக்க வைத்து- உடையணிவித்து் கொண்டிருந்தவளின் கால்களை கெட்டியாக பற்றிக்கொண்டான் நகுலன்.

பதறிப்போனாள்.

"ஐய்யோ... என்ன பண்ணுறீங்க... விடுங்க!"

"இல்லை... விடமாட்டேன். நா...நான் இப்படி இருக்கேன்னு என்னை விட்டுப் போயிடமாட்டியே மானு?"

அதைவிட அவளை அவன் அடித்திருக்கலாம். அவ உணர்வற்று அவனை வெறித்தாள்.

"என்ன சொன்னீங்க?"

"என் பார்வையும் போச்சு, வேலையும் போச்சு. டாக்ட சொல்லுவான்... ஆனா, எனக்கு நம்பிக்கையில்லை, மானு எனக்கு மறுபடி பார்வை வராது. எந்தப் பயனும் இல்லா புருஷன். படுத்த படுக்கையாய் மாமியார். எந்தப் பெண்ணா சகிச்சுக்க முடியும்? என்னை விட்டுப் போயிடுவியா மானு சிறுபிள்ளையைப் போல் கெஞ்சலாய் அவன் அழுத அழுe சகிக்கவில்லை.

வெடித்த கோபத்தை அடக்கிக்கொண்டாள்.



"எதுக்கு நகுல்? நான் ஏன் உங்களை விட்டுப் போகணும்? நீங்க என் உயிருங்கறது இரண்டாம்பட்சம். முதலாவது... எனக்குள்ளே இருக்கிற மனிதாபிமானம் எப்பவும் செத்துப் போகாது. தைரியமா இருங்க" என்று அமைதிப்படுத்தினாள்.

மற்றொரு நாள்!

வேதநாயகிக்கு வயிறு சரியில்லைப் போலும். அரை மணிக்கு ஒருதரம் படுக்கையிலேயே 'எல்லாம்' ஆயிற்று. அவ்வப்போது துடைத்து, உடை மாற்றி களைத்துப் போனவள் மாலை வரை சாப்பிடவே முடியாதபடி வேலைப் பளு!

உடல்வலி பின்னி எடுத்தது. நகுலனுக்கு சத்துபானம் கலக்கி குடிக்க வைத்தாள்.

பார்வையற்ற விழிகளில் நீர்!

"என்னாச்சு நகுல்?"

"நீ எப்பவும் எங்களையே பார்த்துக்கிட்டிருக்க முடியாதே! அம்மாவுக்கு வலிப்பு வந்தால் என்னால்கூட அறிய முடியாதே! அம்மா சாப்பிட்டாங்களா மானு?"

'இப்போதும்கூட அம்மாவைப் பற்றிய கவலைதான்! ான்மேல் இன்னமும் நம்பிக்கை வரவில்லை. பாவம்... தன் யலாமை... அடுத்த நிமிடத்தைப் பற்றிய பயம்... முதலில் யத்தைப் போக்கவேண்டும். எல்லாம் சரிதான். என்னைப் பற்றி... அநுவைப்பற்றி ஒரு வார்த்தை விசாரித்திருக்கலாமே! சாப்பிட்டியா மானு? என்று கேட்டிருந்தால்... என் பசியெல்லாம் மாயமாய் மறைந்திருக்குமே!'

"நகுல்..." என்றபடி அவனின் கரங்களைப்பற்றி கன்னத்தில் வைத்து அழுத்தியவள்... "அத்தையைப் பற்றிய கவலையே வேண்டாம். உங்களுக்கு மட்டுமல்ல... எனக்கும் அவங்க அம்மாதான். சாப்பிட்டு தூங்கிட்டிருக்காங்க. அடுத்த வாரத்திலிருந்து 'பிசியோ தெரபி' டாக்டர் தினமும் வருவார் அம்மாவுக்கு தினசரி பயிற்சி தரப்போறார். பழையபடி அவங்க ந்திரிச்சு நடப்பாங்க... சரியா?"

"மா...னு... நிஜமாவா சொல்றே?"

"உண்மைதான்னு அடுத்த வாரம் புரிஞ்சுக்குவீங்க. சரி... இப்ப கொஞ்சம் ஓய்வு எடுங்க. சாயந்திரம் நாம மறுபடி 'வாக்கிங்' போறோம்."

"என்னது... 'வாக்கிங்'கா? அதெப்படி மானு... நான்தான்... எனக்கு இப்ப..."

"கண்ணுக்கு கண்ணா நான் இருக்கப்ப என்ன கவலை, உங்களுக்கு? முதல்ல இந்த தேவையில்லாத பயம், சந்தேகம் எல்லாத்தையும் விடுங்க. உங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. ஒரு விபத்து நடந்தது. தற்காலிகமாக பார்வைப் போயிடுச்சு. மீட்டுத்தர நான் முயற்சிக்கமாட்டேனா? முதல்ல என்மேல நம்பிக்கை வையுங்க. தாம்பத்தியம்னா என்னங்க? சின்னக் குறைன்னதும் விட்டுட்டு ஓடிடுவாங்களா? காதலர்களைவிட, கணவன்– மனைவி உறவுதாங்க வலிமையானது. காதல்ல தோல்வின்னா ரெண்டு பேரும் பிரிஞ்சுப் போயிடுவாங்க. வேற வேற வாழ்க்கைத் துணையோடு 'செட்டில்' ஆயிடுவாங்க. ஆனா, கல்யாண பந்தம் அப்படியா? எங்கெல்லாம் இடமிருக்குமோ, அங்கெல்லாம் தன் வேர்களை பரப்பி, தன்னை வலுப்படுத்தி நிறுத்திக்கிற பனைமரம் மாதிரி– தாய்மொழியை யாராலும் மறக்கவும் முடியாது, உதாசீனம் பண்ணவும் முடியாது. நான் உங்கமேல வச்சிருக்கிற நேசமும் தாய்மொழிக்கு நிகரானதுதான்!"

கருவளையம் படர்ந்திருந்த நகுலனின் கண்கள் சிரித்தன.

"நன்றி மானு... அப்புறம்..."

"என்ன கேக்கப்போறீங்கன்னு தெரியும். அம்மாவையும், அனுவையும் விட்டுட்டு எப்படி 'வாக்கிங்' போறதுன்னுதானே? அனு நம்மளோடு வருவா. அம்மாவைப் பார்த்துக்க ஒரு பொண்ணை வேலைக்கு அமர்த்திட்டேன். சரிதானே?"

"ம்... சரிதான் மானு... இன்னொரு கேள்வி?"

"சொல்லுங்க!"

"எப்படி சமாளிக்கிறே?"

"எதை?"

"எல்லாச் செலவுகளையும்? என் சம்பளமும் இல்லே என் 'செட்டில்மெண்ட்' பணமும், சேமிப்பும், எங்க ரெண்டு பேரோட வைத்திய செலவுக்கே சரியாப் போயிருக்கும். வாடகைப் பணம் மட்டும்தான் இப்போதைய வருமானம். இன்னும் அம்மாவோட 'பிசியோதெரபி', என்னோட 'ஆபரேஷன்' எப்படி சமாளிக்கப்போறே?" என்றான், அதிகக் கவலையுடன்.

"சமாளிச்சுக்கலாம்ங்க! நீங்க எதைப்பத்தியும் கவலைப்படக் கூடாதுங்கிறது மட்டும்தான் என் வேண்டுகோள். 'ஆபரேஷன்'ல முழு வெற்றி பெறணும்னா என் வேண்டுகோள்படி நடந்துக்குங்க. மீதியை நான் பார்த்துக்கிறேன்."

"சரி... சரி" என்றான் அரைமனதாய்.

**நா**ன் பார்த்துக்கிறேன் என்று சொல்லிவிட்டாளே தவிர... மானசாவை அரித்துத் தின்ற கவலையும் அதுதான்.

'ஆபரேஷன்' மற்ற இத்யாதி செலவுகளுக்கு வேளச்சேரி வீட்டை விற்று சரிப்பண்ணிடலாம். ஆனால், இப்போதுதான் கையடக்க குழந்தையாய் பார்த்ததுப்போல் இருந்த அனு, ஓடியாடி குறும்புத்தனம் பண்ணுகிற அசுரவளர்ச்சி பயமுறுத்தியது.

அவளை பள்ளியில் சேர்க்க வேண்டும். அவளுக்கென்று சேமிக்க வேண்டும். வீட்டை விற்றுவிட்டால்... வாடகைப் பணமும் நின்றுப்போகும். சாப்பிட, வீட்டுவரி, மின்சாரக் கட்டணம், இதரச் செலவுகள் என்று பெரிய தொகை தேவைப்படுமே! என்ன செய்யலாம்? வேலைக்குப் போகலாமா? இப்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லை. பிறகெப்படி ஒருமாளிப்பது?

யோசித்தாள். தோழிகளிடம் ஆலோசனைக் கேட்டாள்.

வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்கணும்... எப்படி?

வசதியான தோழி ஒருத்தி தன் அனுபவத்தை அவளுக்கு யோசனையாய் கூறினாள்.

நகுலன் தொடாமல் தூசிப் படிந்திருந்த கம்ப்யூட்டரில் 'இன்டெர்நெட்' இணைப்பும் இருந்தது.

அதில் என்னென்ன கம்பெனிகளுக்கு என்ன மாதிரியான தேவைகள் இருக்கு என்று தேட ஆரம்பித்தான். அதில் முகவரி எடுத்து கம்பெனிகளுடன் தொடர்புகொண்டு, வேலைகளை முடித்துத் தருவதாக பேசினான். பல முயற்சிகளுக்குப்பின் ஒரு கம்பெனி சரியென சம்மதிக்க வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை வெளிச்சம் உண்டானது.

அந்த வேலையை முடித்துக் கொடுத்ததில் அவனுக்கு கிடைத்த சன்மானம் முப்பதாயிரம் ரூபாய். அந்தக் காசோலையை கண்களில் ஒற்றிக்கொண்டான்.

## 16

இருட்டில்தான் நட்சத்திரங்களின் பிரகாசம் நமக்கு தெரியும். மனிதனின் தனித்துவமும், திறமையும் சிரமமான நேரங்களில் நன்கு வெளிப்படும்.

மானசாவின் புதிய தொழிலில் முன்னேற்றம் தொடர்ந்தது. விடாமுயற்சியால் நிறைய கம்பெனிகளின் 'ஆர்டர்' கிடைத்தது.

நகுலனும் அவளுக்கு சில ஆலோசனைகள் தந்து உதவினான்.

அவளுக்கு நேரம் போதவில்லை.

ஆனாலும், கணவனுக்கும், மாமியாருக்கும் மனம் கோணாதவாறு நேரங்களை ஒதுக்கினாள்.

நகுலன் வீட்டிற்குள் நடந்து- பொருட்களை அவனாகவே கையாள்வதுபோல பயிற்சி அளிக்கிறாள். வேதாவின் கால்களில் இப்போது கொஞ்சம் அசைவு தெரிகிறது. வீட்டினருக்கு பாதகம் வராமல் இரண்டு மணியிலிருந்து, நான்கு மணி வரை 'ஆர்டர்' பிடிக்க தினசரி இருசக்கர வாகனத்தில் அலைந்து திரிந்தாள்.

அவ்வளவு பரபரப்பிலும் கணவனை 'வாக்கிங்' அழைத்து



சென்றாள். அவன் பிறந்த நாளன்று மோதிரம் வாங்கிப் பரிசளித்து, ஆனந்தப்படுத்தினாள். அனு பள்ளிக்குச் செல்ல தொடங்கி இருந்ததால்- அவளுக்கு 'டியூஷன்' எடுக்க நேரம் ஒதுக்கினாள்.

வீட்டின் முன் அறையை அலுவலகமாக மாற்றி, இரண்டு பெண்களுக்கு வேலைப் போட்டுக் கொடுத்தாள். புதிதாய் இரு கம்ப்யூட்டரும் வாங்கிப் போட்டாள். மானசா எதிர் பார்த்ததைவிடவும், நல்ல வருமானம் கிடைத்தது. ஆபரேஷனுக்கு வீட்டை விற்கவேண்டிய அவசியம் வராது என்பதை அவளின் சேமிப்பு நம்பிக்கையாய் சொன்னது.

வழக்கம்போல இரண்டு மணிக்கு கிளம்பியவளின் மேல் பொட்டென தோளில் விழுந்து சிதறியது மழைத்துளி.

குறிப்பிட்ட கம்பெனிக்கு போய் திரும்புவதற்குள் மழையில் சிக்கிக்கொள்வது நிச்சயம். என்னப் பண்ணலாம்? ...ட, அம்மா- அப்பாவைப் பார்த்து எத்தனை நாளாயிற்று? ...ளா? ஆறேழு வாரம் ஆகிவிட்டது? போய்ப் பார்த்தால் என்ன?

அன்றைய சம்பவத்திற்கு பிறகு இருவரும் வீட்டுப்பக்கம் ...ட்டிப் பார்ப்பதில்லை. கணவரையும், மாமியாரையும் ...ஸ்பத்திரியில் சேர்த்திருந்தபோது தினமும் வந்துப் ...ார்த்தார்கள். ஆனால், வீட்டுப் பக்கம் தலை வைத்தும் ...டுக்கவில்லை.

'என் வார்த்தைகள் அந்த அளவிற்கா ரணப்படுத்திவிட்டன? ...ன் எதற்காகச் சொன்னேன் என்று உங்களுக்கு புரிந்துகொள்ள ...டியவில்லையா, அப்பா?"

நடுவழியில் கடைக்குச் சென்று பழங்களை வாங்கிக் ...ாண்டவள், கனத்த உள்ளத்துடன் பிறந்த வீட்டை ...டைந்தாள்.

'பெரும்பாலும் இந்த நேரத்தில் அப்பா இருக்கமாட்டார். ...ஐ மணிக்குள் வந்துவிட்டால், அவரையும் பார்த்துவிட்டே ...ல்லலாம். அம்மா கையால் இஞ்சி, ஏலம் தட்டிப்போட்டு ...தரச் சொல்ல வேண்டும்!' பலவும் நினைத்தவாறு ...ருங்கியவள், நெற்றிச் சுருக்கினாள்.

கதவில் பூட்டுத் தொங்கியது.

'கதவுப் பூட்டி இருக்கே! அம்மா எங்கே போயிருப்பாங்க?' –ஏமாற்றத்துடன் திரும்ப எத்தனித்தவளை... அந்த குரல் ஈர்த்தது.

"யாரது? அட... மானு... நீயா?" கையில் சின்னகூடையுடன் துர்கா மகள் அருகில் வந்தாள்.

இளைத்து, களைத்துப் போயிருந்த அம்மாவை சிறு தாக்கத்துடன் பார்த்தாள்.

"எங்கேம்மா போயிட்டு வர்றே? வழக்கமா இது உன்னோட தூங்கற நேரமாச்சே?"

"முதல்ல உள்ளே வா!" என்றபடி பூட்டைத் திறந்தவளை, இன்னும் வியப்பாய்ப் பார்த்தாள்.

இரண்டு கைவிரல்களிலும் சேர்த்து ஐந்து 'பிளாஸ்திரி' போடப்பட்டிருந்தது.

"என்னம்மா... கையிலே காயம்?"

"ஒண்ணுமில்லே... வா!"

துர்காவின் கையிலிருந்த கூடையிலிருந்து, வடைகறி, சாம்பார் வகையறாக்களின் மணம் நிரடியது.

உள்ளே நுழைந்தவள் ஆடிப்போனாள்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார், அன்புச்செழியன்.

'அப்பாவை உள்ளே வைத்து பூட்டிவிட்டா சென்றாள், அம்மா?'

"உட்காரு மானு? எப்படிம்மா இருக்கே? அனு நல்லாப் படிக்கிறாளா? மாப்பிள்ளை எப்படி இருக்கார்? மாமியார் எழுந்து நடமாடுறாங்களா?"

"அதெல்லாம் இருக்கட்டும்மா? என்ன இது அபத்தம்? அப்பா உள்ளே இருக்கப்ப- எப்படி வீட்டைப் பூட்டிட்டுப் போவே?"

பேச்சு சத்தம் கேட்டு கண்விழித்த அன்புச்செழியன், "மானு... எப்பம்மா வந்தே?" என்றார், ஆச்சர்யமாய்.

"இப்பதாம்ப்பா- அம்மா உங்களை உள்ளே வச்சுப் பூட்டிட்டு போற அளவுக்கு அப்படியென்ன தூக்- அய்யோ- என்னப்பா





ஆச்சு...? உங்க கால்ல ஏன் மாவுக்கட்டு போட்டிருக்கு?" என்றாள், துணுக்குற்று.

அன்புச்செழியனின் முழங்கால்வரை மாவுக்கட்டு.

அப்பா வேலை செஞ்சிட்டிருக்கும்போது... சாரத்திலேருந்து விழுந்துட்டார். கால்லேயும், முதுகுலேயும் நல்ல அடி. எலும்பு முறிஞ்சிடுச்சு."

"எப்பம்மா ஆச்சு... ஏன் என்கிட்டே சொல்லலே?"

"நாலஞ்சு வாரம் ஆயிடுச்சு மானு? நீயே பல கஷ்டத்திலே இருக்கே? இதை வேற சொல்லி உன்னை வருத்தப்பட வைக்க விரும்பலே."

"நாலஞ்சு வாரமா பெத்தப் பொண்ணுக்கிட்டே சொல்லாம மறைக்கிற விஷயமாம்மா இது? அவ்ளோ அந்நியமாப் போயிட்டேனா, நான்? ஆபத்து, அவசரத்துக்கு பார்த்துக் கொள்ளத்தானே பக்கத்துலேயே எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தீங்க? சரி... உன் கையிலே என்ன காயம்?" என்றாள், அம்மாவிடம்.

"அது... வந்து!" சங்கடத்துடன் கணவனை ஏறிட்டாள்.

"சொல்லும்மா... என்ன காயம்?"

"நான் வேலைக்கு போயிட்டு வர்றேன்டி!"

"வேலைக்கா, நீயா? என்னம்மா சொல்றே? உனக்கென்ன வேலைத் தெரியும்?"

"யார் மனசுவச்சாலும் மடுவைக்கூட மலையாக்கலாம். உங்க அப்பா நல்லா இருந்தவரைக்கும் என்னை ரொம்ப நல்லாவே வச்சிருந்தார். சுகவாசியாகவே வாழ்ந்துப் பழகிட்டேன். அவர் காலொடிஞ்சு குழந்தையாட்டம் படுத்த படுக்கையா ஆனப்பிறகு அவரைப் பட்டினிப் போட விரும்பலே. அதான்... இங்கே 'மார்க்கெட்' பக்கத்திலே ஒரு சாப்பாட்டுக் கடை இருக்கு. காலையிலே இட்லி, பொங்கல், பூரி, வடை, குருமா போடுவாங்க. பகல்ல சாப்பாடு, இரவுல இட்லி, தோசை, பரோட்டா. அங்கே மூணு வேளையும் வெங்காயம், காய்கறி எல்லாம் நறுக்கித் தரணும். ஒரு நாளைக்கு நூறு ரூபாய். அது எங்களுக்குப்



போதுமே! தவிர, மீதியாகிற பலகாரமும் தருவாங்க!"

பிரமிப்பும், கண்ணீருமாய் அம்மாவின் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

'ஒரு பெண்ணின் யாத்திரை சமையலறையில் இருந்து வாயிற்படி வரைதான்' என்று அடிக்கடி சொல்வாள், துர்கா. இன்று, கணவனை காப்பாற்றும் பொருட்டு வாயிற்படி தாண்டி வந்துவிட்டாள்– வெளி உலகம் அறியாத அம்மா. அதுதானே... அந்த மூன்று முடிச்சில் புதைந்துகிடக்கும் ரகசியமான காதல்?

"அம்மா... அம்மா... என்ன சொல்றதுன்னே புரியலேம்மா... நீயும் உடம்பு சரியில்லாத ஆளுதானே? வேலைக்குப் போற அளவுக்கு உனக்கேது தெம்பு? பாரு... காய்கறிகளை நறுக்கி உன் கையிலே காயம்? சரி... இத்தோடு விட்ரு! நான் இப்ப நல்லா சம்பாதிக்கிறேன். மாசா மாசம் பணம் தர்றேன். அப்பாவை நல்லா பார்த்துக்க... பெரிய டாக்டர்கிட்டே காட்டலாம்."

"வேணாம் மானு!" என்றார், அவசரமாக அன்புச்செழியன்.

அவரின் மறுப்பும் கண்களில் தெரிந்த வலியும் அவளுக்கு அவரின் மனவேதனையை அப்பட்டமாய் உணர்த்தியது.

"புரியுதுப்பா... என்மேல கோபம்தானே? என்னைத் தப்பாவே புரிஞ்சிகிட்டு இருக்கீங்கதானே?"

"இல்லேம்மா... அது..."

"பேசாதீங்கப்பா... எனக்குத் தெரியும். இப்பவாவது புரிஞ்சுக்குங்க. உங்களை அவங்க வேணுமின்னே அவமானப் படுத்தினாங்க. ஒரு கிள்ளுக்கீரை மாதிரி நினைச்சு ஏளனப் படுத்தினதை என்னால தாங்கிக்க முடியலேப்பா! எங்களை எல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினவர் நீங்க. பெண்ணை பெத்தவருங்கிற ஒரே காரணத்துக்காக... ஏம்பா அவமானப்படணும்? அதுக்காகத்தான் வராதீங்கன்னு சொன்னேன்... வேற எந்த காரணத்துக்காகவும் இல்லேப்பா!"

"........?"

"நீங்க மறுபடி சீக்கிரமா நடக்கணும். சின்னதா 'ஆபீஸ்' போட இடம் பார்த்துக்கிட்டிருக்கேன். அதுக்கு முழு பொறுப்பாளரும் நீங்கதான். உங்க கோபத்தை, வருத்தத்தை

வெளியேக் காட்டாதீங்கப்பா... எனக்கு நீங்க ரெண்டு பேரும் ரொம்ப முக்கியம்!" மானசாவின் கண்ணீர்த் துளிகள் அவரின் கன்னத்தில் விழ, அன்புச்செழியன் ஆறுதலாய் மகளின் தலையைக் கோதினார்.

**அ**னுவைத் தூங்க வைத்துவிட்டு சமையல் மேடையை சுத்தம் செய்தாள். உறங்கிக்கொண்டிருந்த மாமியாரை எழுப்பி, பால் குடிக்கச் செய்தாள்.

தெருவில் மணியடித்துக்கொண்டே 'குல்பி ஐஸ்' வண்டி போனது.

மானசாவின் பிடித்த விஷயங்களில் குல்பியும் ஒன்று.

'எத்தனை ஆண்டுகளாகிவிட்டன அதை சாப்பிட்டு? ஆனால், ஏதோ எளிதாக நிறைவேறக்கூடிய ஆசைதான். ஒருதடங்கல், வேலைப்பளு என முட்டுக்கட்டைப் போட்டுவிடும். இது மட்டுமா? இது மாதிரி எத்தனை ஆசைகள்? யோசித்துப் பார்த்தால் ஒன்றுகூட நிறைவேறவில்லை என்பதுதானே உண்மை! பிறந்த வீட்டிலும் சரி, புகுந்த வீட்டிலும் சரி... என் இயக்கம் முழுக்க அடுத்தவர் கட்டுப்பாட்டில்தானே இருந்திருக்கிறது? மற்றவர்களுக்காகவே வாழ்ந்து, வாழ்ந்து என் ஆசைகள் எல்லாம் மறந்துபோனதே... மறந்துபோனதா, மரத்துப் போனதா? திருமணம் ஒரு பெண்ணுக்கு வரமாக அமைகிறதோ, இல்லை சாபமாக அமைகிறதோ, அது அவரவர் துணையைப் பொறுத்தது! ஆனால், திருமணம் எல்லாப் பெண்களுக்கும் பூவிலங்குதான்!'

"மா...னு...!" கணவனின் அழைப்பு கேட்டது.

"இதோ வர்றேங்க!"

குல்பி ஐஸ்காரனைத் தேடி நடக்க யத்தனித்த கால்கள் நகுலனின் அறை நோக்கி திரும்பின.

"என்னங்க... இன்னும் நீங்க தூங்கலே?"

ஜன்னல் அருகே சில்லிடும் காற்றை உள்வாங்கிக் கொண்டிருந்த நகுலன், குரல் கேட்டுத் திரும்பினான்.

காற்றில் அலைபாய்ந்த அவனது கைகளை பற்றிக் கொண்டாள்.



"தூக்கம் வரலே மானு?"

"ஏங்க?"

"என்னமோ தெரியலே! ரொம்ப சந்தோஷமா இருக்கு. போனதெல்லாம் திரும்பக் கிடைச்சிடும்ங்கிற நம்பிக்கை வந்திருக்கு... என் பார்வையும்கூட....."

"உங்க நம்பிக்கை என்னை ரொம்பவே உற்சாகப் படுத்துதுங்க..."

"நீ மட்டும் இல்லேன்னா நான் என்னாகி இருப்பேன், மானு?"

"நீங்க எப்பவும் நல்லா இருப்பீங்க... நேரமாகுது... தூங்குங்க..." அவளின் உடம்பு வலி பின்னியெடுத்தது. உடனே படுக்கையில் விழவேண்டும் போலிருந்தது.

"ஊகூம்... இன்னிக்கு நானும் தூங்கப் போறதில்லே... நீயும் தூங்கப் போறதில்லே!" என்றவன், அவளை இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டான்.

அவனது வேட்கைப் புரிந்தது. அலுப்பாக இருந்தாலும், விலக்க மனமில்லை. அவனோடு இணக்கமானாள்.

இந்த நேரத்து பூரிப்புகூட..... கணவனின் விருப்பத்திற்காகத் தான்!

**வீடு தரைமேல் நிற்கவில்லை. ஒரு பெண்ணின் மேல் நிற்கிறது. வீடு மட்டுமல்ல... இந்த பூமியும்தான்!**

பெண்... எல்லாவற்றையும், எல்லோரையும் மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொள்கிறாள்.

நகுலனும், மானசாவும் இப்போது... இந்த உலகத்தில் இல்லை. மஞ்சம் என்ற சொர்க்கத்தில்!

**(முடிந்தது)**

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.